# தங்கத் தாமரை

தில்லை-வில்லாளன்

பாரி நிலயம்
59, பிராட்வே :: சென்னை 1

முதற் பதிப்பு மே—1949

விலை ரூபாய் ஒன்று

முழு உரிமை பாரி நிலையத்தாருடையது

அச்சிட்டது—கன்னி பிரஸ். பி. பி. சென்னை.

## தங்கத் தாமரை........

இங்கு பல்வேறு கோணங்களிலிருந்து தியாகம் என்ற பண்பு ஆராயப்படுகிறது. தியாகம் வெவ்வேறு உருவங்களில் நின்று போட்டியிடுகிறது! அந்தப் போட்டிப் பந்தயத்தைக் காட்ட எடுத்துக்கொண்ட சிறுமுயற்சிதான் தங்கத் தாமரை.

கண்ணப்பர், தங்கப்பன், அருளப்பன் ஆகியோர் வெவ்வேறு மூலைகளில் நிற்கின்றனர். அன்னமும் தாமரைக் கண்ணியும் செல்லும் திசையும் வெவ்வேறே!

ஒரு குடும்பத்தின் படப்பிடிப்பு—அங்கு நிழலாடும் நிகழ்ச்சிகளின் பின்னல் தான் தங்கத் தாமரை. என் முயற்சி வெற்றி பெற உதவிய பாரி நிலையத்தாருக்கு நன்றி. வணக்கம்.

—தில்லை - வில்லாளன்

'தென்துருவம்', சிதம்பரம்,

# அன்புக் காணிக்கை

என் அண்ணனுக்கும், அண்ணியருக்கும் இந்த அறிவுப் படையலைப் படைக்கிறேன், ஆர்வத்தோடு, அன்போடு, உரிமையோடு!

# தங்கத் தாமரை

## இருள்

என்ன வாழ்வு? எப்பக்கம் திரும்பினும் இல்லாமை, வறுமை, போதாமை......ஆமைகளோட்டம்! இந்த உலகத்தைப் படைத்தானாமே, ஆண்டவன், அவன் வஞ்சகக் காரனா? குருடனா? செவிடனா? ஒரு பக்கம் இல்லை, இல்லை என்ற ஏக்கக் குரல், வேறொருபுறம் ஏன் இவ்வளவு, எப்படிக் காப்பது, இரண்டு இரும்புப் பெட்டிகள் போதுமா... என்ற எண்ணம்... ஆண்டவன் அப்படி அறிவு மழுங்கியவனா? சிலை செய்கிறான் சிற்பி—அதுவும் ஒரு அழகிய ஆரணங்கின் எழிலுருவம்! எப்படி அமைப்பான்? நிலவு வட்டம் போன்ற முகம், கெண்டையைப் போன்ற விழி, வில்லையொத்த புருவம்...இப்படித்தானே அமைப்பான்? ஒரு கையை நீட்டி, வயிற்றைப் பெருக்க வைத்து, தொடையைக் கொஞ்சம் ஊதவிட்டு வேடிக்கை பார்ப்பானா? மாட்டான்! அப்படிப் பார்த்தால் அவன் சிற்பியல்ல; சிறுமதி கொண்ட குறும்பன்! ஆண்டவன் உலகத்தைச் செய்த சிற்பியென்றால்...ஏன் இவ்வளவு அவலட்சணங்கள்! இந்தக் கேள்வி யாரை யார் எப்பொழுது எப்படிக் கேட்பது?

காட்டைப் படைத்து, அதில் வேங்கையையும் உண்டாக்கி, மானையும் தோற்றுவிப்பானேன்? மயிலைக் கொடுத்து, குயிலைக் கொடுத்து, பாம்பையும், தேளையும் படைத்ததேன்? ஆற்றைப் படைத்து, அதில் வெள்ளத்தை விடுவதேன்? தென்றல் தந்து, அதில் புயலைப்புக விட்டது சரிதானா?......மனிதனைப் படைத்து, மட்டாக

அறிவைக் கொடுத்து, பாவம், புண்ணியம் பார்த்து நட என்று போதிப்பது பொருந்துமா......?

சிந்தனை அலைகளை மோதவிட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார், கண்ணப்பர். நிலவொளிபட்டு வெள்ளி மயமான முற்றத்தில் ஒரு சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டே எதிரில் விளையாடிக் கொண்டிருந்த அவரது பொற்சித்திரமாம் குழந்தைத் தெய்வம் சாந்தாவைக் கண்டு களித்துக் கொண்டிருந்தார். அவரது மனைவி கண்ணம்மா அருகில் அமர்ந்திருந்தாள். அவள் கையிலே ஒரு தட்டு-அதில் குழைவாகப் பிசையப்பட்ட சோறு! அதனை எடுத்துக் குழந்தை சாந்தாவுக்கு ஊட்டிக் கொண்டிருந்தாள். அவள் மூன்று வயது முடிந்த முழு நிலவு—வானத்திலே வட்டமிட்ட பால் நிலவைப் பழிப்பதுபோல! தென்றலில் மாந்தளிர் அசைவது போல, தனது துளிர்க் கரங்களை இப்படி அப்படி யசைத்து அவளது மாம்பழக் கன்னங்களில் ஏற்பட்ட கடற்குமிழியைக் காட்டிக் கொண்டு, முத்துச் சிரிப்பை இறைத்துக் கொண்டு இங்கும் அங்கும் ஓடினாள். "யாழ் இனிது, குழல் இனிது என்பர்; தம்மக்கள் மழலைச் சொல் கேளாதவர்" என்று சொன்ன அறிஞனுக்குக் குழந்தையில்லை யென்று கதை கட்டி விட்டார்கள் இரக்கமற்ற கற்பனை அளப்பர்கள்! அவர் வாக்குக்கு எவ்வளவு வலிமை-அதிலே எவ்வளவு உண்மை! சாந்தா தனது துடிக்கும் சின்னஞ்சிறு மாதுளை வெடிப்பு உதடுகளைப் பிரித்துப் பேசினால் எவ்வளவு மகிழ்ச்சி—எத்துணை இன்பம்?

"அப்பா......"

குளறு மொழியால் குழந்தை தனது தந்தையை அழைத்தாள்! அவரது சிந்தனை உள்ளம் விழித்துக் கொண்டது! தனது குழந்தைச் செல்வத்தை வாரியணைத்துக் கொண்டார். குடும்பம் ஒரு பூந்தோட்டம்

என்று சொன்னல், அதில் அடிக்கும் தென்றல் குழந்தை யென்று யாரோ கூறுவது போலத் தெரிந்தது!

வகுப்பறையில் புத்தகத்தை விரித்தபடியே சொற் பொழி வாற்றினர். அன்று 'காரணம்' என்பதைப் பற் றிய விளக்கவுரை......!

எந்தச் செயல் செய்தாலும் அதற்கேற்ற காரணம் உண்டா என்று ஆராய வேண்டும். காரணம் இன்றிக் காரி யம் நிகழ்வதில்லை. காரணந் தெரியாமல் காரியம் செய் கிறோம் என்ருல், நாம் பித்தர்கள் என்றுதான் உலகத் தாரால் ஏளனம் செய்யப்படுவோம்.........

ஒரு மாணவன் குறுக்கில் எழுந்தான்.

"ஒரு சந்தேகம்......"

"என்ன?"

"கிரகணத்தன்று தருப்பை ஏன்?"

ஒரே சிரிப்பு......

இன்னொரு மூலையி லிருந்து......

"பஞ்சாங்கம் தேவைதான?"

"அட்லாசுக்கும் அதற்கும் என்ன பொருத்தம்?"

ஒரே நேரத்தில் பல இடங்களி லிருந்து பல விதமான கேள்விகள்—வினு அம்புகள்!

"தீபாவளி என்ருல் என்ன?"

"அறுபது ஆண்டுகளுக்குப் பெயரிட்டது யார்?"

"சோதிடம் வேண்டுமா?"

இப்படி ஆயிரமாயிரம் கேள்விகள்! கண்ணப்பர், சிரித்தார்—சிரிக்காமல் என்ன செய்வார்? சிந்தனை அப் படிப் பெருகி விட்டது.

பிறகு......'கண, கண' வென மணியொலித்தது. கல்லூரியின் அன்றைய வேலைக்குச் 'சாவு மணி' அடித்து விட்டது. மாடிப் படிகளில் 'கிருக், முருக்' கென்று முரட்டு 'பூட்ஸ்களும்', 'தப்திப்' பென்று பஞ்சாப் 'சேன்டில்களும்' 'படபட', 'தடதட' வெனப் பலவகைப் 'பரதாழ்வார்களும்' கலகம் செய்தன! அதுவரை பூட்டி வைத்திருந்த அவர்களின் 'வாய் ரேடியோ' வைத் திருப்பி விட்டனர். பாட்டு, பேச்சு, நாடகம், இசைத்தட்டு, படப்பாட்டு, திரைகானம், குரல் வகை, கிராம நிகழ்ச்சி, பெண்கள் பகுதி, நிலைய வாத்ய கோஷ்டி இந்த வகைப்பிரிவுகள் அத்தனையும் ஒரே நேரத்தில் நடந்தால் எப்படி 'கந்தர கோலமாக' இருக்குமோ, அப்படிப் பார்க்கப் பரிதாபமாய், கேட்கக் 'கண்றாவி'யாக இருந்தது! இவையத்தனையும் மாணவர்களின் 'திருவிளையாடல்கள்'! கொஞ்சம் 'சக்தி புரம்'—மாணவிகள் பக்கந்தான்!—திரும்பினால் அவர்கள் கரங்களிலே ஏடுகள் தாங்கி, எறும்புச் சாரல் போல வரிசையாக நடக்கும் 'அஜந்தா' வடிவங்களைப் போல, மாணவரிடையே புகுந்து இறங்கினர். . அவர்களை வருணித்துப் பாட்டியற்ற வேண்டுமானால் ஒரு 'கம்பன்' வேண்டும்! சித்திரந் தீட்டவேண்டுமானால் 'இரவி வர்மா' வேண்டும்!

ஓரக் கண் பார்வை, இருபொருளுணர்த்தும் பேச்சுச் 'செப்படி வித்தை', உய்த்துணர வைக்கும் 'மகேந்திர ஜாலம்'...இப்படிப் பல வேடிக்கைகள் மாணவரிடையே, பெண்கள் புகுந்து போகிற நேரத்தில்! அவர்கள் இவைகளைக் கேட்டு நடுங்கி யொடுங்கியா போய்விடுகிறார்கள்? சிரிக்கிறார்கள! அந்தச் சிரிப்பில் சிந்தனையும் இருக்கிறது; சீற்றமும் இருக்கிறது.

"ஓனான்" என்று கூவினான், ஒருவன். ஒருகூட்டமே சிரித்து விட்டது.

சிங்காரி ஒருத்தி திரும்பினாள். அவள் முகம் சீறிப் படமாடும் நாகத்தினுடையது போன்றிருந்தது! ஏன்?

அவள் பல் நீண்ட பாவை. பல்லி யென்று சொன்னல் நேரடி நடவடிக்கையாகி விடுமென்று ‘ஓணன்’ என்று பல்லியினத்தைச் சேர்ந்த வேருெரு ஊர்ந்து செல்லும் உயிரினத்தின், துணை கொண்டு ‘கொரில்லாப் போராட்டம்’ நடத்தினன். அவள் சீருமல் என்ன செய்வாள்?

“கிளியோ பாட்ரா” என்ருெரு கூட்டம் கூவுகிறது.

அங்கே ஒரு அழகி போய்க் கொண்டிருந்தாள். அவள் கல்லூரியிலேயே வனப்பு ராணி! ஆகவே அப் பெயரால் அவளைக் குறிப்பிடுவார்கள். அவளது பெருமிதப் பார்வையும், பவள இதழுடைப்பும் அந்தப் பெயரை ஆமோதிக்கின்றன!

அந்த வழியாக ஒரு ‘நோஞ்சல்’ பேர்வழி போனர். மாணவர்கள் ஒதுங்கி வழி விட்டனர். அவர் இரண்டடி எடுத்து வைப்பதற்குள் “வெண்டைக்காய்” என்று கூவுகிருர்கள். மாணவர்கள் அனைவரும் கூடிய ‘கான்வெகேஷனில்’ அந்த ஆசிரியருக்கு அளித்த பட்டம் அது, பாவம், அவர் மனம் என்ன பாடு படும்? மகிழ்ச்சியால் விம்மிப் பூரித்து வெடித்து விடும்போலும்......! வெண்டைக்காய் மட்டுமா?......கொத்தவரங்காய், போட்மெயில், தத்து பித்து, டமாரம், ஷைனிங் பிளாக்......அம்மம்ம. இவை மாதிரியாக! மாணவர்கள் தாங்கள் பட்டம் பற்று ஊர் போய்ச் சேர்வதற்குள் எத்தனை பேருக்கு எத்தனை வகைப் பட்டங்கள் அளிக்கிருர்கள்.

ஆனல், அதோ போகிருரே, ஒரு ஒற்றை நாடி அவரைக் கண்டாலே எல்லோருக்கும் பயம்—பயங்கூட சரியான வார்த்தை யில்லை, மரியாதை, மதிப்பு! ஏனே அவரிடம் ஆத்தகைய மதிப்பு வளர்ந்தது? கல்லூரி ‘பிரின்சிபாலை’க் கண்டால் கூட அடங்க மாட்டார்கள். ஆசிரியர் கண்ணப்பர் என்ருல் அவர்களுக்கு ‘அரட்டி’ தான்! அதுவும் கொஞ்சம் மறைந்து கொண்டுதான்

போவார்கள். அவர் அப்படியொன்றும் 'பீமசேன' வடிவினரல்லர். சாதாரண மனிதன், அதுவும் கொத்தவரங்காய் வத்தல் மாதிரி மெலிந்த உடல் படைத்தவர். அவர் பார்வை பயங்கரமாக இருக்குமோ என்ருல், அதுவும் இல்லை. பார்வையில பயங்கரம் இல்லை. கூர்மை இருந்தது! ஆமாம், தீவிரமான திருஷ்டி, அவருக்கு!

இப்படி இந்த அன்ருட நிகழ்ச்சிகள் கண்ணப்பரின் சிந்தனையில் வட்டமிட்ட நேரத்தில்தான் தன் தம்பி தங்கப்பன் நினைவு வந்தது. குழந்தை சாந்தாவின் விளையாடல்களில் மனமழிந்து கிடந்ததால் மணி எட்டடித்ததும் தெரியவில்லை.

"அம்மா, அப்பாவுக்கு மம்மு கொடு"

"கொடுக்கிறேனடி கண்ணு"

"தங்கப்பனை எங்கே காணேம்!"

கண்ணப்பரின் முகம் வாடி விட்டது. கண்ணம்மா வாட்டத்தை விரட்ட வழி தெரியமால் விழித்தாள்.

"மணி எட்டுத்தானே, எங்கேயாவது கூட்டம், அது இது என்று போயிருந்தால் ஒன்பதற்குள் வந்து விடலாமே!"

தட, தட.........

கதவு தட்டப்படும் ஓசை-வழக்கமாகத் தங்கப்பன் தட்டும் ஓசையல்ல-அவசரம், ஆத்திரம் எல்லாம் கலந்திருந்தன. இல்லாவிட்டால் அத்தனை முறைகள் அவ்வளவு சத்ததுடன் தட்டுவானேன்? கண்ணம்மா கதவைத் திறந்தாள். அங்கே நின்றவர் இருவர்—அவளது மாமனும், மாமியும்! அதற்குள் அவளைத் தொடர்ந்து வந்த கண்ணப்பர் தன் பெற்ருேரைப் பார்த்துப் பதறிப் போனர்!

"ஏன் அம்மா, ஒரு கடிதம் போடக் கூடாதா?"

"மாமா இப்படி இளைத்து விட்டார்களே!"

"தாதா, ஆயா......"

என்று 'தத்தித்தோம்' ஆடி உள்ளே அழைத்தாள் சாந்தா. உள்ளே நுழைந்ததும, நுழையாததுமாக 'ஒப்பாரி' வைத்து விட்டாள் மரகதம்மாள்—கண்ணப்பரைப் பெற்றெடுத்த அன்னை! விபரந் தெரியாமல் விழித்தனர் கணவனும் மனைவியும்! மணிவாசகர்—கண்ணப்பரின் தந்தையும் கண்ணீர் சொரிந்தார்.

"அப்பா, அம்மா...ஏன் அழுகிறீர்கள்?"

"உன் தம்பி அருளப்பன்..."

"அவனுக்கு என்ன?"

"படிப்பை விட்டு விட்டான்!"

"ஏன்......?"

"நாட்டைக் காப்பாற்றப் பட்டாளத்தில் சேர்ந்துவிட்டான்"

ஆ......

அருளப்பனை அரும்பாடுபட்டு கோயம்புத்தூரில் உள்ள தொழிற் கல்விச்சாலையில் சேர்த்தார் கண்ணப்பர். அவனும் தனக்கு எப்படியும் சம்பளச் சலுகை கிடைக்குமென்று கூறினான். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்திருந்தார். ஆனால் இன்று அவன் படிப்பை விட்டு விட்டுப் பட்டாளத்தில் சேர்ந்து விட்டான். அவரால் அந்தச் சேதியை உண்மையில் நம்ப முடியவில்லை. நம்பவுங் கூடாததுதான்—அதிலே முக்கியமான ஒரு உண்மை மறைந்திருந்தது! அது அருளப்பனைக் கேட்டால் அல்லவா தெரியும்!

அருளப்பன் ஒரு முறை தன் குடும்பத்தைச் சுற்றிப் பார்த்தான். ஆம், அவர்கள் குடும்பம் ஒரு காலத்தில் ஓங்கிச் செழித்திருந்ததுதான்—ஆனல் இப்பொழுது சிதைந்த சித்திரம் போலக், கெட்டுக் கிடந்தது. இருட்டறை போன்ற அவர்கள் குடும்பத்தில் தூண்டா மணி விளக்காக விளங்குபவர் கண்ணப்பர் ஒருவர்தான். தந்தை மணிவாசகர் ஓடியாடி அலுத்து அமர்ந்து விட்ட ஒரு உழைப்பாளி—அவரது கரங்கள் ஒரு காலத்தில் இலட்சக் கணக்கான வெள்ளிப் பணங்களை எண்ணி எண்ணிப் பைகளில் கட்டி நிரப்பியிருக்கும்! இப்பொழுது வாழ் விழந்து விட்டார். கண்பார்வையும் வர வரக் குறைந்து கொண்டிருந்தது. தாய் மரகதம்மாள் ஒரு வெள்ளை யுள்ளங் கொண்ட பேசுந் தெய்வம்! ஆனல் வறுமைக்கும் பெருமைக்கும் உள்ள தொடர்பு அறியாமல் செலவிடக் கூடியவள்

கண்ணப்பர் தமிழர் கல்லூரியில் ஒரு தத்துவ விரிவுரையாளர். அவர் தோற்றத்தில் அழகுண்டு; இனிமை இருக்கும் அவரது பேச்சில்! அவரது கருத்துக்கள் எவர் மனத்தையும் கவர்ந்து விடும்! தமிழர் கல்லூரி தமிழகத்தின் தலை சிறந்த கல்லூரி. தமிழரின் நிர்வாகம் அங்கு! தமிழகத்தின் பலபகுதிகளி லிருந்தும் மாணவ மணிகளின் கூட்டம்—அவர்கள் தங்கி, இருந்து, உண்டு, படித்து, உறங்கி மகிழ வசதியுள்ள ‘மங்கம்மா சத்திரங்கள்’! தமிழகத்தின் ‘ஆக்ஸ் போர்டு’, ‘கெம்பிரிட்ஜ்’ என்று எதை வேண்டுமானலும் சொல்லலாம்! கல்லூரியின் தலைமையாளர் பரமானந்தம் பிள்ளை. அவர் ஸ்ரீமானல்ல, திருவாளர்! ஆகவே தமிழரின் ஆட்சி யுண்டு. அவர் கண்ணப்பரிடம் நெருங்கிப் பழகுவார். கண்ணப்பரின் அறிவு—அதுவும் இளம் வயதிலே அத்துணைப் பேரறிவாளனுகை இருக்கும் நிலைமை அவருக்கு அவ்வளவு செல்வாக்கைத் தேடித் தந்தது!

கண்ணப்பர் எப்பொழுதும் சிந்தித்த வண்ணமே இருப்பார். பாடங்களைப் பயிற்றுவிப்பதில் பண்பட்டவர். கள் மிகத் தெளிவாகப் புரிந்து கொள்கிற மாதிரியில் மிக மாணவர் எளிதில் எதையுஞ் சொல்லிக்கொடுக்கும் திறன் படைத்தவர். எட்டாத உண்மைகளையும் எளிதாகவிளக்கி விடுவார். ஆகவேதான் மாணவர்களுக்கு அவரிடம் பயம், பக்தியுங் கூட!

ஆம், அவர் அறிவாளி—அவருடைய அறிவை அவர் வாங்கும் சம்பளத்தால் அளந்தால் மிக, மட்டமாகத் தோன்றும்! அவர் பெறுவது திங்களுக்கு நூற்றிருபத்தைந்து வெள்ளிப் பணங்கள். நாட்டிலேயே அறிவை வளர்க்கும் ஆசிரியனுக்குத்தான் ஊதியத்திலே குறைத்து உழைப்பை அதிகங் கொடுக்க வேண்டிய நிலைமை—உப்பில்லாத பண்டம் குப்பையிலே, ஆனால் உப்பின் விலை மலிவு! இந்த ஊதியத்தை வைத்து எப்படி ஒரு யானைக்கு—பெருங்குடும்பத்திற்கு—தீனி போடுவார்! கண்ணிழந்த தந்தை, அன்பிற்குரிய அன்னை, இனிய மனைவி, மழலை மொழி பேசும் சாந்தா.........இவர்களைக் காப்பாற்ற வேண்டும். அது மட்டுமா? தங்கப்பன், அருளப்பன் இருவரையும் படிக்கச் செய்ய வேண்டும்! முடியுமா?

இந்தக் குடும்பப் பட்டியலை உள்ளூர் தான்சேன்சேட்டிடம் கேட்டால் தெரியும்! கண்ணம்மா ஒரு பெண் தெய்வம்—ஆமாம், சக்தியுந்தான் வரமும் தருகிறாள், சாபமும் அளிக்கிறாள்! குடும்பத்தின் குமுறலைத் தடுக்கத் தன் உடலிலே மின்னலிட்ட பொன்னாபரணங்கள் அத்தனையும் தந்தாள். ஆனால் ஆத்திரத் தீ கொழுந்து விட்டெரிக்கிற நேரத்தில் வார்த்தைகளால் கொட்டியளந்து விடுவாள், தனது உள்ளக் கொதிப்பை! மரகதம்மாளின் கண்கள் குளங்களாகும். மணிவாசகரின் மனம் புண்ணாகும். கண்ணப்பரின் பொறுமை யுள்ளமும் பொருமும். இந்தக்

க்காட்சிகளைப் பார்க்காதவ னல்லவே அருளப்பன்—பார்த் துப் பார்த்து விம்மி வெதும்பிப் போனவன்!

தனக்குச் சம்பளச் சலுகை கிடைக்குமென்று எதிர் பார்த்தான். ஏமாற்றி விட்டனர் இனி என்ன செய்வது? இப்பொழுது இரட்டைக் குடும்பம்—தனக்குச் சம்பளமும் கட்டச் சொல்வது முறையல்ல என்று எண்ணினன். தான் ஒரு தியாகம் செய்தால்தான் என்ன? நாட்டின் பொருட்டு ஊரை விட்டோடியவர்கள், சிறை சென்றவர் கள், சென்ம தண்டனை பெற்றவர்கள், தூக்கு மேடை யேறியவர்கள் உண்டு......அவர்கள் தியாகிகள்! ஆம். என் தாயகம் என் குடும்பம். என் குடும்பத்திற்காக என் படிப்பை விட்டு விடுவதுடன் மட்டுமல்ல, வேருெரு வேலை தேடிக் குடும்பத்தின் வருவாயில் கொஞ்சம் கூடு தல் செய்வேன், இது சரியான முடிவல்லவா? அஞ்சல் நிலையங்களைக் கொளுத்தி, தந்திக் கம்பிகளை யறுத்து, தன் நாட்டவரைக்கொன்று குவித்தவர்கள் இன்று தியாகிகள் என்று பேர் வாங்குகிருர்கள்! நான் என் குடும்பத்தின் நல்வாழ்விற்காக என் படிப்பைத் தியாகம் செய்கிறேன். என்னைத்தியாகி யென்ருலும் சரி, துரோகி யென்ருலும் சரி;என் முடிவை மாற்ற முடியாது...இப்படி எண்ணுமலா போயிருப்பான் அருளப்பன்!

கடைசியில் பட்டாளம்—தியாகிகள் கூட்டம் என்று தான் அதில் சேர்ந்திருப்பான்! விடுதலை பெற்றது நாடு, வேறு விரோதிகள் வந்து கவர்ந்திடாமல் காப்பது யார்? அவர்களல்லவா அடுத்து நிற்கும் தியாகிகள்! பட்டாளத் தில் சேர்ந்தவரை யாரோ சொன்ஞர்களாம் சோற்றுப் பட்டாளம் என்று. இப்பொழுது அவர்களே கேட்காமல் கேட்கிருர்கள் மன்னிப்பு, மன்ருடி, மண்டியிட்டு! உண்மை யில் விடுதலை வாங்கிக் கொடுத்தவர்களே அவர்கள் என்றுகூடத் துணிந்து சொல்லலாம்! அவர்கள் போரிலே ஈடு பட்டது வேண்டுமானல் பிழைப்பில்லாமல், வேலையில்

லாது அலேந்ததால் ஏற்பட்ட எண்ணத்தின் விளைவாக இருக்கலாம்! ஆனால்......சேர்ந்த பிறகு எவ்வளவு தியாக வாழ்க்கை! கதர்க் குல்லாயும், சிவப்புச் சட்டையும், கருப் புத் துண்டும் செய்யாத, செய்ய முடியாத தியாகம் செய்தார்கள். பெற்ற தாயைப் பிரிந்தவர், இளம் மனைவியைப் பரிதவிக்க விட்டு வந்தவர், பிள்ளையை விட்டு ஓடி வந்துசேர்ந்தவர், அண்ணன், தம்பி, தங்கை, தமக்கை அத்தனை பேரையும் அழ அழ, கதறக் கதற விட்டு வந்தவர்...தேச சேவை செய்வதாகச் சொல்பவர்களிலே எத்தனை பேருக்கு இந்த 'நெய்தல் திணை'—அதுதான் பிரிதலும், பிரிதல் நிமித்தமும்......புலவர்கள் கூறுகிறார் களே அந்த இலக்கணம்—தெரியும்! இவர்களைப் போல கூட்டத்திலே "ஜே" "ஜே" என்று கூவி விட்டு கல் பட்டால், கண்ணீர்ப்புகை க்ண்டால், வேட்டு சத்தங் கேட் டால் ஓட்டம் பிடித்து விடுவார்களா? அவர்கள் போகும் பொழுதே, இவையத்தனையையும் எதிர் பார்த்துச் சென் றனர். குருதிச் சேற்றிலே, பிணத்திட்டுக்களிலே, பீரங்கி முழக்கத்திடையே, குண்டுப் புகையைத் துளைத்துக் கொண்டு நடந்து செல்வர். தலைவன் கட்டளையை உள்ள படி உடனே நிறைவேற்றுகின்ற தொண்டர்கள் ஊருக்கு எத்தனை பேர் கிடைப்பர்? அங்கே அவர்கள் அத்தனை பேரையும்உண்மைத்தொண்டர் பட்டியலில்சேர்க்கலாமே. தலைவனின் கட்டளை அங்கு தட்ட முடியாத ஒரு ஆணை! கட்சி மாறுபவர்கள், 'ரிடயர்டு' ஆகுபவர்கள், சமய சஞ் சீவிகள்......உண்டே! அங்கு ஓட முடியாது, ஓடினாலும் விட்டு விடுவார்களா? இங்கு தவறு செய்தால் கண்டனக் கூட்டமும், கார சாரமான தீர்மானமும், 'சூடான டீ ஒரு கப்' பிற்குப்பின் எழுதித் தள்ளும் தலையங்கமும்தான் முன்னே வரும்! அங்கே சிறைத்தண்டனை, இருட்டறைச் சம்பவம்......!

இப்படிப் பாடுபட ஓடினார்கள். ஓடினவர்களில் ஒரு சிலர்தானே வீரர் சுபாசுவைச் சந்தித்தனர். பட்டா

ளத்தில் சேராவிட்டால் எப்படிச் சந்தித்திருப்பர்...சுதந் தர சேனை தான் ஏது?

தங்கள் குருதியைக் கொட்டி வெள்ளையரைக் காப் பாற்றி விட்டனர். அப்புறம் தியாகிகள் தட்டிக் கேட்க முடிந்தது. போரில்சேராமல் இட்லரிடம் வீர இலக்குமி சோரம் போயிருந்தால் சுதந்தர தேவியின் 'அத்யந்த' பக்தர்கள் என்ன செய்வார்கள்! அதனால்தான் பட்டா ளத்தில் பணியாற்றியவர்தான் விடுதலையை வாங்கித்தந் தார்கள் என்று சொன்னால் கூடத் தவறில்லை. அது எப் படியோ போகட்டும். இனிச்சேர்ந்து பணியாற்றுபவர்க ளாவது தியாகிகள் ஆகமாட்டார்களா? அல்லது அவர் கள் சோற்றுலடித்த சொரணை கெட்டபிண்டங்களா? அரு ளப்பன் இப்படியெல்லாம் எண்ணித்தா னிருப்பான். பிறகுதான் சேர்திருப்பான்.

அழும் தாயையும், தடுமாறும் தந்தையையும் தேற்ற வேண்டாமா? கண்ணப்பர் தன் மனதைத் திடப்படுத்திக் கொண்டு ஆறுதல் கூறினார்.

"இப்பொழுதெல்லாம் பட்டாளம் என்றால் பயப்பட ஒன்றுமில்லை அம்மா, போரிருந்தால்தான் சண்டைக் களத்திற்குப் போகவேண்டி வரும். சாக்காடு அங்கு சாதாரணம்!"

தாய் தேம்பினாள். மாமியை மருமகள் தேற்றினாள். புயல் ஓய்ந்தது. ஆனாலும் அதன் முழு வாடையும் முடிய வில்லை. அதறகுள் வெள்ளம் எடுக்க ஆரம்பித்து விட் டது! ஆம் பெற்றோருக்குத் தங்கப்பன் நினைவு வந்து விட்டது.

"தங்கப்பன் எங்கே?"

"எங்காவது படக்காட்சிக்குப் போயிருப்பான்!"

"உன்னிடம் சொல்லாமலா?"

"யாராவது நண்பர்கள் இழுத்துக் கொண்டு, போயிருப்பார்கள்!"

கண்ணப்பர் பேசினார். ஆனால் அவர் மனம் மட்டும் சரியில்லை. அதற்கு ஏற்றாற்போல அருளப்பனின் செய்தி கிடைத்தது. வருத்தத்தின் அளவுவிளிம்பையும் தாண்டி வழிந்தது! மனக் கோப்பை கொதித்தது!

"அருளப்பன் அப்படி, தங்கப்பன் இப்படி"

தன்னையும் அறியாமல் தொடங்கி விட்டார். இடையில் நிறுத்த முடியாமல் மென்று விழுங்கி ஒரு மாதிரியாக முடித்தார்.

"இவன் என்ன செய்தான்?"

சீறினார் தந்தை.

"தங்கப்பன் தங்கமானவனாயிற்றே!"

தாயின் தளர்ந்த குரல்

"படிப்பைக் கெடுத்துக் கொள்கிறான்!"

"ஆமாம், நாடாம், கட்சியாம், நாட்டுப் பற்றாம், கூட்டமாம், மாநாடாம்...இதெல்லாம் இந்தவயதில்ஏன்?"

வாதத்திற்கு ஒரு முற்றுப் புள்ளி யிட்டாள் கண்ணம்மாள். அவள் அந்த வார்த்தைகளை இறைத்துக் கொண்டே தூங்கும் சாந்தாவைத் தொட்டிலிலே கிடத்த நகர்ந்தாள். பிறகு எல்லோரும் உண்டனர். உறக்கம் அவர்களைத் தழுவி மகிழ்விக்கத் தயாராக நின்று கொண்டிருந்தது! கண்ணப்பர் தனது படிப்பறைக்குள் நுழைந்தார். மறுநாள் பாடத்திற்கு வேண்டியன ஏதாவது உண்டா என்று ஏடுகளைப் புரட்டினார். பழைய சிந்தனை... அதில் உலகப் படைப்பு,........வறுமை, வளமை, வாட்டம், தேட்டம் இவைகளின் போட்டா போட்டி......போர் முகாம்கள்......வந்தன.

மனிதன் ஏன் பிறக்கிறான், எப்படிப் பிறக்கிறான் என்று ஆராய்ச்சி நடத்த வேண்டுமா? இந்த உபகண்டத்தில் காவியுடையழகர்கள், கமண்டல மேந்திகள், உருத்திரக்காய் மாலை யுருட்டிகள், திருநீறணிந்தோர், பட்டை நாமம் போட்டோர், கோவணாண்டி, முக்காடு போட்ட முனி புங்கவர்......இப்படிப் பலரும் ஆராய்ந்து ஆராய்ந்து அலுத்துப் போயினர். அவர்கள் சொன்னதையெல்லாம் பாட்டாகப் பாடி, பேச்சால் பிரசாரம் செய்து, எழுத்தால் ஏடெழுதி, ஆட்டத்தால் ஆடி......நாம் ஓய்ந்து விட்டோம்; சாய்ந்துவிட்டோம். அப்படித்தான் ஆராய்ச்சி செய்தார்களே 'லெபரடரி' உண்டா, உபகரணங்கள் இருந்தன? கோயில் குளங்கள் ஆராய்ச்சியிடங்கள், அவர்கள் சிந்தனையில் படிந்த கற்பனைகள் ஆராய்ச்சி யுண்மைகள்! இங்கு டார்வின் கிடையாது—புல்லாகி, பூண்டாகி...... பாடமட்டும் ஆள் உண்டு.

அது மட்டுமா? பிறப்பதற்கு முன்னால் என்ன பிறவி? அவன் செய்த பாவ புண்ணியங்கள் 'ரேஷியோ' என்ன? அதனால் விளையும் பலன்தான் யாது? ......இப்படிக் கேள்விகள், புதிர்களை எழுப்பிக் கொண்டார்கள் இங்குள்ள ஞானிகள், இருடியர், மோனநிலை யெய்திய முத்தர்கள், சித்தர்கள்! அவரவர்களுக்குத் தெரிந்ததைச் சொன்னார்கள்.

இத்துடனாவது விட்டார்களா? இல்லையே! மனிதன் இறந்த பிறகு அவன் நிலை என்ன? அவனது 'டூரிங் பிரோகிராம்'மில் எமலோகத்திற்கு இடமுண்டா? இந்திர புரி வழியில் வருமா? சத்திய புரியைத் தாண்டித்தான் போக வேண்டுமா? வைகுந்தத்தில் கோவிந்தனிடம் பேட்டி கிடைக்குமா? கைலாசத்தில் சிவனுடன் விருந்துண்ணலாமா? அல்லது நரகத்திலேயே தங்கி விடலாமா?......இப்படிச் சிந்தனையைக் குழப்பிக் கொண்டார்கள். ஆத்ம விசாரணை என்றார்கள். தத்துவ சாகரத்தில்

முழுகி விட்டார்கள் என்று பிதற்றினார்கள். ஆமாம், நாமும் ஆத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் உள்ள வித்தியாசத்தை 'டெஸிமீடரிலும்', 'சென்டிமீடரிலும்' அளந்து கொண்டே இருக்கிறோம......! பாருங்களேன்! இங்கு புத்தரைக் காட்டலாம், மகாவீரர் உண்டு, கபீர் இருந்தார், இராமாநந்தர் வாழ்ந்தார். இராமானுசர் புது மதம் கண்டார். தாயுமானார் அருள் பெற்றார், அருணகிரியார் கவி பாடினார், பட்டினத்தார் பாடல் தந்தார், இராமலிங்க அடிகளார் அருட்பா இயற்றினார்......என்று காட்டலாம்! ஆனால் ஒரு தாமஸ் ஆல்வா எடிசன் இங்கு பிறக்கவில்லை, மார்க்கோனி கிடையாது, நியூடன் இல்லை நம்மிடம். பொருளாதாரத்தை விளக்க ஆதம்ஸ்மித் இல்லை. அரசியலைவிளக்க அரிஸ்டாட்டில் இல்லை; வீரர்கள் உண்டா? சிவாஜியென்றால் பக்கத்தில் இராமதாசர், துக்காராம்......! அம்மம்ம! எங்கு திரும்பினும் மதம், மதம்...மதத்தின் இரும்புப் பிடி. மதம்வாழ்க்கைஎன்ற மரத்தின் ஒருகிளை, அதுவே மரமல்ல என்பதை மறந்தோம். வாழ்வு கடல்—மதம் ஒரு சிற்றாறு என்பதைப் புரிந்து கொள்ள மறுத்தோம்.

மனிதன் பிறந்தான்—பிறந்த பிறகு அவன் என்ன செய்ய வேண்டும்? இந்த உலகத்தில் அவனது கடமை என்ன?......இவைகளைத்தான் ஆராய வேண்டும். பிறவி. பிறவி.....என்று புலம்புவதா? காயமே இது பொய்யடா காற்றடைத்த பையடா...—என்று பாடுவதா? நாதன் தாள் தொழாத நாளென்ன நாளே, அவன் புகழ் பாடாத நாவென்ன நாவே,......என்று குளறுவதா? இல்லை. இந்த உலகம் உண்மையென்று உணர்த்த வேண்டும். காயமே இது மெய்யடா? காற்றடைக்க இது 'புட்பால் ப்ளாட'ரல்ல கேளடா என்று பாடவேண்டும்! அப்படிப் பாடியிருந்தால் விஞ்ஞானம் இங்கு பிறந்திருக்கும். சி. வி. இராமன்கள் மலிந்திருப்பர்!

லவால் என்ற அறிஞர் குறிப்பிட்டார், எந்த மனித னின் பிறவியும் ஒரு வேலையைத் துணைக் கொள்ளாமல் ஏற்படுவதில்லை. பிறந்தான் என்றால் வாழத்தான். லாங்பெல்லோ இன்னும் ஒருபடி மேலே சென்றார். வாழ்வு மெய்யானது, இனிமையானது, சவக்குழி அதன் முடி வல்ல; புழுதியாலானது, புழுதிக்குப் போகிறது என்பது உயிருக்காகக் கூறப்பட்டதல்ல என்று அடித்துப் பேசி னார்......

கண்ணப்பரின் அகக் கண்கள் மேய்ந்த பக்கங்களில் இம்மாதிரியெல்லாம் புரட்சிக் கருத்துக்கள் சிதறிக் கிடந் தன.

அப்பொழுது மெதுவாக— மிக மிக மெதுவாகக் கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. கண்ணப்பர் எழுந்து சென்று கதவைத் திறந்தார், தன் தம்பி தங்கப்பன் பயப்படுவது போல நின்றுகொண்டிருந்தான்

"ஏன் நிற்கிறாய்...வாயேன்!"

கண்ணப்பர் கூறி விட்டு நடந்தார்.

"இவ்வளவு நேரம் என்ன செய்தாய்?"

மீண்டும் பேசினார்.

"அடுத்த ஊரில் கூட்டம் ஒன்று..."

கொஞ்சம் நேரம் ஊமை நிலைமை —பிறகு பேசினார். என்றாலும் அதிக நேரம் பேசவில்லை. கண்ணப்பர் தன் படுக்கையறையினுள் நுழைந்தார். கண்ணம்மா நிம்மதி யாக உறங்கிக்கொண்டிருந்தாள். பக்கத்தில் சாந்தா பது மை போல படுத்துக் கிடந்தாள். விளக்கு எரிந்து கொண் டிருந்தது. மெதுவாக ஒளியைக் குறைத்தார். படுத்தார். கண்கள் மூடிக்கொண்டன— ஆனால் அவர் தூங்கவில்லை. தங்கப்பனும் அதே படகில்தான் உலவினான். அவன் தூங்க முயற்சி செய்தும் முடியவில்லை. வெவ்வேறு எண்

ணங்கள் அவனது சிந்தனைக் காட்டில் வேட்டையாட ஆரம்பித்து விட்டன.

தங்கப்பன் செய்வது சரியா.........ஒரு கல்லூரி மாணவனின் கடமை இது தானா? அடிமை நாட்டில் சுதந்தர உணர்ச்சி தொத்து நோய் போலப் பரவும் என்பார்கள. ஆமாம், இந்திய உபகண்டத்தில் அப் படித்தான் பரவிற்று! இல்லா விட்டால் எந்த நாட்டு சரித்திரத்திலும் இல்லாத விதமான போர் முறைகளை இங்கே கையாளுவார்களா? அந்நோயின் கோளாறு தான் அப்படி ஆட்டி வைத்தது......! லங்கணம் சர்வ ரோக நிவாரணம்......பட்டினிதான் பரம அவுடதம் என்று கூறுவார்கள். அரசியல் காரியங்களைச் சாதிக்க உண்ணு நோன்பிகள் தோன்றினார்கள்—சண்டித்தனங் கள் செய்தார்கள்! இப்படியெல்லாம் ஆட்டி வைத்த பிணி ஒரு வகையாக மறைந்தது என்று மக்கள் நினைக்கிற நேரத்தில் புது விதமான நோய் பரவுகிறது......! சீர் திருத்தமாம், புரட்சி இயக்கமாம்...... சரி, இருக்க வேண் டியதுதான்! வாங்கிய விடுதலையை வகையான முறை யில் அமைக்க வேண்டியதுதான். அப்படி எண்ணம் பிறப்பது தவறில்லை, முறையுங்கூட! ஒப்புக் கொள்வோம்!

ஆனால்......? தங்கப்பர்கள் செய்ய வேண்டியவை எவை? கூட்டங்கூட்டுவதும், மாநாடுநடத்துவதும், கொடி கட்டி தடிகொண்டு தாக்கி, நீதிக் கூடாரத்தில் கைகட்டி நிற்பதுதானா? அந்தக் கடமைகளைச் செய்ய ஆட்கள் இல்லையா? அப்படியே இல்லை யென்றாலும் இவைகளைச் செய்து கொண்டிருந்தால் படிப்பு—உயிர்ப் பிரச்னை என்ன ஆவது? கூட்டத்தில் வீர முழக்கம் செய்து விட்டு வகுப்பறைகளில் கேட்ட கேள்விகளுக்கு விடை தெரியாமல் ஆந்தை போல விழிப்பதைக் காட்டிலும் அவமானம் வேறுண்டா? ஏதாவது தடுத்துச் சொன் னால் நாட்டுப்பற்றில்லாத நயவஞ்சகன், சுயநலச்சூரண்

டல்காரன்...என்று தூற்றுகின்றார்கள். நாட்டுச் சேவை வீட்டுச் சேவையின் பிள்ளை என்பதை ஏன் உணரமறுக்கிறார்கள். அவர்கள் நாடு என்று சொல்கிறார்களே, அவர்கள் வீடு என்ன ஆவது...அந்த வீட்டு மக்களின் வாழ்வு வறண்டு போகலாமா? ஏன் சிந்திப்பதில்லை?

உலகுக்குப் புத்தி சொல்லப் புறப்பட்ட பல பெருந் தலைவர்கள் தங்கள் வீட்டைத் திருத்தியதாகக் கூற முடிவதில்லை. வீட்டைத் திருத்திக் கொண்டல்லவா நாட்டைத் திருத்த நடக்க வேண்டும் வெளியில்—அந்த உண்மை ஏன் இவர்களுக்குப் புலப்படுவதில்லை! இவர்கள் பிறர் நடக்க வேண்டும் என்று நினைக்கிற முறைகளைத் தாங்களே நடத்திக் காண்பித்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! ஒரு பவுண்டு உபதேசம் ஒரு அவுன்ஸ் நடத்தையை விட அளவில், எடையில் குறைவானதே என்பார்கள்! அது போல, இவர்கள் வாய் கிழியக் கத்தி விட்டு நடைமுறையில் 'வழ வழாவாக' இருப்பானேன்?

தங்கப்பன் என் தம்பி தான்—இருக்கட்டுமே! அவன் புரட்சி இயக்கத் தலைவர்களில் ஒருவன். அவன் வீரமாகப் பேசுவான். நான் கூட அவன் பேச்சில் மயங்கித் தான் விடுவேன். எத்தனையோ பேர்கள் அவனைப் புகழும்போது நான் பூரித்துப் போவதுண்டு. கல்லூரியில் அவன் ஒரு குறிப்பிடத்தக்கவன். கல்லூரி மேடைகள் அவன் இல்லா விட்டால் சிறக்காது. ஏதாவது ஒரு கூட்டத்தில் தங்கப்பன் நன்றி கூறப்போகிறான் என்றால், சொற்பொழிவாளர்களின் பேச்சுக்களுக்கு இல்லாவிட்டாலும் கடைசி கட்டத்திற்குக் கட்டாயம் வருவார்கள். ஆனால் கல்லூரியில் படிப்பது மேடையலங்காரம் செய்வதற்காக மட்டுமல்லவே வேறு பல கலைகளைக் கற்றுத் தெளிந்த ஒரு அறிஞனாக வெளியேறுவதற்காக—இதை ஏன் மறக்க வேண்டும்? அது மட்டுமல்லவே, தங்கப்பன் தன்னையே ஒரு முறை சுற்றிப் பார்த்தால் அவனது தேசத்தொண்டு நாணிக்

கோணுமே......! தாங்க முடியாத குடும்பச் சுமையைத் தாங்கித் தாங்கி வளைந்து நெளிந்த அண்ணனின் மெலிந்த தோற்றம் தெரியுமே. அந்தப் பளுவில் தானும் ஒருவன் என்ருல் அவன் வெட்கப்பட்டாக வேண்டும். அவன் எதிரில் நாடும், வீடும் வந்து நின்ருல் வீடுதான் அவனது போராட்டத்திற்குரிய களமாகத் தோன்றும்.

ஏன் படிக்கக் கூடாது?... நேரமிருந்தால் தானே! ஊர் ஊராய்த் திரிந்து புரட்சி விதை தூவிடவே பொழுதில்லை. புரட்சிக்காரனுக இருப்பதில் அவன் அடையும் பெருமையிலே எனக்குத் துளியும் ஆட்சேபமில்லை. ஏன் அவன் ஒரு அறிவாளியான புரட்சிகாரனுக இருக்கக் கூடாது? அவன் ஷேக்ஸ்பியருடன் பேச்சு வார்த்தை நடத்தவில்லை, ஜான்சனைப் பற்றிக் கவலை கொள்ளவில்லை, டிக்கன்ஸ் நினைவிலிருப்பதில்லை. எப்படித் தேர்விலே அதிக மதிப்பு எண்கள் பெற முடியும்? கம்பனையும், கிழாரையும் கேலி பேசக் கற்றுக்கொண்ட அளவு கூர்ந்து படித்திருந்தால் முதல் வகுப்பில் தேர்ச்சி அடையலாமல்லவா? வரலாற்றைப் புரட்டி அதில் சாணக்கியர், கங்கு பட்டர், பூர்ணையா, வெங்கண்ணு, அமீன்சந்த்,...... பரம்பரையைப் பற்றிக் குற்றப்பத்திரம் தயாரிப்பதை விடுத்து அசோகனையும் ஆக்பரையும் ஆழமாகப் படித்தால் என்ன கெட்டு விடும்? பொருளாதரத்தைப் புரட்டி வடக்கும் தெற்கும் என்று துலாக் கோல் போட்டு நிறுத்துக் குறை கூறுவதை விட தேர்விற்கேற்ற தெளிவுரைகளைத் தேடினுல் என்ன?... இதையெல்லாம் கேட்டால் சீறுகிருன்.

சற்றுக் கடிந்து கொண்டால் படிப்பையே தியாகம் செய்தாவது தாயகத்தைக் காப்பதில் தவறில்லையாம் —என்னிடம் நேராகச் சொல்கிருனு என்ன, அண்ணியார் தூது இந்தத்துடுக்கு வார்த்தைகளைச் சுமந்துவர! தியாகம் என்கின்ருனே...எது தியாகம்? தனக்குரிமை

யானதை இழந்தால் தியாகம் என்று சொன்னால் ஒத்துக் கொள்ளலாம்...... திரௌபதையைத் தருமன் சூதில் வைப்பதைப்போல, படிப்பை இழக்கிறானும்! திரௌபதை மனைவியாக இருக்கலாம், ஆனால் சூதாட்டப் பொருளாக மாற்றினால் அதில் மனிதத் தன்மை இருக்கிறதா? அதுபோலத் தான் படிப்பை இழக்க தங்கப்பனுக்கு உரிமையில்லை.

நாட்டில் கட்சி என்று கூறிக்கொண்டு, புரட்சி, சீர்த்திருத்தம் என்று பேசிக் கொண்டு இருப்பவர்கள் தான் தியாகிகள் என்றால், பிற அனைவரும் சுய நல வாதிகளா? இதை நினைக்கிற நேரத்தில் நல்லதங்காள் கதைதான் நினைவிற்கு வருகிறது. வாழை மட்டை எரிப்பதுதான் பத்தினித்தனத்திற்கு உரைகல் என்றால், பிற அத்தனைபேரும் விபசாரிகளா? பிறந்தவர் அத்தனை பேருந்தான் தியாகிகள்! உலகமே தியாகம் என்ற ஒரே அச்சாணியில்தான் சுழல்கிறது!

வானம் நீரைத்தருகிறது நிலத்திற்கு-ஆனால் நிலத்திலிருந்துதான் நீர் ஆவியாகி மேலே செல்கிறது! தியாகம் என்பது தான் இப்படிப் பின்னிக் கிடக்கிறது. அந்நீரால் வளப்பட்ட பூமியில் செடி கொடிகள் பயிராகின்றன. அவை செய்யும் தியாகத்தால் உயிர் வாழ்கின்றன ஆடுகள், மாடுகள். அவைகளைக் கொன்று பிழைக்கின்றன புலி சிங்கம் முதலியன. அவைகளைப்பிடித்து அடைத்து வேடிக்கை காட்டி வயிறுவளர்க்கிற மனிதர்களும் உண்டு. இப்படித்தான் ஒன்றின் தியாகம் மற்றொன்றின் வாழ்வாக முடிகிறது!

இந்தத் தியாகத்தின் பேரைச் சொல்லித்தங்கப்பன் அலைவது தவறு—என்றால் ஏற்றுக் கொள்ள முடியாது!

கண்ணப்பர் தனது மனச்சாட்சியின் முன் தங்கப்பனை நிறுத்தி அவனது செயல்களைப் பற்றி வாதமிட்டார். அவருக்குத் தூக்கம் வராததின் காரணம்

இப்பொழுது புரிகிறதல்லவா? பொழுது விடியும் சமயம்—திரும்பவும் எழுந்து தங்கப்பன் அறைக்குள் நுழைந்தார். கதவுகள் திறந்து கிடந்தன. படுக்கை சுருட்டப்படவில்லை. ஏடுகள் மேஜையின் மீது சிதறிக் கிடந்தன. விளக்கு நிறுத்தப்படவில்லை. தங்கப்பனைக் காணோம்! மீண்டும் எங்கு சென்றிருப்பான்?

நள்ளிரவில் வந்து பிறகும் வீட்டில் இல்லாமல் வெளியில் பறந்து விட்டான் என்றால், அவரால் அதனைச் சகித்துக் கொள்ள முடியவில்லை. என்ன சொல்வது என்று புரியவில்லை. அவரது கண்களில் கோபத்துடன் நீரும் விழிந்தது! தங்கப்பன் எங்கு சென்றான் என்று யூகிக்கவும் முடியவில்லை.

# காலை

தங்கப்பன் வெகு வேகமாகக் கல்லூரி உணவு விடு தியை நோக்கி நடந்து கொண்டிருந்தான். அவன் மனம் பெரும் போர்க்களமாக இருந்தது. மறுநாள் காலையில் வேலை நிறுத்தம். ஒரு மாணவன் கூட வகுப்புக்குச் செல்லக்கூடாது! ஏன்? மூன்று மாணவர்களைக் கல்லூரியை விட்டு நீக்கிவிட்டனர். அவர்கள் செய்த குற்றம் என்ன? உணவு விடுதியின் விதிமுறைகளைப் பல முறை மீறியது. மீறியது மட்டுமல்லாமல் கேலி பேசி மாணவர்களை ஒன்று திரட்டி புரட்சி செய்ய முனைந்தது! அவர்கள் செய்கை தவருனதாக இருக்கலாம், கண்டிக்கவேண்டியது— ஆனல் வாழ்வைப் பறிப்பதைப்போல் இப்படிச் செய்யலாமா? கற்ருேர் முகத்திரண்டு கண்ணுடையவர், கல்லாதவர் முகத்திரண்டு புண்ணுடையவர் என்று அறிஞர் கூறுகின்றனர். புராணக் கதைகளில் காட்டு ராசாக்கள் அளிக்கிற கடுந்தண்டனைகளை விடக் கொடுமையான தண்டனையாக இருக்கிறது இது—கண்ணைப் பிடுங்கி விட்டார்கள்!

ஆம், அவர்களைத் திரும்பச் சேர்த்தாக வேண்டும்; எவ்வித நிபந்தனையுமின்றி அவர்கள் மீண்டும் மாணவர்களாக்கப் படவேண்டும்! இல்லாவிட்டால் வேலை நிறுத்தம். இதனை நடத்தி வைப்பது தங்கப்பன்.

தங்கப்பன் நடந்துகொண்டே சிந்தித்தான். உலகம் இருளில் மூழ்கித் தவித்தது. அவன் நெஞ்சம் மட்டும் ஒளியால் நிறைந்திருந்தது. கண்ணப்பர் எதிரில் வந்து நின்ருர். அவர் அவனை ஏதோ கேள்விமேல் கேள்விபோட்டு மடக்க முனைந்தார். தங்கப்பன் வாயாடியாயிற்றே! அவன்

சேர்ந்திருந்த புரட்சிக் கூட்டம் அவனுக்குக் கற்றுக் கொடுத்தது வாயடிதான்! படிப்புத்தேவை தானே என்கிறீர். தேவை தான். ஆனால் இந்த நாள் படிப்பிற்கும் அறிவிற்கும் துளியும் சம்பந்தம் இல்லை. இயற்கையறிவு பால்போன்றது—இன்றைய படிப்பு உப்புப்போலாகிறது. இரண்டும் சேரலாமா? தென்றலிலே விஷவாடை கலப்பதைப் போல, மலர் மணத்திலே மயக்கப் புகை நுழைவதைப்போல இயற்கையறிவுடன் இந்தப்படிப்புச்சேர்ந்து பாழ் செய்து விடுகிறது.

படிப்பு ஒழுக்கத்தை, உயர் குணத்தைக் கற்பிக்கிறதா? இல்லையே! படித்தவர்களிலே எத்தனையோ பேர் அயோக்கியர்களாக வாழ்கிறார்களே! படிப்பதின் நோக்கம் வயிற்றுப் பிழைப்பு என்றால் அதை விடக்கேவலம் ஒன்றுமே இல்லை. நாய் நான்கு தெருக்களிலே சுற்றி யலைகிறது—இப்படி அப்படி ஓடுகிறது! வயிறு வீங்கத் தின்று விட்டுப் படுத்து விடுகிறது. காக்கை, குருவிகளும் பறக்கின்றன. தாங்கள் பசியாறுவது மட்டுமல்லாமல் தங்கள் குஞ்சுகளுக்கும் கொண்டு வந்து ஊட்டுகின்றன! இவைகளைவிட மனிதன் கீழானவனா? நாயும், குருவியும் தங்கள் வயிற்றை நிரப்ப எந்தக் கல்லூரியில் படித்தன, எங்கு பட்டம் பெற்றன? படிப்பு, வயிற்றுப் பிழைப்பிற் கென்று சொல்வது தவறு—குமரிகளின் கூந்தலுக்குச் செருக வேண்டிய மலரை விளக்கெண்ணெய் வாடை அடிக்கும் கருங்கல்லுத்தெய்வத்திற்கென்று கூறுவதைப் போல! படிப்பு அறிவைப் பெருக்க அல்லது திருத்த என்று கூறுங்கள். ஆனால் வயிற்றுப் பிழைப்பிற்கென்று மட்டும் கூறாதீர்கள்.

படித்தவர்கள் தான் அறிவாளிகளா? படியாதவர்களில் எத்துணை பேர் உலகம் போற்றும் உத்தமர்களாக விளங்குகிறார்கள் தெரியுமா? உலகம் போற்றுவது மட்டுமா, உலகம் அவர்களிடம் கைகட்டி, வாய்பொத்தி, நீதி

க்ள் கேட்டு, நெறிகளை யுணர்ந்து தன்னைத் திருத்திக் கொண்டுள்ள நிகழ்ச்சிகள் நிறைய உண்டு.

நாட்டிற்காக ஒரு பத்துப் பேர் பலியானால்தான் என்ன? படிப்புக் கெடுகிறது என்று செல்லுபவர்கள் பகவத்சிங்கை நினைத்துக் கொள்ளட்டும். வருமானம் போய் விட்டது என்று பதறுபவர்கள் திருப்பூர் குமரனை ஞாபகப் படுத்திக் கொள்ளட்டும். படித்தும் பயனில்லாமல் அலைகிறார்கள் என்று அவதிப்படுவார்கள் வழக்கறிஞர் வ. உ. சி. யை மனதிலே பதியவைக்கட்டும். உயிரைப் பெரிது என்று உபதேசம் செய்பவர்கள் தாளமுத்து, நடராசன், வேலாயுதம் ஆகியோரை எண்ணிக்கொள்ளட்டும்.

தங்கப்பன் தன்னை மறந்து விட்டான். இல்லாவிட்டால் இந்த வேதாந்தம் பேசுவானா? ஆடும் மாடும் பல் விளக்குவதில்லையே-பன்றி சோறுண்ணவில்லையே என்று தத்துவம் பேசினால் யார்தான் சிரிக்க மாட்டார்கள்! நாயும், குருவியும் படிக்க வில்லையாம்...என்ன பைத்தியக்கார சிந்தனை! அவன் கல்லூரியில் படிக்கிற அளவு பணம் படைத்த குடும்பத்தைச் சேர்ந்தவனா? இல்லை. உயர் நிலைப் பள்ளியில் நன்றாகப் படித்தான. வெற்றிப் பாதையில் நடக்கக்கூடவில்லை. ஓடிக் கொண்டிருந்தான். ஒவ்வொரு ஆண்டும் வந்துவந்து அவனது அலமாரிகளை பரிசுப் புத்தகங்களால் நிரப்பும். ஆசிரியர்கள் பாராட்ட, மாணவர்கள் பொறாமைப்பட, மாணவிகள் மனங்குழைய படிப்பில் முன்னேறிக் கொண்டிருந்தான். இரவு பகல் படிப்பு, படிப்புஎன்று கருத்தாகக்,கவனமாகப்படிப்பான். பெற்றோர்களும் மற்றவர்களும் கோபித்துக் கொள்கிற அளவு அதிக நேரம் உழைப்பான். ஆகவேதான் அவன் பள்ளியிலேயே முதல் மாணவனாக, பரிசில்கள் பல பெறும் பக்குவமுடையவனாக விளங்கினான்.

ஆனால்...பள்ளி முடிந்து, கல்லூரி வாழ்வு தொடங்கியது! அவன் வாழ்க்கையில் ஒரு திருப்பம் ஏற்பட்டு விட்டது! அப்பொழுதுதான் சீர்திருத்த வெறி அவனைப் பிடித்துக் கொண்டது. பிறகு தான் பேசக் கற்றுக் கொண்டான். படிப்பு படுத்துக் கொண்டது. பேச்சும், மூச்சுக்கு மூச்சு சீர்திருத்தமும், புரட்சியும் இடம்பெற்றன பத்திரிக்கைகள் தங்கப்பனின் கர்ஜனை முழக்கம் என்று தமெக்கென அமைந்த மயக்கப் பொடியான வார்த்தைகளை அள்ளித் தெளித்தன. மலர் மாலைகள் குவிந்தன. கைதட்டுதல்கள் வானைப் பிளந்தன. தங்கப்பனுக்கு சிறுகச் சிறுக வெறி ஏறியது. பிறகு குறையவில்லை. நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே இருந்தது!

இந்தப் புகழ்ச்சி மின்மினி வெளிச்சம் என்பதைத் தங்கப்பன் உணரவில்லை. அது நிலையான பேரொளியென்று எண்ணிக் கொண்டான் போலும்!

தங்கப்பன் போற்றுகின்ற தலைவர்களிலே எத்துணை பட்டதாரிகள்! அவர்கள் குடும்பம் 'புராலிடேரியன்' வாழ்வா வாழுகின்றன...கொழுத்த 'பூர்ஷுவா' வாழ்வாகத்தானே இருக்கின்றன! சொந்தப் 'பாண்டியாக்'குகள், மிக்பெரிய அச்சகங்கள், பணம் வரும் பத்திரிகைகள்...இப்படிப் பலப்பல சொல்லலாம்! தங்கப்பன் மட்டும் அன்னக்காவடியாக 'தகரடப்பா' வேலையோடு போவதா?

நாளைக்குக் கல்லூரியை விட்டு நீக்கி விட்டால் யார் முன் வந்து ஆதரிப்பார்கள்? நேற்று நடந்த நிகழ்ச்சி அதற்குள்ளாகவா மறந்து விட்டது—கட்சி, உங்கள் மகிழ்ச்சிக்காகச் செய்கிற தவறுதலுக்கு நாங்கள் என்ன செய்யட்டும் என்று சொல்லி விட்டதே! மாணவர்கள் தான் என்ன செய்து விட்டார்கள்! ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்ய எவ்வளவு சர்ச்சைகள், தகராறுகள்...

தங்கப்பன் நெஞ்சைத் தொட்டுத் தொட்டு, சமயங்களில் அடித்தடித்துப் பேசினர் கண்ணப்பர். தங்கப்பன் சமாதானங் கூற முடியாத அளவு அவரது கேள்விகள் அழுந்தந்திருத்தமாக இருந்தன. இருந்தாலும் அவைகளை ஒப்புக்கொள்ள முடியவில்லையே! அவனது நடவடிக்கைகளில் குறை கண்டவர் கண்ணப்பர் மட்டுமல்ல, தாமரைக் கண்ணியுந்தான்! தாமரைக் கண்ணியின் நினைவு வந்ததும் தங்கப்பன் முகத்திலிருந்த களைப்பு பறந்துவிட்டது.

தாமரைக்கண்ணி...அந்தப் பெயர் ஒரு தேனடை—உச்சரித்தால் தேன் துளிகள் சொட்டும்! பெயர் மட்டுமல்ல, அவள் நம் பார்வையிலே பட்டு விட்டால் நம் கண்கள் அவளை விட்டுப் பிரியாது அடம் செய்யும். அடித்து உதைத்துத் தான் வேறு பக்கந்திருப்ப முடியும்! அவள் கூந்தலுக்கு ஒரு தனி மதிப்பு! மாந்தரை மயக்கும் மான் விழியாள் என்று கதாசிரியர்கள் கதைக்கிறார்களே, அந்த வருணனை இவளுக்கு மட்டுந்தான் பொருந்தும். குங்கும நிற உதடு என்று புகழ்கிறார்கள்—என்றாலும் கருநீலம் படிந்த அந்த உதட்டுக்குத்தான் எத்தனை அழகு; உயிரீர்க்கும் காணல்கள்!

அவள் கருப்புத்தான் நிறத்தில்—கருப்பு என்றால் கசக்கிறதா என்ன...! காக்கையும் கருப்பு, குயிலும் கருப்பு—அதற்காகக் குயிலின் குரலினிமை குறைந்து விடுமா? காக்கையின் குரலுடன் ஒப்பிட்டுக் கேலி பேசமுடியுமா? நாம் கை கூப்பி வணங்கும் கடவுள்களும் கருப்புத்தான்—கருப்பு நிறத்தைக் கொண்டா அழகை அளவிடுவது—அது தவறு! அழகு ஒரு விடுகதை—அதன் விடை வெடிப்பவர்களின் அறிவையும், திறனையும் பொருத்திருக்கிறது!

அவளது அங்க அமைப்புக்களை வருணிக்க வேண்டியதில்லை. பருவம் ஒரு மடந்தையுருவெடுத்தால் அந்த

வடிவம் தாமரைக் கண்ணியாகத்தா னிருக்க வேண்டும் ...........என்று புராணப்பிரசங்கிகள் போலத் துணிந்து கூறலாம்!

அக் கல்லூரியில் படிக்கும் மாணவி தாமரைக் கண்ணி. தங்கப்பனும் அவள் வகுப்பு. இருவருக்கும் ஆரம்பத்தில் எந்த விதத் தொடர்புமில்லை. வகுப்பறைகளில் சில புன்னகைகளுடன் அவர்களது சந்திப்பு முற்றுப் புள்ளி பெறும். வழக்கமாகக் கல்லூரிகளில் காதல் தொடர்புகள் ஏற்பட ஒரு சில வழிகள் தான் உண்டு. ஏதாவது நோட்டுகள் கேட்பதிலே தொடங்கி, புத்தகங்கள் கொடுப்பதிலே பாய்ந்து, போட்டோ படங் களில் தாவி, கூட்டங்களில் கடவுள் வணக்கப் பாட லாகப் பரிணமித்து, சொற்போர்க்ளில் இடம் வாங்கி, படக் காட்சிகளில் சந்தித்து, காபி விடுதிகளில் எதிர்ப் பட்டு, நூல் நிலையங்களில் அருகருகே நெருங்கி, கடிதத் தூதர்களாக மாறி, ஊர் போகும் போது புகை வண்டி நிலையங்களில் வழி கூட்டி யனுப்புவது அல்லது வேண்டு மென்றே உடன் செல்வது போன்ற நிகழ்ச்சிகளாக வடி வெடுத்து..................அப்பாடா, இவ்வளவு வேலைகள்! இதிலே வெற்றி பெறுபவரும் உண்டு, வீழ்வை விருதாக அடைபவர் ஏராளம்! இவைகள் சாதாரண வலைகள் —இன்னும் சில பிரிக்க முடியாத வலைகள் உண்டு கஜேந்திராள்வாரைப் பிடித்த முதலைப் பிடியைப் போலப் பிடித்துக் கொள்ளும். ஆண்டவனின் சக்கரமும் சக்தி யற்று விடும்! அது கட்சி யார்வம் எனுங் கடுமையான வலை—இது மாட்டி விட்டால் கழுத்தில் விழுந்த மாலை கழற்ற முடியவில்லை என்று பாடுகிற அளவு பிரிக்க முடியாதவாறு பிடித்துக் கொள்ளும். வலைகளிலே எளி தான வலை, சற்று வெற்றிதரக் கூடிய வலை இது! இன் னும் பேச்சால், பாட்டால், எழுத்தால், உடல் வனப் பால், உடை வெளுப்பால், பணப் பெருக்கால், பணி

விடைகளால், சிரிப்பால், சிந்தனையால்............மயக்க முனைவர். இது இயற்கை! இவை கிடக்கட்டும். தங்கப் பனுக்கும் தாமரைக்கும் தொடர்பு ஏற்பட்டதற்குக் காரணமே விசித்திரமானது, விளக்கப்போனால் விபரீத மானது!

தாமரை சற்றுக் கண்டிப்பானவள். மாணவர்களின் கேலிகளுக்கும், கிண்டல்களுக்கும் அஞ்சி, விடக்கூடியவ ளல்ல. சற்றுத் துடுக்காகக் கண்டித்து விடுவாள். அதனால் மாணவர்களுக்குக் கொஞ்சம் பயம், தா—மரை என்று பிரித்து தாவும் மான் என்று கொள்வார்கள் புலவர்கள். அவளும் தாவும் மான் தான்—ஆனால் கொஞ்சம் வித்தியாசம்! சலசலப்பைக் கண்டு தாவி யோடி விடமாட்டாள்.

அவள் ஒரு நாள் கல்லூரி முடிந்து விடுதியை நோக் கித் திரும்பி வந்து கொண்டிருந்தாள். உயர்தரப் படிப் பால் கிடைப்பது ஒழுக்கம் என்ற உயரிய பண்பாட்டைக் கெடுப்பதென்றே 'கங்கணங்' கட்டிய சில உதிரிகள் கேலி பேசிக் கொண்டே வந்தனர். பொறுக்கிற அளவு வரை பொறுத்தாள் பொறும வேண்டிய நிலைவரை போய் விட்டனர் மாணவ உடை போர்த்த காலிகள். திரும்பி னாள். மறைந்து விட்டனர். எதிரில் வந்தான் ஒரு அழ கிய மாணவன். கண்டபடி தாக்கினாள்.

"நீங்கள் எல்லாம் மாணவர்களா, மந்திகளா?"

வந்தவன் விழித்தான். விட்டாளா அவள்?

"உங்கள் சகோதரியை இப்படிக் கேலி பேசினால்..."

"நிறுத்து..." என்று துடித்தான்.

"முட்டாள்" என்றாள் முன் பின் யோசியாமல்!

விட்டான் ஒரு அறை அவளது அழகிய கன்னத்தில்- அவ்வளவுதான், அவன் நிதானமாக நடந்துகொண்டிருந்

தான். வேறொரு மூலையிலிருந்து மீண்டும் பழைய குரல்கள்—அப்பொழுது தான் அவளுக்குப் புரிந்தது தான் தவறு செய்து விட்ட உண்மை! அதற்கு மேல் அழுகை வரவில்லை. ஒரு பாகம் வளர்ந்தது. அறைந்த தங்கப்பனை அணைக்க எண்ணம் பிறந்தது. எண்ணம் வளர்ந்தது. மறுமுறை அவனை எப்படியும் சந்திப்பதென்ற முடிவுடன் சென்ருள்.

மறுநாள் கல்லூரிப் பூங்காவில் அவனைச் சந்தித்தாள். அவன் இவளை ஏறிட்டும் பார்க்கவில்லை. எதையோ சிந்தித்துக் கொண்டிருந்தான். அவளுக்கு அவனைப் பார்த்ததும் சிரிப்பு வந்து விட்டது-எந்த நேரத்திலும் சிந்தித்த வண்ணமே இருக்கிருனே, சிந்திக்க என்ன செய்திதானிருக்குமோ என்று எண்ணினுள். சிரித்து விட்டாள். களுக்கென்ற ஒலி காமத்திருவிழாவின் அதிர்வேட்டாக இருக்கலாம். தங்கப்பன் அவ்விழாவின் அசையாத சாமியாக இருந்தால்—ஆனுல் அவ்வொலி கேட்டும் திரும்பவில்லை. அவன் இங்கு மட்டுமல்ல, இதவாவது ஏகாந்தமான இடம், வகுப்பறைகளிலே கூட அப்படித்தானே சிலையாகி வருகிருன். விரிவுரையாளர் ரோமிலே இருந்தால், அவன் தமிழகத்தின் ஒரு மூலையிலுள்ள தொட்டியத்துப் பொதுக் கூட்டத்திலிருப்பான். 'ஆசகிள்' என்ருல் என்ன வென்று விளக்கிக் கொண்டிருந்தால், இவன் சோதிடம், சாத்திரம், மந்திரம், தந்திரம் இவைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்வான். அவன் சிந்தனையாளன்.

"தோழர் தங்கப்பன்......"

திடுக்கிட்டுத் திரும்பினுன் தங்கப்பன்.

"மீண்டும் திட்டப்போகிருயா?" என்ருன் வெறுப்போடு.

"இல்லை, மறுமுறையும் ஒரு அறை"

"என்ன...?"

"இன்னொரு கன்னம் பாக்கியிருக்கிறது!"

"கோபத்தில் செய்து விட்டேன். மன்னிக்க வேண்டும்."

"மன்னிப்புக் கேட்க வந்தவள் நான். என் தவறைப் பொருட்படுத்தக் கூடாது"

பிறகு இருவரும் இரட்டையராயினர். கேலி புது வடிவெடுத்தது. காதல் பாதை விசித்திரமானது. அது கரடுமுரடானது. காதல் பாதை மலர்ப் படுக்கையன்று என்று அன்றோர் நாள் கவிஞனொருவன் சொன்னான். அது லைலா மஜ்னு நடந்த பாதை, அம்பிகாபதி அமராவதி உலவிய பாதை, ரோமியோ ஜூலியட் சந்தித்த பாதை ............பில்கணீயம் பயின்ற பாதை, திரையைக் கண்டு திகைக்காத பாதை, சுவரைக் கண்டு பதறாத பாதை, வேலியைக் கண்டு வெகுண்டு விபரீதத்தில் இறங்காத பாதை... அந்தப் பாதையில் இருவரும் நடந்து கொண்டிருக்கும் பொழுது, கேவலம் இந்த 'வால் முளைக்காத' மாணவர்களின் கிண்டல் குரலும், கேலி வார்த்தைகளும் காதில் விழுமா? த+தா ஒற்றுமை என்று சுவரிலும், உட்காரும் பலகைகளிலும், எழுதும் சாய்வுமேசைகளிலும் எழுதி விட்டால் அவர்கள் பாதை தடைப்பட்டு விடுமா?

மாணவர்களுக்குக் கவிதா மண்டபம் ஒன்றுண்டு. அதனை 'ஜி' பிளாக் என்று அழகு பெயரிட்டு அருமையாக அழைப்பார்கள்! அங்கேதான் அவர்களின் கற்பனை வெள்ளம் கரைபுரண்டோடும். கவிதா சக்தியும், எழுத்து வன்மையும் வெளியாகும்! காகிதங்களும், பேனாவும், கையாலாகாதவர்களுக்குத் தானே தேவை! அவர்களுக்கு ஒரு கரித்துண்டு போதுமே! கவிதை பிறக்கும்-அதுவசையாக இருக்கலாம், இசையாகவும் இருக்கலாம். ஒழிக என்

றும் முடியலாம், வாழ்க என்றும் இறுதியில் இருக்கலாம் அநேகமாக அகநானூற்றுக் கவிராயர்கள் தான் அங்கு தங்கள் கைச்சரக்கைக் காட்டுவார்கள். அவள் இப்படி, இவன் போக்கிரி, அவனும் அவளும் 'லப்பு' ஆகிருர்கள் ......இப்படி இலக்கியச் சொற்களால் எழிற் சித்திரங்கள் தீட்டி விடுவர். அது மட்டுமா? இன்னும் பல வகைக் கவிஞர்கள் உண்டு. கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டி விட்டால் மண்ணில் குமரருக்கு மாமலேயும் சிறு கடுகாம் என்று 'காப்பி' யடிக்கும் புலவர்கள் இருக்கிருர் கள். அங்கு இந்த தாக்கு அதிக இடம் இருக்கும். தனிமை எப்பொழுதுமே சற்றுத்தாறுமாருன எண்ணங் களுக்கு இடங் கொடுக்கும் போலும்! இல்லாவிட்டால் கனவில் கூட பாழயதாகப் பார்க்காத தோழர்களும் 'பாத்ரூமி'லும் 'லட்ரீனிலும்' பாடுவானேன்?

தாமரை அடிக்கடி சொல்வதெல்லாம் படிப்பு, படிப்பு...........! அவள்வாங்குகிருளே, அதுபோதாதா? கண்ணப்பர் தான் உயிரை வாங்குகிருர் என்ருல் அதே போல தரமரையும் ஆரம்பித்து விட்டாள். தங்கப்பனின் கொள்கைகள் தவறென்று சொல்கிருளா? இல்லே. அவைகளே முழுக்க முழுக்க உண்மை, உடனடியாக நடை முறைக்குக் கொண்டு வரப்பட வேண்டியவை என்று கூறுகிருள். ஆனல் தங்கப்பனைத் தடுக்கிருள்!

அவள் சொல்வதிலும் உண்மை இருக்கத் தான் செய்தது! தங்கப்பன் கொள்கைகளில் பெண்கள் முன் னேற்றமும் ஒன்று—அதிலும் கலப்பு மணத்தைப்பற்றிப் பேசாத மேடையில்லே; கூருத காரணங்களில்லே. அதை நடத்திக் காட்டினல் எவ்வளவு வெற்றி...........தாமரை ஒரு சாதி, அதுவும் தாழ்த்தப் பட்ட சாதிகளில் ஒன்ருன வன்னியர், தங்கப்பன் சாதியிலே மூத்த முதலியார்! இவர்கள் மணந்து கொள்வதென்ருல் முடியுமா? சமூகம் இடந்தருமா? சாதி வேலிகள் வளேந்து கொடுக்குமா?

சனுதனிக்ள் சரிந்து விடுவரா? உற்ருர் பெற்ருர் ஒப்புவரா? சுற்றத்தார் சம்மதிப்பரா? ......மாட்டார்கள். இதற்காகப் போராடி இதிலே வெற்றியும் பெற்று விட்டால் எத்தனே இளங்காதலர்களுக்கு வழிகாட்டியாகலாம். ஏன் இதைச் செய்யக் கூடாது? எத்தனே 'சொன்மாரிகள்' சோரம் போகின்றனர் இந்த வகையில்? எத்தனே தலைவர்கள் பின் வாங்குகின்றனர்? பேசிப் பேசி இருமலேயும் காசத்தையும் வருவாயாக்கிடாது, செய்து செய்து பல சீர்திருத்தங்களுக்கு வழி காட்டியென்ற புகழைச் சம்பாதித்தால்என்ன? சொல்வது யாருக்கும் எளிது, ஆனல் சொல்லிய வண்ணஞ்செய்தல் அரிது என்ருர் தமிழரின் சட்ட நிபுணர்-வள்ளுவர். அதுவும் மேடையேறி, அழகுமொழியில், அடுக்குச்சொல்லில் அரியகருத்துகளேச் சொல்லிக் கைதட்டுதலேயும் தலேயசைத்தலேயும் பெறுவது எளிது—கொஞ்சநாள் பழக்கமே போதும்! ஆனல் சொன்ன கொள்கைக்ளே நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும். தாமரையின் வாதத்தில் தவறென்ன? கண்ணப்பரின் வாதம் ஒரு புத்தகம், தாமரையின் பேச்சு அதிலே ஒரு அத்தியாயம்—அவ்வளவு தான் வேறுபாடு!

தங்கப்பன் கல்லூரியில் பேசுகின்ருன் என்ருல் முதல் வரிசையில் தாமரை பூத்திருப்பாள்! மாணவர்களிடையே அதுவும் கேலிக்கேற்ற நிகழ்ச்சி தான். இருந்தாலும் திங்களேக் கண்டு மலர்வது போல தங்கப்பனேக் கண்டு முகம் மலர்வாள் அவள். ஆனல் எப்பொழுதும் கூட்டம், மாநாடு, பேச்சு......என்று அலேவதை அவளால் பொறுக்க முடியவில்லே. அவள் தடுத்தாள். அதுவும் கடைசியாக வேலே நிறுத்தத்தில் பங்கெடுத்துக் கொள்வதை முழுக்க முழுக்க, மூச்சுக்கு மூச்சு எதிர்த்தாள். அவனுடைய முடிவு அணுவுக்கு அணு தவறுடைத்து என்று இடித்திடித்துக் கூறினள்.

நீக்கப்பட்ட மாணவர்கள் மூவரும் பரிதாபத்திற்குரியவ ரல்லராம். முக்கியமான காரணம் அவர்கள் பெண்கள் விடுதியில் இரண்டு முறை மதிலேறிக் குதித்து மானங் கெடுத்துக் கொண்டார்களாம்—இந்தக் காரணத்தை ஒரு பெண் சொல்லும் போது அது ஒரு சார்புத் தீர்ப்பென்று தானே நினைக்க வேண்டியுள்ளது. தங்கப்பன் அப்படித் தான் நினைத்தான். அதனால்தான் அதில் துணிந்து இறங்கினான்.

கல்லூரியை நெருங்கினான். சிகர மண்டபத்திலிருந்து மூன்று மணி அடித்தது. விடுதிக் கதவுகள் பயங்கரமாக வழி மறித்து நின்றன. இரவில் எவர் நுழைந்தாலும் அதட்டுங் குரலுக்கு விடையளித்து விட்டுத்தான் போக வேண்டும். தங்கப்பன் ஏழை பங்காளன். அங்குள்ள தொழிலாளர்கள் அத்தனை பேரும் அவன் பக்கம்—முன்னொரு முறை அவர்களின் சம்பள உயர்வுக்காகப் போராடினான். அதனால் 144 அவனைத் துரத்தி வந்த செய்தி அவர்கள் அறிந்ததே. ஒரு வாரம் கல்லூரியை விட்டு 'சாதிக்கட்டு' கட்டி விட்ட விபரீதமும் ஊரறிந்த இரகசியம்! ஆகவே, காவல்கார கந்தசாமி தூக்கத்தை விட்டுத் துடித்தெழுந்து வழி விட்டான். தங்கப்பன் தனது நண்பர்களையெல்லாம் விடிவதற்குள் சந்தித்தான்.

காலை மலர்ந்தது. வேலை நிறுத்தச் செய்தி காட்டுத் தீ போலப் பரவியது. எங்கெங்கும் கூட்டம் கூட்டமாக மாணவர்கள் நின்று கொண்டிருந்தனர். நேரம் வளர வளர மாணவரிடையே ஆரவாரம் பெருகியது. முதல் மணி யடித்தது. கை தட்டினர். ஒருவருமே உள்ளே நுழையவில்லை. ஆசிரியர்கள் மட்டும் வெவ்வேறு வழிகளில் நுழைந்து சென்றனர். மாணவரிடையே ஒரே கூச்சல்...பிறகு 'பிரின்சிபால்' கார் வந்தது. கல்லூரிக் கட்டிடங்களைச் சுற்றியது. மாணவர்கள் அஞ்சியதாகத் தெரியவில்லை. இரண்டாவது மணியடித்தது. என்ன ஆச்

சர்யம்...பெண்கள் படை அணிவகுத்து வருவது போல வந்தனர். மாணவர்கள் கூவினர். குழப்பம் பரவியது. தங்கப்பனைத் தேடினர். அவன் வந்தான். அவன் விழிகள் கல்லூரியில் நுழைந்த மாணவிகள் மீது மேய்ந்தன. அவன் விழிகளில் தீப்பொறி...ஊழிக்கால நாட்டியமாடும் சிவன்சிலை போலானான். ஏன்? தாமரை முன் வரிசையில் போய்க் கொண்டிருந்தாள்.

மான் கூட்டத்தைக் கண்டோடும் சிங்கம் போல ஓடினான். போகும் மாணவிகள் அத்தனை பேரையும் வழி மறித்து நின்றான்.

"நீங்கள் செய்வது சரியா?"

"உங்கள் முடிவு தவறு என்பதை நாங்கள் காட்டுகிறோம்"

"உங்களைப் போன்ற மூன்று மாணவர்களின் வாழ்வு பாழாகலாமா?"

"மூவரின் வாழ்விற்காக ஒரு கல்லூரியின் வாழ்வில் களங்கம் வரலாமா?"

"களங்கம் பெரிதல்ல தோழியரே, தண்டனை தூக்குத் தண்டனையை விடக் கொடியது"

"அது உங்கள் நினைப்பாக இருக்கலாம்"

"உங்களது திட்டம்தான் என்ன?"

"எங்கள் வழியை விட்டால் தெரியும்"

"சரி, இதற்குத் தலைவி யாரோ?"

"அதோ"

எல்லோரும் ஒரே நேரத்தில் கூறினர். அங்கு தாமரைக் கண்ணி நின்று கொண்டிருந்தாள்.

"தாமரை, உன வேலையா? என்னல் நமப முடிய வில்லையே!"

"இப்பொழுதாவது நம்புங்கள்..."

ஹா.........

ஒரு அறை...அவள் கன்னத்தில்! அவன் சிட்டாய்ப் பறந்து விட்டான்! மாணவத் தோழிமார்கள் திகைத்து விட்டனர். ஆனல் கல்லூரிக்குப் போகவில்லை. திரும்பி விட்டனர். இங்கு நடந்ததை அறியாத மாணவர்கள் வெற்றி யடைந்து விட்டதாக எக்காள மிட்டனர்.

அத்தனை வகுப்பறைகளிலும் ஸ்ரீமான் கர்லி பெஞ்சு கள்......'பிரசன்ட் சார்', 'ஹியர் சார்' கொடுத்துக் கொண்டிருந்தன. விரிவுரையாளர்கள், விழித்துக்கொண் டிருந்தனர். கல்லூரித் தலைவர் பார்வையிட்டார். மாண வர்களின் வெற்றியைக் கண்டு வேதனைப் பட்டார்.

மாலையில் பரமானந்தம் பிள்ளையிடமிருந்து தங்கப் பனுக்கு அழைப்பு வந்தது...மாணவர்கள் ஏக அமர்க் களம் பண்ணி அவனை அனுப்பினர். அவன் 'பிரின்சி பால்' பிள்ளை வீட்டிற்கு நேராகச் சென்ருன். தங்கப்பன் அவாது அறையினுள் நுழைந்தான்.

"தங்கப்பா, வா..."

என்று வரவேற்ருர். அது மட்டுமல்ல, என்றும் இல்லாத வழக்கமாக நாற்காலி கொடுத்து அமரச்செய்து காபியுங் கொடுத்தார்.

"இன்றைய வேலை நிறுத்தத்திற்கு நீ தான் தலைவ னமே!"

"மன்னிக்க வேண்டும். தலைவனல்ல, காரியங்களை முன்னிருந்து நடத்தினேன்"

"அது கிடக்கட்டும். இதற்குக் காரணம்...?"

"நீங்கள் நீக்கிய சங்கரன், சதாசிவம், சரவணன் ஆகியோரை மீண்டும் சேர்க்க வேண்டும் என்பதற்காக!"

"அவர்கள் ஏன் நீக்கப்பட்டார்கள், தெரியுமா?"

"தெரியும். விடுதியின் விதிகளை மீறினர்!"

"விபரமாக, விளக்கமாகத் தெரியுமா?"

"தெரியாது..."

"தெரிந்திருக்க வேண்டிய அவசியமில்லை. அவைகளை நான்தான் மறைத்து விட்டேன். அவர்கள் செய்த குற்றங்களைக் கூறுகிறேன். அவர்கள் மீண்டும் சேர்க்கப்பட வேண்டியவர்களா என்று நீயே தீர்ப்பளி......!

சங்கரன் என்பவன் காமக்களியாட்டக்காரன். அவன் இங்கு மாலதியை மயக்கி, மட்டரக நடவடிக்கைகளில் ஈடுபட்டு அவள் வயிற்றிலே ஒரு சிசுவையும் கொடுத்து விட்டான். அதனால் அவள் தற்கொலை செய்து கொண்டு, விட்டாள். அது சம்பந்தமான வழக்கு உருவாகிக்கொண்டு வருகிறது. நான் விலக்கியிருந்தாலும், விலக்கியில்லா விட்டாலும் அரசாங்க விருந்தாளியாகியிருப்பான். இன்னும் ஒருவாரத்தில் அந்த உண்மை தானே வெளியாகும்!

மற்ற இருவரும் கல்லூரி மாணவர்களின் ஈருருளை வண்டிகளைத் திருடுவதும், அதிலுள்ள 'டைனமோ' விளக்குகளைக் களவாடுவதுமாக இருந்தனர். மேலும் நண்பர்களின் அறைகளிலே உள்ள மோதிரம், 'ரிஸ்ட் வாட்சுகள்,' பணம்...இப்படிக் கொள்ளை யடித்து வந்தனர். அவர்கள் ஈடுபட்ட இரண்டு மிதிவண்டிகள் வழக்கு சம்பந்தமாக கைதி செய்ய 'வார்ண்ட்' பிறப்பித்து விட்டார்கள்.

இவர்கள் இங்கு இருக்க வேண்டியவர்களா? மீண்டும் மாணவரார்க்கத் தகுதியுடையவரா?''

என்று கேட்டார். தங்கப்பன் திகைத்துப் போனான். அவனுக்கு இந்த விபரங்கள் தெரியாது போன விந்தையை எண்ணி எண்ணி வியந்தான்.

பரமானந்தம் பிள்ளை அத்தோடு விட்டாரா? மாணவர்கள் படிக்க வருகிறார்கள். ஓரளவு உரிமையுடன் இருக்க வேண்டியதுதான். ஆனால் பிரஞ்சுப் புரட்சி செய்யவா வருகிறார்கள்? இங்கே படிப்புமட்டுமல்ல கற்றுக் கொள்ள வேண்டிய பாடம், ஒழுக்கம், அடக்கம், நேர்மை போன்ற உலக மகா உண்மைகள்...! வேலை நிறுத்தம் என்பது ஒரு ஒப்பற்ற ஆயுதம்—திருமாலின் சக்கரமும், பரமசிவனாரின் திரிசூலமும், முருகரின் வேலும், இந்திரனாரின் வஜ்ராயுதமும் தோற்றாலும் தோற்கலாம்...ஆனால் இந்த ஆயுதம் தோற்காது! எனினும் பயன் படுத்தும் இடம், நேரம், ஆள் இவைகளைப் பொறுத்தது வெற்றியும், தோல்வியும்! மாணவர்கள் கண்டதற்கெல்லாம் வேலை நிறுத்தம் என்று அதன் சக்தியை, வல்லமையைக் குறைத்து விட்டார்கள். படியாத தொழிலாளரிடம் இந்த ஆயுதம் கொடுக்கப்பட்டது—அது பேசமுடியாத எருதும், குதிரையும் சண்டித்தனம் செய்து சவாரி வண்டியில் நிற்காதது போல காரியம் வெற்றியானது! படித்தவர்களும் இதைக் கையாளக் கையாள அந்த வாளின் கூர்மை மழுங்கி விட்டது என்றே சொல்லலாம்! அதுவும் இந்த மாணவர்களின் விளையாட்டிற்கெல்லாம் அது பயன்படுத்தப்பட்டதால் கூர்மை மழுங்கியதுமட்டுமல்ல, 'பொக்கையும் போரையுமாய்' விட்டது! சிலர் தங்கள் சுய விளம்பரத்திற்குப் பயன்படுத்தினர். சிலர் கட்சி வளர்ச்சிக்குக் கையாளாக்கிக் கொண்டனர்.

'கங்காதரா, மாண்டாயோ'........என்றொரு கதை. ஒருத்தி கங்காதரா மாண்டாயோ என்று அழுது கொண்

டிருந்தளாம். ஊரிலுள்ளோர் அனைவருங் கூடி ஒப்பாரி வைத்தனராம். கடைசியில் விசாரித்துப் பார்த்தால் இறந்தது கங்காதரா என்ற பெயரால் அழைக்கப்பட்ட கழுதையாம்! விபரந் தெரியாமலே ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்யப்பட்டதென்ருல் இதை விடப் பைத்தியக்காரத்தனம் வேறுண்டோ?

பிறகு பரமானந்தம் வேறு பக்கந் திருப்பினர் தனது பேச்சை......தங்கப்பன மீது வரும் புகார்களைச் சுட்டிக் காட்டினர். அவனது அண்ணனின் போக்கைக் காட்டி உபதேசமொழி புகன்ருர். மேலும் கடைசியாக வந்துள்ள ஒரு குற்றச் சாட்டைச் சொன்னர்.

"நீ ஒரு பெண்ணை அறைந்து விட்டாயாமே!"

"என்ன......?"

"பெண்கள் அத்தனை பேரும் கையொப்ப மிட்ட விண்ணப்பத்தை அடிபட்டபெண்ணே வந்து அதுபொய் யென்று சொல்லி வாங்கிக் கொண்டு போய் விட்டாள்"

இப்படி உரையாடுகையில் பணிமகன் ஒரு கட்டுப் 'பேபர்களை'க் கொண்டு வந்து வைத்தான். அவை முக்கியமான கடிதங்கள் என்று புரிந்து கொண்டான் அவன். அவைகளைப் பார்த்துக் கொண்டே வந்த பொழுது அவரின் முகம் சட்டென்று வாடி விட்டது. அதற்கு மேல் அவர் கடிதங்களைப் புரட்டவில்லை. நிறுத்தி விட்டார். அவர் கண்களில் நீர் கூட வந்து விட்டது.

"தங்கப்பா.........உனது போக்கும செயலும் எனக்குப் பிடித்தவை. ஆனல் உலகு ஏற்றுக் கொள்ள வேண்டுமே! உன் கொள்கைகள் மிகத் தீவிரமானவை. காலமே சீரணிக்கத் தத்தளிக்கக் கூடியவை! அவைகளை உன் நெஞ்சத்திலே மட்டும் வைத்திருந்தால் கூட ஆபத்தில்லை. வெளியில் சொன்னய். சொல்வது கூட ஆபத்தில்லை. கல்லூரி மேடைகளில் பேசினல் ஒரு பத்து மாணவரின்

விரோதம் வரும். ஒரு சில 'முக்த்துப் பிறவிகளின்' ஆசிர்வாதமில்லாமல் போகும்! அதனைக் கூட நான் சமாளித்து விடுவேன். ஆனால் தமிழகம் முழுவதும் சுற்றினாய். பறை சாற்றினாய். உன் பெயர் வெளியில் தெரிந்தது. இதோ விபத்து வந்து விட்டது. அதனால்தான் கண்ணப்பரிடம் அடிக்கடி சொன்னேன். அவர் வார்த்தைகளைத்தான் நீ கேட்பதில்லையாமே!

முன்னர் ஒரு முறை உனக்குக் கொடுக்கப்படும் சம்பளச் சலுகை நிறுத்தப்படும் என்றுவந்தது. நான் தடுத்துரைத்தேன். தகுமுரை எழுதி நிலைக்க வைத்தேன், இப்பொழுது நான் என்ன செய்யட்டும்?"

"தாங்கள் கூறுவது விளங்கவில்லையே...?"

"உன்னை உடனே கல்லூரியைவிட்டுநீக்கவேண்டுமாம்".

"ஏன்?"

"நீ ஒரு பயங்கர மனிதனாம்"

"என்ன......படிப்பைக் கெடுப்பதா?"

"அதனை நீ முன்னரே யோசித்திருக்க வேண்டும்"

அரசாங்கத்தின் ஆணை பிறந்து விட்டது. தங்கப்பன் என்ற தமிழர் கல்லூரி மாணவனது நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டனவாம். அத்தனையும் ஆட்சியாளரைக் கவிழ்க்கும் சதிக்கூட்டத்துத் திட்டங்களின் மாற்று வடிவங்களாம். அவைகள் கல்லூரியில் பரவினால் வருங்கால மக்கள் விஷ விருட்சங்களாகத்தான் போவார்களாம். ஆகவே அந்த மாணவனை நீக்கி விட வேண்டுமாம் ......என்ன நீதி...என்ன தருமம்!

அவன் என்ன அப்படி பயங்கரத் திட்டங்களைப் பரப்பிவிட்டான்? சாதி கூடாது என்றான். இதைத் தடுத்துச் சொல்ல, குளத்தங்கரைக் குப்பண்ணுக்களும் இன்று மனந்துணிவதில்லை. மதம் மாசு படிந்து விட்டது. உருக்கிச்

சேர்த்துப் புதுப்பிக்க வேண்டும் என்ருன். ஞானிகளும் சித்தர்களும் பாடி விட்டுப் போன பாடல்களின் பொழிப்புரை அது. கோயில்கள் களங்கம் நிறைந்த கள்ளர் சாவடி என்று சாடினுன். நாம் ஒருவர் இருவராகப் பேசிக் கொள்வதை அவன் கூட்டங் கூட்டிச் சொன்னுன். ஆண்டவன் உருவமற்றவன், ஒருவன், படையல் விரும்பாதவன் என்று பறை சாற்றினுன். இவை சேதங்கள் தந்த முடிபாம்! தாய் மொழி வாழ வேண்டும் என்ருன். தன்னினம் தாழக்கூடாது என்ருன். ஆண்ட இனம் அடிமை இனத்திடம் அடங்கிய கதையைச் சற்று அழுத்தமான குரலில் ஆதாரங்கள், சரித்திர உண்மைகள், நடைமுறை நிகழ்ச்சிகள் என்ற பக்க வாத்தியங்கள் புடைசூழ 'அரசியல் கச்சேரி' நடத்தினுன். உலக வரலாறு அடிக்கொரு முறை ஒளி விடுகிற உண்மைதானே இது! சரித்திரம் பல இடங்களில் இரத்தக் கறை படிந்துள்ள ஒரு ஒட்டுத்துணி. அந்த, இரத்தக் கறைகள் ஏன் ஏற்பட்டன என்று கேட்டால் இனப் போட்டி என்று சொல்லுமே! அது மட்டுமல்ல; தன் நாடு வாழ, தன் இனம் உயர, மொழி செழிக்க, கலைகளின் நிலைநலமடைய, பண்பாடுகள் சிறக்க, பழக்க வழக்கங்கள் கொழிக்க, தன் நாடு தனித்திருக்கட்டும் என்று யோசனை சொன்னுன். அதுவும் பொதுமக்களின் ஆராய்ச்சிக்கு விருந்தாக அளித்திருப்பான். அதற்குப் படை திரட்டி, இரகசிய திட்டங்கள் போட்டு, தலைவர்களைச் சுட்டுக் கொன்று விடத் திட்டங்கள் தீட்டவில்லையே! அப்படித் தீட்டியவர்கள் கூட நாட்டிலே சலுகைகளுடன் வாழ்கிருர்களே. தங்கப்பனைக் கல்லூரியைவிட்டு நீக்கியது நீதியா?

இல்லை, ஒருகாலும் இல்லை. இதை யார் எடுத்துச் சொல்வது? ஏற்றுக் கொள்பவர் எவர்?

"அப்படியானுல் நான் விலகத்தான் வேண்டுமா?"

தங்கப்பனின் குரல் தழ தழத்தது.

"நிலைமைகெட்ட ஆளவந்தார்களைப் பார்த்துக்கேள், இந்த கேள்வியை"

"வேறு வழி உண்டா......?"

"இல்லை தங்கப்பா........."

"................................."

போகும்போது ஒரு அறிவுரை தந்து விட்டுப்போ; இந்த மாணவர்களுக்கு—தாய் நாட்டைத் தலையில் தூக்கிக் கொண்டு இருப்பதாகச் சிலர் உண்மையாகவே, பலர் வேடிக்கைக்காக பேசுகிறார்களே அவர்களைச் சற்று அடங்கி அறிவைப் பெருக்கிக் கொள்ளச் சொல்! நீ வெளியில் சென்றாலும் உன் புகழ்மங்காது. நீ அறிவாளி. உலக அறிஞர்களிலே ஒருவனாக வரக்கூடியவன். ஆனால் உன்னைச் சுற்றியுள்ளவர்கள் மயிலைக் க்ண்டு தானாட முனையும் வான்கோழிகள்! அவர்களுக்குச் சொல்"

"..................................."

தங்கப்பன் எழுந்தான். பரமானந்தம் வழியனுப்பினார் வருத்தத்தோடு......! அவர் கண் முன் கண்ணப்பர் தோன்றினார். தன் தம்பியை இப்படிக் கெடுத்து விட்டீர்களே என்றூ கேட்டால் என்ன விடை சொல்வது என்று புரியாமல் தத்தளித்தார்.

தங்கப்பன் வெளியில் வந்தான். இருட்டி விட்டது. குளிர்காற்று வேறு அடித்தது. அவன் நடந்தான். மேலும் மேலும் நடந்தான். எதிரில் பச்சை, சிவப்பு விளக்குகள் ஒளி விட்டன. அது புகைவண்டி நிலையம் என்று புரிந்தது. தங்கப்பன் எங்கே போகிறான்? என்ன செய்வதாகத் திட்டமிட்டான்? அது அவனுக்கே தெரியாது!

# பகல்

அருளப்பனை இப்பொழுது கண்ணப்பரே பார்த்தால் கூட அடையாளம் தெரியாது. அவனது பெற்றோர்கள் பார்த்தால் பிரமித்திருப்பர். அவன் அப்படி மாறியிருந் தான். பட்டாளத்து உடைகள் அவனை உருமாற்றி விட் டன. அவன் தனது கூடாரத்தில் உட்கார்ந்து கொண் டிருந்தான். வெண்ணெய் தடவிய ரொட்டியைக்கடித்துத் தின்றுகொண்டே அன்றைய பத்திரிக்கைகளைப் புரட்டிக் கொண்டிருந்தான். எதிரில் ஆவியடித்துக்கொண்டிருந்த தேநீர் இருந்தது.

சுபேதார் அருளப்பன் என்றால் படைவீரர்களுக்குப் பிரியமானவன் என்றொரு பொருள் கூறலாம். பெயருக் கேற்ப அருளால் அனைவரையும் அணைத்து ஆதரவு பெற ருன். அவன் வார்த்தையை யாருமே மீற மாட்டார்கள். மேலதிகாரிகளும் அவனைக் கலந்துதான் எந்தப் புதுக் கட் டளையையும் பிறப்பிப்பர். ஏனெனில் அவன் அனுபவ சாலி—அதுவும் சாதாரண சிப்பாயாக இருந்து அடிபட்டு, மிதிபட்டு உயர்ந்தவன். அவனுக்கு எல்லாம் தெரியும். மூன்றாண்டு அனுபவம் என்றால் முப்பது ஆண்டு வாழ்க்கை மிதியலின் தொகுப்பு. பட்டாளத்து வாழ்க்கை அப்படித்தான்! ஒரு ஆண்டு ஒரு யுகம் போலிருந்தது என்று எழுதி வருகிற பட்டாளத்துக் கடிதங்கள் எத்தனை பார்க்கிறோம்? ஓய்வு விட்டு வீட்டை நோக்கி வருகிற போது எவ்வளவு உற்சகம், உத்வேகம்...! அதனால்தான் அப்படிக் கூறினால் தவறில்லை யென்றுணர வேண்டும்.

அருளப்பன் கோயம்புத்தூரில் சாதாரண சிப்பா யாகத்தான் சேர்ந்தான். அவன் அறிவு சும்மாயிருக்

கிறதா? எந்த வேலையைக் கொடுத்தாலும் மிக அழகாக, விரைவாக முடித்து விடுவான். மற்றவர்கள் அவனைப் பொருமையால் எரிக்கிறவரை தனது கடமைகளை மிக எளிதில் தெளிவாகச் செய்து விடுவான். ஆகவே தான் சட்டென்று சுபேதாராகி விட்டான்! ஆனால் அவன் சுபேதாரான கதை சாதாரணமானதல்ல. அது ஒரு தியாகியின் திவ்ய சரித்திரம்! அவன் ஒரு தியாகய்யா! அப்படித்தான் அந்த நிகழ்ச்சி சொல்லுகிறது.

சுதந்தரம் வந்ததும் சிலருடைய சொந்த புத்தியும் கப்பலேறி விட்டது! இல்லாவிட்டால் சொந்த நாட்டில் சகோதரர்களுக்குள் அடித்துக் கொள்வார்களா? மதம் ஒரு மட்டரகமான எழுத்தாளன். அவன் எழுதிக் குவிக்கும் எழுத்துக்கள் எல்லாம் சண்டை, வம்பு, அடி, உதை, குத்து, வெட்டு... இப்படித்தான் ஓலமிடுகின்றன! இந்துவாம், முஸ்லீமாம்—மத வேற்றுமை! மத வேற்றுமைகள் இருக்கட்டும். உயர்வு தாழ்வு பேசலாம். ஆனால் அதற்காக ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்வதா? ஊரைக் கொளுத்துவதா? பெண் குலத்தைச் சீரழிப்பதா? சிசு வதை செய்வதா?...அதோ அல்லா அழுகிறார், சிவனார் தேற்றுகிறார்! இதோ திருமால் தேம்புகிறார், ஏசு இன்மொழி கூறுகிறார்!

உலகத்திலே வெறியாட்டம் ஆடிய போர்தான் முடிந்து விட்டதே. பட்டாளத்தாருக்கு இந்த மாதிரியான கலவரப் பிரதேசங்களில் காவலிருக்கக் சட்டளை பிறப்பித்தனர். அப்படியே சிப்பாய் அருளப்பனுக்கு நவகாளிப் பகுதியில் வேலை கொடுத்தனர்.

மதவெறி மானங்கெட்ட மிருகவெறியாக மாறி ஆட்டம் ஆடி ஓய்ந்த நேரம்—உலக உத்தமர் காந்தியார் அங்கு வருவதாக வேறு வதந்தி...இந்த நிலையில் அருளப்பன் அங்கு அனுப்பப்பட்டான். எங்கும் கலவரக் குறிகளைக்

காணேம். கடைசியில் அந்தத் தங்க விக்ரகம் தனது பொக்கை வாய்ச் சிரிப்பை வீசிக்கொண்டு கோலூன்றி வந்து விட்டது...! அவர் முன்னல் மதவெறி மண்டியிட்டு விட்டது. மதத்தைத் தூக்கி யெறிந்து விட்டு 'மகாத்மாஜீ' என்று பணிந்தனர். 'பாபுஜீ' என்று அன்புரை கூறினர். காலை நேரத்தில் அந்த அழிவுக்காரர்களின் ஊழிக்கால நாட்டிய மாடப் பயன்படுத்திய பகுதிகளைக் கண்டார். கண்ணீர் சொரிந்தார். மகளை இழந்த கிழவி, மகனைப் பறி கொடுத்த பெற்றோர், சிசுவை இழந்த தாய், மனைவியை விட்டுப்பிரிக்கப்பட்ட கணவன், சொத்திழந்த குடும்பம், வீடிழந்தவர், பொருளைப் பறி கொடுத்தவர்... இப்படிப் பலருக்கும் ஆறுதல் கூறினர். அன்று மாலையில் ஒரு பொதுக் கூட்டம்—உத்தமர் எழுந்தார். உயிரான வார்த்தைகளை உதிர்த்துக் கொண்டிருந்தார். சிறிது நேரத்திற்குள் ஒரு குழப்பம்--சிப்பாய் அருளப்பன் மார்பிலே கத்தி வீச்சு...! இரத்தக் காட்டில் கிடந்தான்.

"அப்பா, ஏன் இந்தக் கோலம்?"

"என் கடமை தந்த பரிசு"

"என்ன......?"

"உங்கள் பிரார்த்தனைக் கூட்டத்திற்காக அவசரத்துடன் வந்து கொண்டிருந்த ஒற்றுமைக் குழுவின் தலைவர்கள் சந்திர சட்டர்ஜீமீதும், சர்வர்கான்மீதும் எங்கிருந்தோ கத்தி வீசப்பட்டது. கண்டேன். ஓடினேன். கடமையின் கட்டளைப்படி, தமிழகத்தின் பரம்பரை வழக்கப்படி மார்பைக் காட்டினேன்."

"நீ ஒரு தியாகி"

"அது தாங்கள்—தியாகிகளை, ஊருக்கு உழைக்கும் உத்தமர்களைக் காப்பாற்றத்தான் நான் அனுப்பப்பட்டுள்ளேன். என் கடமையைச் செய்தேன்"

உத்தமர்குறிபிட்டதுபோல அருளப்பன் தியகி தானு? தியாகி என்ருல் யாரைக் குறிப்பிடும் பெயர்...? தியாகத்தின் நிறம் என்ன? எடை எவ்வளவு? அளக்கலாமா?

இன்பம் என்ருல் என்ன? அது ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு பொருளாக, நிகழ்ச்சியாக, காலமாக அமையலாம்! ஒருவரின் இன்பம் இன்னொருவரின் துன்பமாக இருக்கலாம். மருத்துவ விடுதியில் இரண்டு நோயாளிகள் — ஒருவருக்கு சுரம், மற்றவருக்கு சுளுக்கு வலி! இருக்கும் மின்சார விசிறியைச் சுற்றிவிட்டால் வலிகாரர் முகம் மலர்கிருர். சுரக்காரர் முகங்கடுக்கிருர், சுளிக்கிருர். அது போலத்தான் தியாகத்திற்கும் சொல்ல வேண்டும்!

அரூபியான ஆண்டவனுக்கு எப்படி ஆறு தலைகள் பன்னிரண்டு கைகள், மூன்று கண்கள், யானைத்தலை, பாதி பெண்ணுடல், பெருச்சாளி வாகனம், மயிலாசனம், கருடாழ்வார் 'ஏரோப்ளேன்', காளை மாட்டு 'பிளஷர்கார்' .........கொடுத்தது தவரு அப்படித்தான் தியாகத்திற்கு சிறைச்சாலையும்சிப்பியேந்தலும், தடியடி தாங்கலும் நாள்முழுவதும் கூட்டம்கூட்டம் என்றுகூவுவதும், கொடி, பிடித்தலும், கோஷமிடலும்..................என்று உருவங் கொடுத்தது பெரும் பிழை! தியாகம் என்பது ஒரு பண்பு. அதன் அணு இல்லாத உயிரில்லை. சில உயிர்களில் அதிகம் அளவிலும், பலஉயிர்களில் குறைந்தஅளவிலும் இருக்கலாம். வெளிப்படும் நேரமும் வித்தியாசப்படலாம். மின்மினி, அகல், சிம்னி, 'பெட்ரோமாக்ஸ்,' '500 காண்டில் பவர் லைட்,' சூரியன்.........எல்லாம் ஒளி தருகின்றன. ஆனுல் ஒளி வித்தியாசப்படவில்லையா....அப்படித்தான் தியாகமும்! இலைக்குப் பசுமை நிறம் இயற்கை, மனிதப் பிறவியின் இயற்கைப் பண்பு தியாகம்!

"அதியமான் என்றெருரு மன்னன். அவனுக்கு ஒரு நெல்லிக்கனி கிடைத்தது. அதனை ஔவைமூதாட்டியிடம் கொடுத்தான். அவள் அறிவுக் கிழவி! உண்ட பிறகு

அந்தக் கனியைச் சுவைத்தவருக்கு ஆயுள் நீளும் என்ற உண்மையைச் சொன்னான். அறிவாளி அதிக நாள் வாழ்வது நல்லது. காவலன், நானிருந்து என்ன செய்வது என்றானும்.—இது தமிழ் நாடாகிய தமிழகத்தில் நடமாடும் கதையின் ஒரு பகுதி—அதுபோல என் எளிய உயிரால் இரண்டு உத்தமர்களின் உயிர் காப்பாற்றப்பட்டு ஒரு பெரும் உபகண்டத்தின் நற்பெயர் மீட்சிபெறலாம் அல்லவா?''

என்றான். அவன் இடையிடையே நிறுத்தி நிறுத்திப் பேசினான். சோர்வு வந்து பற்றிக்கொண்டது.

அன்று முதல் சுபேதாரானான். ஒரு திங்கள் வரை மருத்துவ மனையிலே இருக்க வேண்டியிருந்தது! பிறகு சுபேதார் அருளப்பன் ஜுனகாத் போரிலே ஈடுபட்டான். காஷ்மீர் கலவரத்தையும் தொட்டுப் பார்த்தான். ஹைதராபாத் சண்டையிலும் பங்கிருந்தது அவனுக்கு—இவ்வளவு முக்கியமான நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டான்; கதர்க்குல்லாயுடன் இல்லையென்றாலும், காக்கியுடையுடன்.

அவன் மனதை அரித்த நிகழ்ச்சிகள் சில—குறிப்பாக...........என்ற ஊரில் நடந்த அக்ரமமான போராட்டம்! இந்த ஊரில் மூன்று நான்கு தெருக்கள் முகம்மதியர்களின் குடியிருப்பிடங்கள். பிற எல்லாம் இந்துக்களின் ஆதிக்கத்திலுள்ளன. அவர்களிடையே அடிக்கடி மதப் பூசல்கள்......ஒரு நாள் அது 'விசுவரூபம்' எடுத்து விட்டது! முகம்மதியர்களுக்குத் தலைவன் அசலாம்கான். அவன் மிகவும் முரடன். திடீரென்று ஒரு நாள் இரவில் இந்துக்கள் அவனை வளைத்துக் கொண்டனர். அவனைப் பிச்சுவாவால் குத்தி சல்லடைக் கண்களாக்கிவிட்டனர். ......அவன் பிணமானான்! அத்தோடு விட்டனரா? அவனது இளம் மனைவி கலீமாவை...............மனிதப் பிறவிகள் நடத்த முடியாத அளவு விகாரமாக நடத்தி

னர்! இளங்குழவியை, அவன் வீட்டைத்தீக்கிரையாக்கி அந்தத் தீயில் எறிந்தனர்...அந்தோ, கற்காலமே! உனது கைவரிசையைப் பார்! ஆனால் தப்பியோடிய முகம்மதியர் கள் விட்டனரா? இந்துக்களின் தலைவன் முக்கர்ஜீயின் வீட்டிற் கொள்ளையடித்தனர்......பிறகு ஓடி விட்டனர்.

இந்தவெறிக்களத்திற்குச் சுபேதார் அருளப்பன் வந்த போது அழுது விட்டான். அந்தக் கொடூர செயல்களைச் செய்தவர்களை விட்டு விட வில்லை. அத்தனை பேரையும் வளைத்து விட்டான். அவர்களும் தான் தியாகம் செய் கிறார்களாம்' மதத்திற்காக இந்த மகத்தான காரியங் களைச் செய்வதால் தியாகிகளாம்——அந்தோ, என்ன சொல்லட்டும்!

இன்னொரு நிகழ்ச்சி—கண்ணீரால்தான் எழுதவேண் டும். அவ்வளவு பரிதாபமானது!

மதவெறியர்களின் தொல்லை பொறுக்காமல் ஓடோடி வரும் அகதிகள் கூட்டத்தை மடக்கிக் கொண்டனர், ஒரு தடியர்கூட்டம். அவர்கள் கொரில்லாப்போர் நடத்துகிறார் கள்.......நல்லவீரர்கள்! மிச்ச மீதியிருந்த பொருள்களை யும் கொள்ளை யடித்துக் கொண்டோடி விட்டனர். அந்தக் கொள்ளை நடந்த இடத்திற்கு அருகிலேயே பட்டாளத் தார் தங்கியிருந்ததால் உடனே உதவிக்கு 'வர முடிந்தது. சுபேதார் அருளப்பன் அங்கு வந்தான். அகதிகள் கூட் டம் அவன் கண்களிலிருந்து நீரை வருவித்தது!

கடைசியில் சென்னைக்கு அருகிலேயே வர வேண்டிய தாயிற்று. அகதிகளுக்கு ஒரு நகரமே கொடுத்தார்கள். அவர்களுக்குக் கொஞ்சநாள் இலவச உணவும் உடையும் தந்தார்கள். பிறகு அவர்களுக்கு வேலையும் கொடுக்க ஆரம்பித்தார்கள். பிறகு அவர்கள் தங்கிய இடங்கள் நகரங்களாகவே ஆகத் தொடங்கின. துணியாலான

டோக்கள், கற்களாலான வீடுகளாக மாறத்தொடங்கின ஆனல் சென்னை மாநிலத்தில் இந்த அகதிகளுக்கு எதிர்ப்பு இருந்தது!

வேறொரு மாகாணத்து மக்கள் இங்கு வந்து இருந்து கொண்டு நம் பணத்தில் உண்டு கொழுப்பது தவறு தான் ...அதுவும் அவர்கள் அடக்க ஒடுக்கமாகவா இருக்கிறார்கள்? ஒண்ட வந்த பிடாரி சத்திரத்து பிடாரியை கரிபாகம் கேட்டு ஓடஓடவிரட்டுதாம்! அதுபோல கதியற்றவர்என்று வந்தவர்கட்டுமீறிநடந்திடத்தொடங்கினர். ஏழைஎளியவர்களை அடித்துப்பணங்கேட்பதாம்—இதற்குப்பெயர் தானம் வாங்குவதாம்! புத்தகஆசிரியர்களை அவர்களின் தோழர்கள் தொல்லைபடுத்துகிறாகளே—'இந்தாப்பா புத்தகம், எழுது அதில் அன்பளிப்பு என்று அதட்டி மிரட்டி வாங்கிறார்களே—அது போல தானம் வாங்கினார்கள்! முடிந்த இடங்களில் திருடினர். முடியாதஇடங்களில் தங்களுடன் வந்த குயலினங்களை பாடவிட்டு, மயிலினங்களை ஆடவிட்டு 'மோகனாஸ்திரம்' விட்டனர்! இந்த அஸ்திரம் இராவணனது மூலப்படையையே மயக்கி விட்டதாமே நமது மாகாணத்தவர் சாமன்யர்கள் தானே! வருவிருந்து, பாாத்துசெல் விருந்தோம்பும் குணத்தினர்தானே! அகதி நிதி திரட்டினர்—அரசாங்க பட்ஜெட்டில் இடம் வகுத்தனர்! அவர்கள் மீது குறைகூறிப் பயனில்லை—சொந்த நாட்டானை சோற்றுக்கு வழியில்லாமல் மலேயாவிலே, பர்மாவிலே, சாயமிலே, இலங்கையிலே தேயிலைத் தோட்டங்களிலும் காபிக் காடுகளிலும் இரப்பர் விளையுமிடங்களிலும் அலைய விட்டு அந்நிய நாட்டு வட்டிக்கடை மும்தாஜ் தான்சேன் சேட்டிடம் துபாஷியாக இருந்து நாலு காசு சம்பாதித்து வயிறு வளர்பதிலே பெருமை கொள்கிறார்கள்! இல்லாவிட்டால் அருளப்பன் பட்டாளத்தார் ஞவாரு?

சென்னையில் அப்படித் தங்கிய அகதியர் சாவடியில் அத்தனை சவுகரியங்களும் செய்யப்பட்டன. அங்கேயே கடைகள், அங்கேயே பள்ளிக்கூடங்கள், தபால் நிலையம், தந்தி கொடுக்குமிடம், போக்கு வரத்து சாதனங்கள்...... அவர்களின் காவலுக்கு ஒரு பட்டாளமே வந்து விட்டது. அதற்குத் தலைவன் சுபேதார் அருளப்பன். அவனுக்கு அந்த இடம் கொஞ்சம் நிம்மதியாகக் கூடப்பட்டது. தன் தாயகத்திலேயே தங்கியிருப்பதிலே ஒரு திருப்தி. அவன் மூன்று முறைதான் தன் சொந்த ஊர் போய் வந்தான். அதற்குள் அவன் கேள்விப்பட்டவை எவ்வளவு விபரீத மான செய்திகள், விசித்திரமானவை!

முதல் செய்தி மிகவும் வருந்துதற்குரியது. அது தான் தங்கப்பன் கல்லூரியை விட்டு நீக்கப்பட்டு ஊரை விட்டே மறைந்து விட்டது! இதனைக் கடிதத்தின் மூலம் அறிந்த பொழுது அவனால் நம்பமுடியவில்லை. அதனைத் திரும்பத் திரும்பப் படித்தான். பிறகுதான் அது உண்மை யென்று புலப்பட்டது. தங்கப்பன் சிறு பிள்ளையா? ஏன் அவன் கண்கள் முன்னால் ஒரு ஏழைக் குடும்பமும், அதில் வளர்ந்து நெளியும் புழுக்கள் போன்ற உருவங்களும் தெரியவில்லை! மாணவனுக்கும் அரசியலுக்கும் என்ன சம்பந்தம்? தொடர்பு துளியுமில்லை யென்று சொல்ல வில்லை. தங்கத்திற்கும் தட்டாருக்கும் உள்ள தொடர் பைப் போல இருக்க வேண்டும். தங்கத்தின் தரத்தை உரைத்துப் பார்த்துத் தெரிவதைப் போல, பிறகு அனலி லிட்டுக் காய்ச்சி வடித்து எடுப்பதைப் போல, பிறகு அழகு நகைகள் அமைப்பதைப் போல அரசியலை ஆராய் சிக்கு மட்டும் பயன்படுத்த வேண்டும். ஆனால், தங்கத் திற்கும் மங்கையருக்கு முள்ள தொடர்பு போல ஆகவே கூடாது! அரசியல் ஒரு காந்தம்; மாணவரது மனம் இரும்பு! தடுப்பது சற்று கடினம். அப்படியே இருந் தாலும் கல்லூரியை விட்டு நீக்கப்படுகிற அளவு நிலை

மையை வளர்த்துக் கொள்வானேன் ? அது கிடக்கட்டும, இந்த ஆட்சியாளர் எதைக் கண்டாலும் அஞ்சுகிறார்கள் ! ஒருவனுக்குப் பாம்பினால்தான் சாவு என்று சோதிடன் கூறினானாம். அதிலிருந்து கண்டதெல்லாம் பாம்பாகி விட்டதாம் அவன் கண்களுக்கு ! அப்படித்தான் ஆள் பவர்களும் பாட்டைக் கண்டு பயப்படுகிறார்கள். நாடகத் தைக் கண்டு நடுங்குகிறார்கள். ஏட்டைக் கண்டு ஒடுங்கு கிறார்கள். பேச்சைக் கேட்டுப் பதைக்கிறார்கள். ஒரு சாதாரண மாணவனைக் கண்டு அஞ்சி விட்டார்கள்—ஆச் சரியம், ஆனால் உண்மை ! "அஞ்சி யஞ்சிச் சாவார், இவர் அஞ்சாத பொருளில்லை அவனியிலே" என்று இவர்களுக் காகவா பாரதியார் பாடினார் ?

தங்கப்பனைக் கண்டு அவர்கள் அஞ்சியதில் ஆச்சரிய மில்லை. அவன் நடமாடும அணுக்குண்டு—நினைத்தால் எதையும் நிர்மூல மாக்கிவிடுவான. ஒரே நாளில் உழவர் கள் பதினாயிரவரை நிறுத்தி விட்டானே ! சர்க்காருக்குப் பக்கத்தில் தடியடி, கண்ணீர்ப் புகை, இவைகளைத் தாண் டினால் சிறைச்சாலை—அவன பக்கத்தில் உழவர் கூட்டம்! உழவர்களின் வெற்றிக் கொண்டாட்டங்கள் மேதினியில் நடந்தவை எத்தனையோ...! ஆமாம், தங்கப்பன் வெளியி லிருந்தால் ஒரு மே தினம் கொண்டாடி விடுவான் போல் இருந்தது. சிறைக்கு அனுப்பி விட்டார்கள்.

வெளியில் வந்தானே, சும்மா இருந்தானா ? அவன் சும்மா இருந்தாலும அவன் சுழி சும்மாயிருப்பதில்லை ! தங்கப்பன தலைவனாகி விட்டான். எங்கும் அவனுக்கு வரவேற்பு...அங்கங்கே பொதுக் கூட்டங்கள், மாநாடு கள் ! இப்படி அலைகிறான். வீடு அவனுக்கு இந்த நாடாம், பெற்றவர்கள் அவனுக்கு இந்த நாட்டவராம், அவன சுகம், அவர்களின் நல்வாழ்வாம்...! தங்கப்பன் வீட்டிற்கு வருவதில்லை. வர நேரமிருப்பதுமில்லை.

கண்ணப்பர் எழுதிய காகிதங்களிலிருந்து தங்கப்பனைப் பற்றித் தெரிந்த தகவல்கள் அவ்வளவுதான்—அதற்கு மேல் ஒன்றும் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் கண்ணப்பரைப் பற்றிப் பல புதிய செய்திகள்—அவர்களின் வாழ்வை வளப்படுத்தும் செழிப்பான செய்திகள் கிடைத்தன. அந்தக் கடிதங்கள் எல்லாம் அருளப்பனுக்குப் பெரிய காவியங்கள்—கர்ண்டேகர்கள், விக்டர் ஹுகோகள், கோர்க்கிகள்......! அவைகளைத் தன் ஓய்வு நேரத்தில் திரும்பத் திரும்பப் படிப்பான், படித்துப் படித்து மகிழ்வான். கண்ணப்பர் தனது உள்ள உணர்ச்சிகளை அப்படியே கொட்டி யளந்திருப்பார்.

தமிழர் கல்லூரிக்கு ஒரு நாள் ஒரு பிரபல டைரக்டர் வந்திருந்தாராம்—நாடக மன்றத்தின் தொடக்க விழாச் சொற்பொழிவாற்ற! பேச்சு முடிந்ததும் ஒரு நாடகம் நடத்திக் காண்பித்தார்களாம். அது மிகவும் அருமையாக இருந்ததாம்—நாடகத்தின் பெயர் 'அவன் ஏழை!' என்பதாம். அந்த டைரக்டர் அந்தக் கதையை அமைத்தவரைக் காண ஆவலாக இருந்தாராம். ஆனால் அந்தக் கதாசிரியர் தன் பெயரை யாருக்கும் சொல்லக் கூடாதென்ற ஒப்பந்தத்தின் மீதே கொடுத்தாராம். இப்படிக் கதை கதையாகக் கடிதம் எழுதுவார் கண்ணப்பர்.

மேலும் சில ரகசியங்கள்—வெளியில் சொல்லிவிட்டால் அவர்கள் வேலைக்கு ஆபத்து! அதுவும் ஆசிரியர்கள் மீது அம்புவிடத் தயங்குவதில்லை சர்க்கார். வயிற்றிலே அடிக்கிறார்கள். வாயிலே பூட்டை மாட்டுகிறார்கள். கையிலே விலங்கு போடுகிறார்கள்! மாணவர்களின் மனம் வயல். அதில் பாடங்கள் எருக்கள். படிப்பு அங்கு பயிர். அறிவுதான் அறுவடை செய்யவேண்டிய கதிர்—ஆனால் கதிர் காணும்வரை போதிப்பால் உழுது, தேர்வுக் களைக்கொட்டால் தவறுகளைக் களைந்து, ஒழுக்க வேலியிட்டு, தீய கருத்துக்களெனும் எருதுகள் வந்து அழிவு வேலைசெய்யாமல்

காக்கும் உழவனுகிய ஆசிரியன் நிலை அந்தோ, பரிதாபம்! அவன் பேசினுல்அதற்குத்தடை—ஏன்,உம்மைக் கல்லூரியை விட்டு நீக்கினுல் என்ன? உடனே விளக்கம் தேவை—என்று காகித வெடிகள்! அதனுல் கண்ணப்பர் சில செய்திகளைத் தனக்கன்றிப் பிறர்எவருக்கும்,ஏன் தன் தம்பியருக்கும் தெரியாமல் மறைத்துவிட்டார். அவரது நண்பர் ஒருவர் பல அரசியல் ஏடுகளில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதி வருகிருர். சட்டசபை வாதங்களையே சாடுகிருர். குள்ளர்கள் குகையில்...என்ற தலைப்பில் இந்த உலகத்தையே, குறிப்பாக இப்பொழுது நடைபெறும் அரசியல் கோணல்களைச்சிரிக்கடித்தார்!'வெடிக்கும்எரிமலை' அவரது புத்தகம்! 'வெந்தபுண்' அவரது கவிதைகளின் தொகுப்பு! 'சாய்ந்த தராசு' அவரது நாடகம்! ஆனுல் இவை அத்தனையும் புனை பெயரினுல்—கண்ணப்பர் அவருக்குத் தோன்ருத் துணையாக இருக்கிருர்! இதனை இப்பொழுது துணிந்து தனது அருமைத் தம்பி அருளப்பனுக்கு எழுதினுர். அவரது புனைபெயர் ஆங்கில நாட்டில் முன்னோர் நாள் உலவிய 'எலியா' போல 'எமிலி' தான். எமிலியும் ஒரு பெரிய எழுத்தாளன் தான் பிரான்ஸில்! அந்தப் பெயரில் மறைந்து கொண்டுதான் அவரின் நண்பர் தமது கைவரிசை முழுவதையும் காட்டினுர். தாயகம் அவரைப் போற்றிற்று.

கண்ணப்பர் துணிந்து விட்டாரா? இப்பொழுது மட்டும் தனது செயல்களையும் தனது நண்பர் செயல்களையும் சற்று வெளிப்படையான முறையில் சொல்வானேன்? ஆமாம்,அவரது வாழ்க்கைப் பாதை வேருருபுறம்திரும்ப இடமிருந்தது. அன்று வந்த டைரக்டர்அவரை சினிமாத் துறைக்குப் பலவந்தமாக இழுத்தார். கண்ணப்பருக்கு மனம் இடங் கொடுத்தது. ஏன்? அவர் இலட்சியம் இங்கு அலட்சியப்படுத்தப்படவில்லை.

கண்ணப்பர் தங்கப்பனைத் தடுத்தார். தகாது இது என்று அவன் போக்கைக் கண்டித்தார். எதற்காக? அவன் கொள்கைகள் பிடிக்கவில்லை யென்று......இல்லை. அவன் கொள்கைகள் அத்தனையும் பொன்னெழுத்துக்களால் பொறித்து, வைரத்தால் இழைத்து,கோமேதகத்தால் ஓரங்களில் கோடுகள் கட்டி, பச்சைக் கல்லால் அழகுப் புள்ளிகளிட்டு அமைக்க வேண்டியவை! அவர் வகுப்பறையே ஒரு பொதுக் கூட்டந்தானே—தங்கப்பன் வெளியுலகில் பேசியதை அவர் சுவர்களுக்கிடையில் பேசினர். தங்கப்பன் முறை சரியல்ல என்பது அவரது குற்றச் சாட்டு. முறையைக் கூட வெறுக்கவில்லை, காலத்தை; சூழ் நிலையைச் சுட்டி நின்றது அவரது தடங்கல் வேலை! மாணவன் என்ற நிலைமையில் இந்த வேலைகள் வேண்டாம். அரசியல் தலைவர்கள் என்பவர்கள் தூண்டில்காரர்கள்—மாணவர்கள் மீன்கள்! அவர்கள் வலை வீசிகள் இவர்கள் இரையாகும் கெண்டைகள், விரால்கள்........ இதனைத் தங்கப்பன் தெரிந்து கொண்டு நடந்திருந்தால் ஒரு பட்டதாரியாகி, அவனது அறிவிற்கும் திறனுக்கும் ஒரு பேராசிரியனாக வந்தானானல் எதையும் செய்யலாம். ஆசிரியர் தொழில் உற்பத்திச் சுரங்க மாயிற்றே...பிள்ளைகள் உள்ளத்தில் மெள்ள மெள்ளத் தமது கருத்துக்களைப் புகுத்தி விட்டால் அப்புறம் இந்த நாடு திருந்தாதா? எதிர்காலத்தை ஆக்கும் சிற்பிகளை ஆசிரியர்களாக்குகிறார்கள். நாளைய தலைவர்கள், இன்றைய மாணவர்கள் என்பது உலகறிந்த இரகசியம். இப்படி யெல்லாம் கடிதம் வரும்.

கடிதங்கள் இல்லாத போது அவனுக்குப் பொழுது போக்க ஓரிடம் உண்டு. அதுதான் அங்குள்ள பெண்கள் பள்ளிக்கூடத் தலைமையாசிரியை இல்லம்......! அந்த அம்மையாரின் இல்லம் ஒரு அறிவுக் கருவூலம். அங்கு இல்லாத ஏடுகள் இல்லை. 'கன்னிமாரா' அங்கு பிச்சை வாங்க வேண்டும்! அநேகமாக எல்லாவிதமான மாத, ஞாயிறு,

கிழமை யிதழ்களும் வரும். ஆகவே அருளப்பன் அங்கு போவான். அந்த அம்மையும் அன்பாகப் பேசுவாள். அவளுக்கு அதிக வயதாகா விட்டாலும் அவளது பேச்சும் செயலும வயதின் முதிர்ச்சியை, வாழ்வின் அதிர்ச்சியை எடுத்துச் சொல்லும்! அவள் சிரிக்கும் நேரங்கள் சிலவே ...அதுவும் சிந்தனைச் சிரிப்பு! ஆண்களை மயக்கி ஆட்டி வைக்கும் புன்னகை அவளை விட்டு மறைந்துவிடா விட்டாலும் ஒளிந்திருந்தது. அருளப்பனுக்கு அவளிடம் முதலில் மயக்கமும், பிறகு அன்பும், அப்புறம் பரிதாபமும் ஏற்பட்டது. அவள் ஏக்கத்தால் இந்தத் துக்கச் சித்திரமாக இருக்கிருள் என்று தெரிந்து கொண்டான். அவளிடம் பேசும் போது அவன் இலக்கிய உலகில் வட்டமிடுவதாக எண்ணுவான். அவளது சொற்களெலாம் அறிவு முத்துக்கள். அவளுடன் அரை மணி தொடர்ந்து பேசினுல் அவளது பரந்த அறிவும், நிறைந்த படிப்பும் செறிந்த திறனும் தெரியும்!

அவளைப்பற்றி அவளிடம் கேட்க வேண்டும் என்று போவான். ஆனுல் அந்த அந்திப் பொழுதில் அவள் தரும் தேநீரும், அருமையான பேச்சுகளும் இந்த எண்ணத்தை மறக்கடித்து விடும். தொடக்கத்தில் ஏற்பட்ட மயக்கம் மடிந்து ஒரு சகோதரியிடம் ஏற்படும் பாசம் ஏற்பட்டது. அதற்குக் காரணம் இல்லாமல் போக வில்லை. அவனுக்குச் சமைத்துப் போட வந்திருந்த அன்னம் அவன் உள்ளத்தில் நிறைந்து விட்டாள்! இனி வேறு ஒருவருக்கும் இடமில்லை!

அன்னம்— பெயருக்கேற்ற பெண். ஆனுல் உலகம் அவளுக்கு ஒரு பட்டமளித்து விட்டது! அது தான் விதவை யென்ற விபரீதமான பட்டம். இதை அவள் சொல்லும் போது அருளப்பன் கண்களில் நீர் ஊற்றெடுத்தது. அழ வேண்டியவள் தேற்ற வேண்டியதாயிற்று! அவள் விதவை—ஏன்? கட்டிய கணவன் காலமாகி விட்டான்.

அது அவள் தவறில்லை. கட்டி மூன்று திங்களில் பிரிய வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது? குற்றஞ் சொல்ல வேண்டுமானால் பொருத்தம் பார்த்த புரோகிதனையும், இருமல் நோயை விரட்டுவதாகச் சபதம் பேசிய டாக்டரையும்தான் கூண்டிலே நிறுத்த வேண்டும். அன்னத்தைப் பெற்றெடுத்தவர்கள் ஏழைகள். தங்கள் ஏழ்மையை இடமாக்கிக் கொண்டு வந்த அறுபது வயது மைனர் அப்பாவு முதலிக்குப் பதினாறு வயதுப் பாட்டி அன்னம் அர்ப்பணம் செய்யப்பட்டாள். கொஞ்சமும் தயங்காமல் ஒத்துக்கொண்டாள். ஏன்? தன் இன்பத்தை, வாழ்வைப் பாழாக்கியாவது தனது குடும்பத்தின் வாழ்வு பரிமளித்தால் போதும் என்று எண்ணினாள். ஆகவே தனது வாழ்வையே தியாகம் செய்யத் துணிந்தாள். துணிவமிதன்ன, அவளது தியாகம் தணலிலிட்ட தங்கம்போல திருமணமாக ஒளி வீசியது. ஊரிலே சிலராவது...பணத் திமிரைப் பார், இந்தப் படுகிழம் ஒரு துள்ளும் புள்ளி மானை ஜோடி சேர்த்துக்கொண்டது, நாளைக்கு அந்த மாடப்புரு பறந்து விடாமலா போய் விடும்...என்று கேலி பேசாமலா இருந்திருப்பார்கள்—பேசத்தான் செய்தார்கள்! அன்னம் ஓடவில்லை. ஆனால், தாலி கட்டிய தாத்தாவின் உயிர்தான் ஓடி விட்டது! பிறகு சொத்துக்களைத் தாயத்தார் பிடுங்கிக்கொண்டார்கள். அன்னம் தாய் வீடு வந்தாள். அங்கேயும் மிக விரைவிலேயே இரண்டு ஈமச் சடங்குகள் தொடர்ந்து செய்ய வேண்டியவளானாள். பிறகு எங்கெங்கோ அலைந்து கடைசியில் சமையற்காரியாக இருக்கிறாள். இதைப் பல இடங்களில் கண்ணீருடன் கலந்து கலந்து சொன்னாள். அருளப்பன் மிகவும் பரிதாபித்தான். இந்த 'டிராஜடியை' கேட்டுக் கொண்டான். அவன் முன்னரே இதனை 'காமடி' யாக்கி விடுவது என்று முடிவு கட்டி விட்டான்!

பெண் ஒரு சிலை—தியாகம் என்ற வண்ணச் சுண்ணங்களால் அழகு செய்யப்படுகிறது...இப்படி அவன் செவி

களில் யாரோ கூறிக் கொண்டிருந்தார்கள். ஆம், அது உண்மைதானே! விண் மீன்கள் தெளிக்கப்படாத வானப் படுதா அழகாக இருப்பதில்லை.

அது போல, தியாக உணர்ச்சிகள் தூவப்படாத பெண்மை, பெருமை யடைவதில்லை—அது கூட உண்மை யில்லை, தியாகந்தான் பெண்மை, பெண்மைக்கு மறு பெயர்தான தியாகம்! பெண் பிறந்ததிலிருந்து இறந் தது வரை அவளின் செயல்களைக் குறியுங்கள். பிறகு பாருங்கள். உண்மை புலப்படும்.

அன்னத்தை அடிக்கடி சந்திக்க வாய்ப்புகள் இருந் தன. ஏனெனில் வாரத்தில் ஐந்து நாட்கள் பள்ளிக்கூட நாட்கள். தலைமையாசிரியை யென்றால் வீட்டிலிருக்க முடியுமா? ஆகவே, அன்னம் தனித்திருக்கும் நேரங் களில் சந்தித்தான். ஆனால் ஒரு நாள் கூட அவளிடம் தன் உள்ளக் கிடக்கையை அள்ளி வைத்ததில்லை. பல முறை முயன்றும் அவன் நா முறட்டுப் பிடிவாதம் செய்து விட்டது. அதிக துயரத்திலும், அதிக பயத்தி லும், அதிக இன்பத்திலும் பேச்சு வருவதில்லை. நா எழுவதில்லை.

முதலில் அவளைக் கொண்டு அவளது தலைவியைப் பற்றிய குறிப்புக்கள் பல சேகரித்தான். அவள் தமிழர் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றவளாம். ஆகவே, கண்ணப்பரை அவசியம் அறிந்திருப்பாள். அவள் படிக் கும் பொழுது ஒரு காதல் கதை நடந்ததாம்! ஒருவரைக் காதலித்து, பிறகு ஏமாற வேண்டியதாகி விட்டதாம். அதி லிருந்து அவள் திருமணத்தையே வெறுத்து சேவையி லிறங்கி விட்டாளாம். மனமொத்த ஒருவனுக்கு அன் புப் படையலாக்க முடியாத காதலை அருளாக மாற்றி குழந்தைகள் பலருக்குப் பங்கிட்டு விடத் தீர்மானித்து விட்டாளாம்......இப்படி அன்னம் ஒரு நாள் முன்னுரை கூறினாள்.

அவள் பெயர் தி. கன்னி என்பதாகும். அது அவளது சுருக்கப் பெயர் கூட அல்ல, மாற்றுப் பெயர்...... மற்றெரு நாள் கிடைத்த தகவல்

அவள் தலைவியின் தந்தை இளம் வயதிலே தனது மனைவியை இழந்து விட்டாலும் தனது மகளைப் படிப்பிக்க வேண்டும் என்ற முயற்சியாலும் தனது இன்பத்தை, இரண்டாம் மணத்தை அறவே வெறுத்தாராம். தனது சுகவாழ்வையே தியாகம் செய்தாராம். அப்படியே தன் மகளை எம். ஏ. வரை படிக்க வைத்தாராம். ஆனால் மகள் மணத்தை வெறுக்கவே அவர் ஏக்கத்தால் இறந்தாராம்...இந்தப் 'பால காண்டம்' ஒரு நாள் அன்னம் படித்தது, பக்தன் அருளப்பன் கேட்டது!

கன்னி இவர்களின் கூட்டுறவை முதலில் வரவேற்றாள். பிறகு சந்தேகித்தாள். கடைசியில் தடுக்க வேண்டியவளானாள். ஏனெனில் ஏதாவது விபரீதம் நடந்து விட்டால் அபவாதம் யாருக்கு? அருளப்பன் பட்டாளத்தான். நாளைக்கே மாற்றிவிடலாம். அன்னம் என்ன செய்வாள்? பேதைப் பெண். மயக்கத்தில் தடுமாறி விடுவாள். காமத் தடாகத்தில் மூழ்கி விட்டால் விளைவு என்ன ஆவது? ஆகவே அருளப்பனை ஒரு நாள் தனியாகச் சந்தித்து இதனைச் சொல்லி விடுவது என்று முடிவு கட்டி விட்டாள்.

அருளப்பனை ஒரு நாள் மாலை சந்தித்தாள். அவர்கள் முதலில் ஏதேதோ பேசினார்கள்.

"தோழரே, உங்களிடம் சில நாட்களாக ஒரு செய்தி சொல்ல வேண்டுமென்று இருந்தேன்"

"நானும் சில சந்தேகங்கள் உங்களைக் கேட்க வேண்டும் என்றிருந்தேன்"

"என்ன...?"

“ஆமாம்...’’

“தாங்கள் அன்னத்துடன்...’’

“மணப்பதற்கு முன் இப்படிப் பழகுவது கூடாது என்றுதானே சொல்லப் போகிறீர்கள். ஆமாம், நான் பதிவுத் திருமணம் செய்து கொள்ள ஏற்பாடு செய்து விட்டேன் ’’

“மகிழ்ச்சி...’’

“ஆனல், தங்களைப் பற்றிச் சில கேள்விகள்--விடை வேண்டும், விளக்கமாக, ஒளிக்காமல்!’’

“தாராளமாக...’’

“தாங்கள் தமிழர் கல்லூரியில் பட்டம் பெற்றீர்களா?’’

“ஆமாம்...’’

“கண்ணப்பரை அறிவீர்களா?’’

அவள் முகம் மாறியது. இருந்தாலும் சமாளித்துக் கொண்டாள். கொஞ்சம் தயக்கத்துடன் விடை சொன்னாள்.

“அவர் தத்துவ விரிவுரையாளர்’’

அருளப்பன் அவளை விடவில்லை. கேள்விக்கு மேல் கேள்வியை அடுக்கினன். கூண்டிலே சாட்சியை நிறுத்தி வக்கீல் கேட்கும் கேள்விகளைப் போல வகைவகையான முறையில் கேட்டான். அவள் கடைசியில் தனது வாழ்க்கை வரலாற்றைக் கூறி விடுகிறேன் என்று சொல்கிறவரை விடவில்லை.

அவள் தனது தந்தையாரின் தியாகவாழ்வை முதலில் குறிப்பிட்டாள். என் தந்தை தனக்காக தனது இன்பம், பொருள், இறுதியில் ஆவியையும் கொடுத்தார். அவர் தியாகியல்லவா என்றாள். தியாகம் ஒரு மாயாவியின் கையிலே உள்ள மந்திரக் கோல்! அது எந்த வடிவ

மும் எடுக்கும்! தந்தையின் உருவிலே, தாயின் வடிவிலே கூட வரும்—கொடியும், கூட்டமும், பேச்சும், பிரசங்கமும் மட்டுமல்ல, அதன் உருவம்! அநேகமாக நமது ஆண்டவன்கள் பூலோகம 'கேம்ப்' வருவதாக இருந்தால் பிராமண வடிவில்தான் வருவார்களாம். ஏதோ ஒரு சில சமயங்களில் 'மண் சுமந்த படலங்கள்' நடக்குமாம். அப்படியல்ல தியாகம், நமது பழைய இராசாக்கள் நகர சோதனைக்கு நாளைக்கொரு வேடந்தரித்து வருவார்களே, அப்படி வரும்.

தியாகம் என்பது எட்டாத கனி—ஹெர்குலிசுகள் தான் கொண்டுவர முடியும் என்று எண்ண வேண்டிய தில்லை. அது எட்டுந் தூரத்திலிருக்கிறது—இருப்பது தான் பலருக்குக் கண்களில் படுவதில்லை.

பிறகு தனது காதல் வாழ்வைப் பற்றிச் சொன்னாள். காதலன் பெயரைச் சொல்ல மட்டும் மறுத்து விட்டாள். அவன் பெரிய அரசியல்வாதியாம்—அழகாகப் பேசுவானும். அருமையான சொற்பொழிவாளனும். ஜூலியஸ் இறந்த பொழுது அண்டோனி பேசியே ஒரு பெரும் புரட்சியைக் கிளப்பி புருடஸ் கூட்டத்தைப் புறங்காட்ட அடித்தானுமே, அதை விட நெருப்புப் பேச்சுக்காரன். அவன் எப்பொழுதும் நாட்டைப்பற்றிய நினைப்பிலேயே படிப்பை மறந்து விட்டானும். அதனால் அவனுக்கு வீட்டிலே எதிர்ப்பாம்—கல்லூரி யாசிரியர்கள் சிலரின் சீற்றமும் உண்டாம்...பிறகு கல்லூரியை விட்டுத் திடீரென்று நீக்கி விட்டார்களாம்!...இப்படி அவள் கூறும் பொழுது அருளப்பன் முகத்திலே சிந்தனைக் கீறல்கள், நினைவுக் கோடுகள், ஞாபகச் சுழல்கள்!

அவள் அவனுக்காகப் பிறகு அலைந்தாள். மூன்று வாரங்கள் கல்லூரிக்குப் போகவில்லை. அவன் எங்கிருக்கிறான் என்று சொல்ல முடியவில்லை. ஒரு திங்களுக்குப் பிறகுதான் அவன்பெயர் தினசரி ஏடுகளில் அடிபட்டது.

அது வரை எங்கேயோ மறைந்திருந்தான். பிறகு கைதி செய்யப்பட்டான்.

அவன் கடைசியாக அவளுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தான்......என் நாடு உண்மை விடுதலை யடைகிற வரை எனக்குக் காதலோ, திருமணமோ தேவையில்லை... அடிமை வாழ்வு வாழ்கிற வரை தென்றல் எனக்குச் சூறுவளி, மலர் மணம் விஷ வாடை, பூந் தோட்டம், சிறைக் கூடம், குயில் குரல் துப்பாக்கிச் சத்தம், மயிலாட்டம் சிப்பாய்களின் 'பேரேட்', கொஞ்சு மொழி பெண்டிர் புரட்சி ஏடுகள்...என்னை மன்னித்து விடு...இதைப் படித்ததும் அவள் அப்படியே திகைத்து விட்டாளாம்.

அன்று உறுதி செய்து கொண்டாள். தனது படிப்பை எந்தவித இடையூறு மின்றி படித்து முடித்துத் தனது காதலைத் தியாகமாக்கித் தொண்டாற்றத் திட்டமிட்டாள். அப்படியே முதல் வகுப்பில் தேறினாள். பெண்கள் பள்ளியின் தலைமை யாசிரியை யானாள்! அவள் கேட்ட கேள்விகளுக்குப் பதில் யார் சொல்வது?...தியாகம் நீர் வீழ்ச்சி—அது தானே விழுந்து கொண்டிருக்கும்! எனது காதலர் தன் நாட்டிற்காகப் படிப்பை, காதலைத் தியாகம் செய்ததாகப் பெருமை பேசுகிறாரே! இது எப்படித் தியாகமாகும்? அவரைக் கோழை யென்றல்லவா உலகம் தூற்றும்? அவர் கொள்கைகள் என்று சொல்கிறாரே, அவைகள் மேடையலங்ககாரத்திற்காகவா, நடைமுறையில் கொண்டுவருவதற்காகவா? அவர் சாதி யொழிக்க என்ன செய்தார்? கலப்பு மணம் வேண்டுமென்றாரே —ஊருக்கு மட்டும் உபதேசமா, தனக்கு மட்டும் விதிவிலக்கா? ஏன், என் காதலை ஏற்றுத் திருமணம் செய்து கொண்டால் நாட்டுத் தொண்டு நசித்து விடுமா? இரட்டை உழைப்பல்லவா கிடைக்கும். அவர் அறிவாளி. ஆனாலும் ஆர்வத்தால் குறைத்துக் கொள்கிறார். சிந்திக்க வேண்டும்!...இப்படிப் பேசினால், அருளப்பன்

என்ன சொல்வான்? அவன் அவள் பேச்சை வேறு பக்கத்திற்குத் திருப்பினன்.

அருளப்பன் அன்னத்தைப் பற்றி வார்த்தைகளை ஆரம்பித்தான். அவளை மணந்து கொள்வதிலே அவளுக்குத் தடையில்லை யென்பதைப் புரிந்து கொண்டான்.

"விதவை மணம் செய்து கொள்கிறேனே நான் தியாகியல்லவா?" என்ருன். சிரித்தான்!

"நம் நாட்டில் தியாகம் சிரிப்பிற்கிடமாகி விட்டது!"

"விதவை மணம் செய்தால் அதிலே என்ன தியாகம் ...செய்ய வேண்டியதைச் செய்கிறீர்கள்!"

"உலகு ஏற்காததை, பழிப்பதை நான் துணிந்து..."

"உலகு என்பதைச் சுருக்கி உதவாக்கரை தமிழகம் என்று திருத்தி விடுங்கள், தோழரே!"

"அன்னத்தின் பெற்ருேர்கள் உத்தரவு"

"அன்னத்தின் பெற்ருேர்கள் நான்தான்"

"இனி டும் டும், பீ பீ....."

இருவரும் சிரித்தனர். அப்பொழுதுதான் அன்னம் அங்கு வந்தாள்.

"திருமணம் 50 சதவிகிதம் முடிந்து விட்டது..."

"ஏன்......?"

"அன்னத்தை இன்னும் ஒரு வார்த்தை கூடக் கேட்கவில்லையே!"

"இவ்வளவு நாள் கூடிக் கூடிப் பேசினீர்களே?"

"ஒருபெண்ணும் ஆணும் தனித்துப் பேசினல் இந்தச் சொல்லாது சொல்லும் பொல்லாத காதலைத் தவிர வேறு சேதிகளே இல்லையா?"

அவள் எழுந்து போய் விட்டாள். அன்னமும் அருளப்பனும் தனித்து விடப்பட்டனர்.

"அன்னம் ........"

"................."

"உன்னைத்திருமணம்செய்துகொள்ள விரும்புகிறேன்'

"உங்கள் விருப்பம் நான் அறிந்தது தானே!"

"உன் முடிவு...?

ஒரு மொட்டுச் சிரிப்பு, அதை மலர்வித்தான் தனது இதழ்களால்! கனைத்துக் கொண்டே வந்து சேர்ந்தாள் அன்னத்தின் தலைவி. அவர்களது மலர்ந்த முகங்களின் மூலமே முடிவைத் தெரிந்து கொண்டாள்!

கன்னியின் பக்கம் தங்கள் பார்வையைத் திருப்பினர் காதலர் இருவரும்! அவள் புன்முறுவல் பூத்தாள். இவர்களைக் கண்டதும் தனது கலைந்து போன காதல் வாழ்வு நினைவிற்கு வந்தது. ஒரு கணம் நீர் தேங்கிய திட்டாயிற்று அவளது க்ண்கள்--மறு கணம் அதுவே மகிழ்ச்சி நீராக மாறி வடிந்தது. அன்னத்தை அன்போடு அணைத்துக் கொண்டாள் உச்சிமோந்து 'இச்' சென்று நாணத்தால் சிவந்திருந்த கன்னங்க்ளில் முத்தமிட்டாள். பிறகு அருளப்பன் கரத்திலே அவளது கரத்தைப் பிடித்துக் கொடுத்தாள்.

"எனக்கொரு சந்தேகம் ...!" என்ருள் அன்னம்.

"என்ன ...?"

"தங்களின் உண்மைப் பெயர்?"

"என் காதலர் என்னைத் திரும்பியடைகிறவரை நான் கன்னிதான். அதனுல்தான் என் பெயரைக் கன்னியென்று மாற்றிக் கொண்டேன். ஆனுல் என் பெயர் தாமரைக் கண்ணி!"

"இதுதான் என் கடைசிக் கேள்வி...இதற்கு விடை யளித்தால் அதுதான் எனக்கு நீங்கள் தரும் திருமணப் பரிசு"

"என்ன பரிசு அது..."

சிரிப்பிற் கிடையிலே அருளப்பன் கேட்டான்.

"தங்கள் காதலரின் பெயர்..."

அவள் திடுக்கிட்டாள். அவள் சொல்லக் கூடா தென்று மறைத்து விட்ட மர்மத்தைக் கிளறுகிறுன். அவளின் காதலர் நாடறிந்தவர். பலரால் புகழப்படுவர். தலைவரென்று பேசப்படுவர்.

"என் விடை அவசியமா...?"

"உறுதியாக வேண்டும்!"

அவள் தன் பெட்டியிலிருந்த படமொன்றை எடுத்துக் கொடுத்தாள். என்ன ஆச்சர்யம்... அது தங்கப்பனின் புகைப்படம்!

"ஆ..."

"ஏன்?"

"இவர் தங்கப்பர்—என் அண்ணன்!" என்றுன். மற்றவர் திடுக்கிட்டனர்.

# மாலை

தங்கப்பன் தனக்கு அன்றைக்கு வந்து குவிந்திருந்த கடிதங்களை ஒவ்வொன்றாகப் பிரித்துப் படித்துக் கொண்டே இருந்தான். பல அவனைக் கூட்டங்களுக்கு வந்து பேச வேண்டும் என்ற அழைப்புகள்...பல கடிதங்கள் அப்படித் தானிருக்கும். சில நண்பர்கள் எழுதுவார்கள். இன்னும் தலைவர்களின் கடிதங்களுமிருக்கலாம்! கடிதங்களைப் படிப்பதும் ஒரு ஆனந்தம்—அதுவும் அஞ்சல் நிலையங்களில் கால் கடுக்க நின்று வாங்கிப் படிக்கும் முடங்கல்களுக்கு மதிப்பு அதிகமே!

ஒரு கடிதம் தங்கப்பனின் மகிழ்ச்சியைக் கிள்ளி விட்டது! அதன் வாசகங்களைப் பாருங்கள்......அன்னம் விதவை! அவள் வாழ்வை மலர்வனமாக்கத் திட்டமிட்டேன். சட்டம் சரியென்றது—சாஸ்திரம் சீறிற்று. தயங்கவில்லை. மணந்துகொண்டேன். என் இலக்கிய வெற்றியை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன் .............. அன்பன் அருளப்பன்......தங்கப்பன் உள்ளம் வீங்கியது. தான் பேசுங் கொள்கை தனது குடும்பத்தவரால் பின்பற்றப்படுவதைக்கண்டு உள்ளம் பூரித்தான். ஆகவே தான் அருளப்பன் விரும்பியிருந்தபடி தேநீர் விருந்திற்குச் செல்வதென்று முடிவு செய்து கொண்டான். தன் தம்பிக்கொரு பாராட்டுரை அனுப்பினான். அவசியம் விருந்தன்று வந்து விடுவதாகவும் தெரிவித்து விட்டான்.

இன்னொன்று ஒரு நாடக அவையினரிடமிருந்து வந்திருந்தது. அவர்கள் நடத்தும் நாடகத்தின் நூறாவது நாள் கொண்டாட்டத்திற்குத் தலைமை வகிக்க வேண்டுமாம். அவர்களின் நாடகம் 'சாய்ந்த தராசு' என்பதாகும்.

—எழுதியவர் எமிலி! தங்கப்பனுக்கு எமிலியின் எழுத்துக்கள் என்ருல் உயிர். அவரது கட்டுரைகள் எல்லாம் அறிவு வாடையுடன் உள்ளன. அதுவும் அரசியல் கட்டுரைகள் பல அவனது பேச்சிற்கு உதவி செய்யும்! அப்படிப்பட்ட ஒருவர் எழுதிய நாடகத்திற்குத் தலைமை வகிப்பதைத் தடுத்துக் கூற முடியுமா? மேலும் எமிலி என்பவர் யார் என்று புரிந்து கொள்ள வேண்டும் என்று நெடு நாட்களாக ஆசை—ஆனல் எந்த ஏடும் அவரை அறிமுகம் செய்யவே இல்லை!

மேலும் சிலவற்றைப் புரட்டினன். சில அனுமதேயங்கள் சுட்டு விடுவேன், வெட்டி விடுவேன்......என்று 'புருடால்'விட்டிருந்தன. சிரித்துக் கொண்டான். அரசியல் வாதிகளுக்கு வரும் வழக்கமான விருதுகள் தானே!

பிறகு ஒரு முடங்கல்—அதுவும் ஒரு அழைப்புத் தான்-ஆனல், புதுவிதமானது! பள்ளிகளிலே பகுத்தறிவாளனுக்கு ஆண்டு விழாச் சொற்பொழிவு......இதனை, நிச்சயமாக மறுக்கக் கூடாது. எப்படியும் போய்விட்டு வர வேண்டிய நிகழ்ச்சி. அதுவும் சென்னையில் தம்பி அருளப்பனின் திருமணப் பாராட்டுக் கூட்டத்தின் மறுநாள்—மிக எளிதாகப் போய் விட்டது. உடனே......வருகிறேன் தங்கள் அழைப்பிற்கு நன்றி என்று எழுதி......திருமதி -தி. கன்னி, தலைமை யாசிரியை, அகதிகள் பெண்கள் உயர் நிலைப் பள்ளி...சென்னை என்று முகவரி எழுதினன்.

அன்றைய வேலைகளைத் தொடர்ந்து முடிக்க வேண்டுமல்லவா? உடனே புறப்பட்டான். இனி அவனைச் சந்திப்பதென்ருல் யாரால் முடியும்......எங்கும் நிறைந்த வாயு பகவான் வேண்டுமானல் அவனுடன் இருக்கலாம! பகலெல்லாம் அலைந்து திரிந்து விட்டு இரவு நெடு நேரத்திற்குப் பின்னல் தன் அறையைத் திறந்தான். திக்

குச்சியை அடித்தான். அவனது அறையில் அலங்கோலமாகக் கிடந்த பொருள்கள் கண்களில் பட்டன. பிறகு விளக்கைப்பொருத்தினன். அந்த அறையைக் கண்டவுடனேயே புரட்சிக்காரனின் இருப்பிடம் என்று சொல்லிவிடலாம். ஒரு மூலையில் பேப்பர் கட்டுகள். இன்னொரு மூலையில் ஒரு கயிற்றுக் கட்டில். ஒரு தண்ணீர்ப் பானை. தரை எங்கும் தீக்குச்சிகள், 'சிகரேட்' துண்டுகள். கொடிக்கயிறு. அதில் அழுக்கேறிய துணிகள், அவைகளிலே பல கட்சிச் சட்டைகள். ஒரு பிரயாண தோல் பெட்டி, ஒரு ஒடிந்த நாற்காலி, ஒரு சாதாரண மேசை...... தங்கப்பனின் அறையையே அளந்து விட்டோம்.

படுக்கையை விரித்துப் படுத்தான். விடியற் காலை நாலரை மணிக்குப் பிரயாணம் செய்ய வேண்டும். அந்த வண்டியில் சென்ருல்தான் மறு நாள் இரவு நாடகத்திற்குப் போய்ச் சேர முடியும்! அவனுக்குத் தூக்கம் வரவில்லை

கண்ணப்பரின் கருணைப் பார்வை, கண்ணம்மாவின் அன்பு வார்த்தைகள், காந்தாவின் கொஞ்சு மொழிகள் ஒரு கணம் அவன் சிந்தனையில் வந்து பிறகு மறைந்தன. பெற்ரேரின் தோற்றம் தோன்றி அழிந்தது. பிறகு தாமரைக் கண்ணியின் அழகு முகம் அவனை வாட்டியது. ஈட்டி முனை போன்ற வார்த்தைகளைக் கொட்டிற்று. க்கல்லூரி வாழ்வு கண் முன் வந்தது.........

படிப்பை இழந்ததால் அறிவை இழந்து விட வில்லையே! படித்துப் பட்டம் பெற்றவர்களும் உபதேசம் கேட்க வேண்டிய அளவில் தங்கப்பனிருக்கிருன். கண்ணப்பர் சொல்கிருர் ஒரு இடத்திலிருந்து கொண்டு அவன் கடமையைச் செய்வதன் மூலம் கொள்கைகள் வெற்றியடைந்து விடும் என்று. தாமரையும் அதையேதான்

தமது சொந்தக் கதையுடன் இணைத்துக் கொண்டாள். அவர்கள் படித்தும் மனம் பண்படாதவர்கள்—நாட்டு நிலை யறியாமல் சொல்கிறுர்கள்; நாட்டில் எத்தனை பேர் படித்திருக்கிருர்கள்? பன்னிரண்டு பேர்கள். அதுவும் கோலம் போடுவது போலக் கையெழுத்துப் போடக் கூடியவர்கள் அத்தனை பேரையும் சேர்த்து! இவர்களுக்குச் சொல்லித் திருத்த முடியுமா? அல்லது நமது கடமையின் மூலம் அவர்களை வாழ்வித்து விட முடியுமா? நாடெங்கும் கண்ணப்பர்களில்லை; தாமரைக் கண்ணிகளில்லை. தற்குறிகள் ஏராளம், சொன்னுலே விளங்காது. செய்தால் அவர்கள் செம்மையாகிவிட முடியாது. செய்கை வேண்டா மென்பது கருத்தல்ல—சொல்லும் தேவை என்பதுதான் தேற்றம். சொல்லிக் கொண்டிருக்க ஒரு கூட்டம், அதனைச் செயற் படுத்திக் கொண்டே போகும் போக்கு அமைந்த திட்டத்துடன், இருக்க வேண்டியது முறை, நெறி! அங்கே தங்கப்பன் மாணவன், இங்கே ஆசிரியன்! அங்கே செய்யக் கூடியது ஒரு தனியறிவு. இங்கே கோடிக் கணக் கானவர்களின் பகுத்தறிவு வளர்ச்சி. அங்கே ஒருவன் பட்டம் பெற்றிருக்கலாம். இங்கு ஆயிர மாயிரம் பேரைப் பகுத்தறிவாளர் என்ற பட்டம் பெறச் செய்ய முடியும்! அங்கே அமைதியோடு இருந்தால் ஒரு கல்லூரிக்கு நல்ல பெயராக இருக்கலாம். ஆனுல் இங்கு ஒரு நாட்டின் எதிர் காலம் எழுதப்படுகிறது; எது மேல், எது வேண்டும், சொல்லட்டுமே!

சரித்திரத்தைப் புரட்டினுல் தியாகிகளின் எண்ணிக்கை முடி விடக் கூடியதல்ல. தங்கப்பன் செய்தது அற்பம், சிறுமையிலும் சிறுமை! இது பெரிதென்று எண்ணலாமா? கண்ணப்பர் தத்துவ ஆசிரியராக இருந்து கொண்டு என்ன செய்ய முடிகிறது? அதைத் தெரிந்தும் அவர் தடுத்துரைத்தது சரியா?

ஆண்டுகள் பலவாய் தன் தொண்டு இந் நாட்டிற்கு உண்டு என்று எண்ணும்போது தங்கப்பன் பூரித்தான். அவன் தொண்டு பேச்சு—செயல்...மூச்சுவிடவும் முடியாது! மக்கள் மனம் ஒரு துணிப் பை. அதில் அறியாமை யெனும் செல்லாக் காசுகள்—அதனை எடுத்துவிட்டு நல்ல நாணயங்கள் வைக்கவேண்டும். கொடுக்கப்பட்ட பொருள்கள் இரண்டு-பேச்சு எனும் கூர் இல்லாத கத்தி, செயல் எனும் புதிதாக வாங்கப்பட்ட 'பிளேடு'—எதை உபயோகப்படுத்துவது? தங்கப்பன் சொல்வது முறையா?

காதல் ஒரு விளையாட்டுப் பொம்மை--ஆணும் பெண்ணுமான குழந்தைகள் விரும்பி விளையாடுகின்றன. ஆனால் விரைவிலேயே உடைத்து விடுகின்றன. தாமரைக் கண்ணியின் நினைப்பு வந்தவுடன் தங்கப்பன் மனம் மிகவும் வாடி விட்டது. அவள் முகம் அவன் மனத்தை விட்டே அகலவில்லை. அவன் கண்களில் நீர் தேங்கி விட்டது.

இப்படிப் பல பல செய்திகளில் அவன் நினைவு தோய்ந்து வெகு நேரம் வரை தூங்கவேயில்லை. பிறகு தூங்கினான். பிறகு எழுந்து குறிப்பிட்ட வண்டியையும் பிடித்து விட்டான்.

வண்டியில் போகும்போதே அவன் சிந்தனை தன் நாட்டின் நிலைமையைக் குறித்து ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தது! 'சுதந்தரம் சுக்கா மிளகா அக்கா வந்து கொடுக்க' என்று கூண்டுக் கிளியைப் பார்த்துப் பாடினார் கவிஞர். சுதந்தரம் சிலர் கூறுவது போலப் பனிக்கட்டியல்ல, தானே உருகி, நீராகி நம்மிடம் ஓடிவர! அது வெல்லக்கட்டி. ஈக்களைப்போல மக்கள் அதன்மீது மொய்த்துத்தான் சுவைக்கவேண்டும். அப்படியே சுதந்தரம் வந்து விட்டால் மட்டும் சுகப்பட்டுவிட முடியுமா?

சுயராஜ்யம் வந்தும் பல நாடுகளில் சுக ராஜ்யம் வர வெகு நாட்களாகியுள்ளன! நாட்டில் இன்னமும் பட்டினியுடன் பஞ்சமும் இருக்கத்தான் செய்கின்றது. ஏழையின் வாழ்வு இன்னும் இருட்டறையில் தானிருக்கிறது. பணக்காரனின் படாடோபம் இன்னும் பட்டுப் போகவில்லை. முதலாளி, தொழிலாளி, ஆண்டான், அடிமை முறை அரசோச்சிக் கொண்டு தானிருக்கிறது. நாட்டோருக்கு நல்வாழ்வில்லை. கேட்டால் மழையில்லை. மழை ஏன் பெய்யவில்லை யென்றால் நாட்டில் நல்லவர்கள் இல்லையாம்—அப்படியானால் அவர்களும் அயோக்கியர்களாகி விடுகிறார்கள் என்பதை மறந்து விடுகிறார்கள்! நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் மழை பெய்யுமே!

இது ஏழை நாடா என்றால் இல்லை. இங்கு ஒன்றே காலணா கூலியென்று ஒப்பாரி வைத்தாலும் இங்குள்ள மடங்களும், கோயில்களும் நம்மைக் கேலிபேசுகின்றன. மடாதிபதிகளின் பல்லக்குகள் மாறி 'பாண்டியாக்'குகளாகின்றன. அவர்களது சொற்பொழிவாளர்கள் செல்லப் புதுவித மோட்டார்கள், அவர்கள் கழுத்திலே தங்கத்தால் உருத்திரக்காய் மாலைகள், சிடகோடிகளுக்குப்பணமும் பரிசும், ஒருநாள் படையலுக்கு ஆயிரக்கணக்கான ரூபாய்கள், வழிநடைச்செலவிற்கு இலட்சக்கணக்கில் கணக்கு... தில்லை நடராசரும், திருவாரூர் தியாகேசரும், திருப்பதி அரங்கனாதரும், விழுந்து விழுந்து சிரிக்கிறார்கள்...பக்தர்களே, பக்திப்போதையால் பகுத்தறிவை இழந்து விட்ட பரம முட்டாள்களே, எங்களுக்கேன் தங்கநகைகள், வெள்ளி வாகனங்கள், விதவிதமான பட்டாடைகள், வேளைக்கொருபடையல், நேரத்திற்கொரு நிவேதனை! எங்களைக் கேலிசெய்கிறீர்களா, கிண்டல் புரிகிறீர்களா? தங்கமும் வெள்ளியும் படைத்தவர்கள் நாங்கள். நெல்லையும் நீரையும் தந்தோம் உங்களுக்காக—கூலிக்கு வேலை

செய்யவில்லை, எங்கள் அருளப்பா உங்களுக்கு......... இப்படிப் பேசுகிறார்கள். இவைகளையெல்லாம் உணர்கிற பொழுது இது ஏழை நாடென்று யாரால் ஒப்புக்கொள்ள முடியும்?

ஆனால் வறுமைக்கும் வாட்டத்திற்கும் காரணம் இருக்கிறது. அதற்கு மாற்று மருந்தும் இல்லாமல் போக வில்லை. இங்கு சமத்துவ வாழ்வில்லை, சமத்துவ வாழ் வென்றவுடன் எத்தனை வகையாகப் பேச்சுக்கள் நமது காதுகளில் விழுகின்றன. நாட்டு நடப்பு......அவைகளிலே ஒரு சிலவற்றைப் பார்ப்போமே!

சமத்துவம் பொன்னான தத்துவம், தங்கமான திட் டம்! கேட்க இசைவாணரின் கானம்போல, பார்க்க நல்ல நடிகனின் நடிப்பைப்போல இனிமையாக இருக் கிறது! சமத்துவம்......எல்லோரும் ஒரு நிறை, ஒரு இனம், ஒரு குலம்! ஆனால் வாழ்வில் மேற்கொள்ள முடியாமைக்கு வருந்தத்தான் வேண்டியுள்ளது. மலர் களைப் பாருங்கள். எத்தனை பிரிவுகள்? மாம்பழம் ஒரு வகைக் கனியினத்தைச் சேர்ந்தது. ஆனால் அதில் எவ் வளவு வகைகள்? புள்ளினம் என்று குறிப்பிட்டாலும் கழுகும், இராஜளியும், கிளியும், புறாவும், சிட்டும், மைனா வும் வெவ்வேறாகத்தானே, வாழ்கின்றன—வாழ முடியும். அது போலத்தான் மனிதகுலம் ஒன்றானாலும உயர்வு தாழ்வுகள், மேடு பள்ளங்கள் தேவைப்படுகின்றன! இனப்பிரிவுகள் மட்டும் போதவில்லை, சாதிப்பிரிவுகள், சமயப்பிரிவுகள் வேண்டப்படுகின்றன. இல்லாவிட்டால் வாழ்வு அமைதியாகப் போக முடிவதில்லை, வெவ்வேறு பாதைகளில் கூட்டம் கூட்டமாகப் பிரித்து விடப்பட் டால்தான் நெருக்கடி குறைகிறது. வகுப்புக்கு வகுப்பு தனி நுழைவுவாயிற் படிகள் வைத்திரா விட்டால் அங்கு என்ன நடக்கும்? சண்டையும் சச்சரவும்தானே! இத்தகைய தற்காலபுத்தியைக் கழற்றியெறியாத அறி

ளூர்களும் உண்டு. நல்ல மலர்வனம் — அங்கு ரோஜா, மல்லிகை, முல்லை, குண்டுமல்லீ......மலிந்திருந்தன. ஆனால் வாடிக்கிடந்தன. செடிகளும் கொடிகளும் துவண்டு நின்றன. இது என்ன 'ஸ்லீப்பிங் ப்யூடி' கதைபோலக் காணப்படுகிறதே! உற்றுப் பார்த்தால் வயல் வறண்டிருக்கிறது — நிலத்திலே எருவில்லை. பிறகு வறண்ட வாய்க்கால் வழியே சென்றான். வாய்க்காலின் முடிவிடத்திலே ஒரு ஏரி, ஏரிநிறைய நீர் தளும்பி வழிந்து கொண்டிருக்கிறது! ஒரு இடத்திலே நீரின்மையால் வாட்டம், பிறிதொரு இடத்தில் நீர் நிறைந்திருப்பதால் போராட்டம்! இங்கே வறண்ட வயல்கள், அங்கே ஏரியுடைப்பு, வெள்ளம்! ஏன் இந்த நிலை? ஆம், இன்றைய சமூகமும் இந்த நிலையில் தானுள்ளது. ஒரு இடத்தில், அவசியமற்ற இடத்தில் பணத்தேக்கம், பிற இடத்தில் வறுமை, இல்லாமை' இதனைச் சமப்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் சமத்துவ வாழ்வு மலரும்......இப்படிக் கூறும் உவமை நயந்தெரிந்த உத்தமர்களும் உண்டு, இன்று நாடுள்ள நிலையில் சமத்துவ வாழ்வு சாத்தியமல்ல; ஆண்டுகள் பல கழித்துக் கிடைத்த விடுதலை நிலைத்து, அரசியல் பீடத்தில் ஆட்டம் குறைந்து, பொருளாதாரம் பெருகி......பிறகுதான் இந்த பேச்சைப் பேசலாம்...என்று கூறும் மாக்கிவெல்லிகள் உண்டு. கை விரல்கள் ஐந்தும் சமமாகவா இருக்கின்றன. அப்படித்தான் மக்களும் என்று நா கூசாமல் பேசும் நயவஞ்சக நரிகளும் வாழத்தான் செய்கிறார்கள்.

இப்படித் தங்கப்பன் மனத்திலே கருத்துரைகள் கூட்டியமாடிக் கொண்டிருந்தன. வண்டியும் வெகு வேகமாகப் போய்க்கொண்டிருந்தது. சிதம்பரம் வந்து நின்றது. அங்கு இரண்டு தயிர்ப்பட்டைகளை வாங்கிக் கொண்டான். வண்டி புறப்பட்டது.

சமத்துவ வாழ்வு—வார்த்தைகளின் அமைப்பு மிக நன்றாக உள்ளது. சமத்துவம் இல்லையென்றால் வாழ்வில்லை. அப்படி உயிர் பிழைத்திருந்தால் அவன் வாழ்வதாகக் கனவு காண்கிறான். அவன்நிலைக்குப்பெயர் தாழ்வு! பிறனொருவருடன் ஒத்த நிலையில் காலங் கடத்துவதுதான் -வாழ்வு, வேறென்றால் உயிர் வேறு உடல் வேறு என்று பிரிப்பதைப்போல! இரண்டும் இணைந்தால்தான் இயங்க முடியும். சமத்துவ வாழ்வு முடியுமா, முடியாதா என்பது பிரச்சினையல்ல—வேண்டுமா, வேண்டாமா, என்பது தான் நம்முன் உள்ள கேள்வி! ஆகுமா, ஆகாதா என்பதல்ல, இப்பொழுது நாம் எடுத்துக் கொண்டுள்ள ஆராய்ச்சி. அவசியமா, அனாவசியமா என்பது தான் நாம் முடிவுசெய்ய வேண்டிய பொருள்! ஆகவேதான் சமத்துவ வாழ்வு வேண்டும்—பொருளியல் வகையில் மட்டுமல்ல, ஒவ்வொரு துறையிலும்! அதற்கு விலை எதுவானாலும்—ஷைலக்கின் துலாக்கோல் நீட்டப்பட்டாலும் எவரும் நடுங்கக்கூடாது.

தங்கப்பன் தனது நினைவுக்கூடாரத்தை விட்டுவெளியில் வந்தான். புகை வண்டியில் அங்கும் இங்கும் பேசிக் கொண்டிருந்தார்கள். அரசியல் வாதிகளுக்கு இம்மாதிரி இடங்கள்தான் நகர சோதனைக்குரியவை! ஆகவே அவர்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்று உற்றுக் கேட்டான். அவர்கள் நாடகங்களைப்பற்றிப் பேசிக் கொண்டார்கள்.

“இப்பொழுது நாடகக் கம்பெனிகளெல்லாம் திருந்தி விட்டன”

“ஆமாம், இராமரும் சீதையும், கோவலனும் மாதவியும், வள்ளியும் முருகனும், பவளக்கொடியும் அர்ச்சுனனும் மேடைக்கு வரவே அஞ்சுகிறார்கள்”

“நாட்டில் நடப்பதை நடத்திக்காட்டத்தான் நாடகம்”

"சிவலீலா' போட்டவருக்கு நட்டமாமே?"

"பின்னே என்ன வருமாம்?"

"எரிமலை' என்ற நாடகத்தைப் பார்த்தாயா?"

"ஓ நன்ருகப் பார்த்தேனே—கதையென்ருல் அப்படியிருக்கவேண்டும். நமது சரிந்த சமுதாயத்தை அப்படிப் படம் பிடித்து விட்டார்."

"அதனை உண்மையிலேயே சினிமாப்படம் பிடிக்க வாங்கிவிட்டார்கள் தெரியுமா?"

"அதனை எழுதியவர் பேர் எமிலியாமே. நீ பார்த்திருக்கிருயா?"

"ஓ பார்த்திருக்கிறேனே, பத்திரிகைகளில்?"

"அதைக் கேட்கவில்லையப்பா, நேரில் தெரியுமா?"

"யாருக்குமே தெரியாது என்றுதான் நினைக்கிறேன்'

மெதுவாகத் தங்கப்பன் அந்த உரையாடலில் கலந்து கொள்ள முயற்சி செய்தான். ஆனால் அவனை அவர்கள் புரிந்து கொள்வார்களே, மிக எளிதில்! ஆகவே கொஞ்ச நேரம் வறிதிருந்தான். பிறகு ஆரம்பித்தான்:

"இப்பொழுது என்ன நாடகம்?"

"எங்கே"

"..........."

"எமிலி எழுதிய சாய்ந்த தராசு"

"அது எப்படி?"

"அதைப் பார்க்கத்தானே போகிருேம்"

"எப்படிப் பேசிக் கொள்கிருர்கள்?"

"ஒவ்வொரு நாளும் திருவிழா தானும்"

பிறகு தன் பேச்சை நிறுத்திக் கொண்டான். அவன் மனதில் எமிலியைப் பற்றியே எண்ணம். அவன் யார்? அவனைப்பற்றி நாடெங்கும் புகழ்கிறார்கள். அவன் மட்டும் தன்னைக்காட்டிக் கொள்ளவில்லையே. அவன் புகழை, பெருமையை விரும்பவில்லையா? தியாகிகள் தங்களை எப்பொழுதும் விளம்பரப் படுத்திக் கொள்வதில்லை. சிலர் கோயிலில பத்து ரூபாய் மணியைக்கட்டி விட்டு, பதினைந்து அங்குல அளவில் தங்கள் பெயரைப் பொறித்துக் கொள்கிறார்கள். இது தருமமல்ல, தனுக்கான விளம்பரம்!

தங்கப்பனுக்குத் தெரியாமல் அரசியல் வானத்தில் ஒளிவிடும் நட்சத்திரம் யாராக இருக்கமுடியும்!

எமிலியின் எழுத்து வேகம் எவ்வளவு தூரம் பரவுகிறது தெரியுமா? பாமரரின் நெஞ்சில் கை வைத்துப் பார்க்கிறதே, ஏழையின் கண்ணீரைத் துடைக்கிறதே, வறியரின் வாழ்விலும் வளப்படுத்த வழி யிருக்கிறது என்று ஊக்கங்கொடுக்கிறதே!......தங்கப்பனும் பேசுகிறான், அவன் பேச்சிற்கு இவ்வளவு சக்தியுண்டா?

நாட்டின் நிலையை உணர்கிற பொழுது நாடகத்தினால்தான் அதிகம் கருத்துக்களைப் பரப்ப முடிகிறது. பேச்சைக் கேட்கிற பொழுதே மறந்து விடுகின்றனர்! ஆனால் நாடகத்தில் பார்த்தவைகளை, சினிமாவில் கேட்டவைகளை மக்கள் மறப்பதில்லை. அதிலே வரும் வசனங்களைச் சொல்லிப் பார்க்கிறார்கள். பாடல்களைப் பாடிக் கொண்டே தங்கள் வேலைகளைக் கவனிக்கிறார்கள். பேச்சின் மூலம் செய்யும் பிரச்சாரம் ஆமைவேகம், செயலின் மூலம் சீர்திருத்தம் பரவுவது முயல் வேகம்—இரண்டையும் போட்டிக்கு விட்டால் முயல் தூங்கிவிட்டால் ஒழிய ஆமை வெற்றி பெற முடியாது!

"வாருங்கள், வணக்கம்"

என்று கைகூப்பி வணங்கி வரவேற்றனர். மலர் மாலை சூட்டினர். வாழ்க முழக்கம் செய்தனர். அந்த வண்டியிலிருந்தவர்கள் ஆச்சரியப் பட்டனர். ஒன்றே காலணாதான் மிச்சம் என்று தப்புக் கணக்குப்போட்டு பையையே பார்க்காமல் வந்த பிரயாணி, கடைசி நேரத்தில் பையில் கை விட்டுப் பார்த்தால் ஒரு ஐந்து ரூபாய் நோட்டுக் கிடைத்தால் எப்படி இருக்கும்? அப்படித்தான் தங்கப்பனைப் பார்த்தார்கள்.

நாடகம் தொடங்கிற்று. மிக விறு விறுப்பான கதை-கதை ஓட ஓட தங்கப்பனுக்குத் தலைசுற்ற ஆரம்பித்து விட்டது! ஒவ்வொரு வார்த்தையும் அவனுக்குச் சுளீர் சவுக்கடியாகப்பட்டது! கதை யொன்றும் பிரமாதமான தல்ல—சாதாரணமான நிகழ்ச்சிகளைப்பின்னிக் கோத்ததுதான்! ஒரு வாலிபன் ஒருவளைக் காதலிக்கிறான். சாதி வேலியைத் தாண்டித் திருமணம் செய்கிறான். ஆனால் அவன் திருமணமானதிலிருந்து அரசியல் இயக்கங்களி லீடுபட்டு எதையும் கவனிக்காமல் திரிகிறான். அவனுக்கு ஒரு குழந்தை. தாய் மிகவும் கடின வாழ்வு நடத்துகிறாள். ஆரம்பமுதல் அவனை எப்படியும் கெடுப்பது என்று உறுதி செய்து கொண்ட சாதி வெறியர்கள் அவனுக்குத் துளியும் சம்பந்தமில்லாத ஒரு பெண் கொலையில் சிக்க வைத்து விடுகிறார்கள். சந்தர்ப்பம் அவர்களுக்குத் துணை செய்து அவனுக்குத் துரோகம் செய்து விடுகிறது! தண்டிக்கப்படுகிறான். ஆனால் பெருங்காற்று ஏற்பட்டு சிறைச்சாலை இடிந்து விழுகிறது. வெளியில் வந்து எதிரிகளைப் பழி வாங்குகிறான். அவன் மனைவி அவனுக்குத்துணை நிற்கிறாள்... இதுதான் கதைச் சுருக்கம்!

கதையிலே வருகின்ற வசனங்கள் அவனுக்கென்று தயாரிக்கப்பட்டவை போலிருந்தன. அவனது கொள்கைகளைக் கொப்பளித்துக் கொண்டிருந்தன. சமத்துவ

வாழ்வைப் பற்றிக் கதாநாயகன் பேசும்பேச்சுக்கள் அத் தனையும் அப்பழுக்கில்லாமல் அவன் கூட்டங்களில் பேசுங் கருத்துக்களின் வேறு வடிவங்கள்!

...நாடு என்று சொல்கிறீர்களே, இந்த வீடென்ன காட்டிலா இருக்கிறது? நான் மட்டும் இந் நாட்டைச் சேர்ந்தவளல்லவா?

எதிர் காலத்தை உருவாக்குகிறேன் என்கிறீர்களே, இதோ தொட்டிலில் தூங்கும் தற்காலத்தைத் திரும்பியும் பார்ப்பதில்லையே!

குழந்தைக்குக் கடுநோய்-கையில் காசில்லை. நீங்கள் குழந்தை வளர்ப்புச் சங்கத்திற்கு நிதி திரட்டச் சென்று விட்டீர்களே!

மனைவியின் துயரை மாற்ருத நீங்கள் மக்களின் துயரை மாற்றுவதாகச் சொன்னால் யார் நம்புவது?

நீங்கள் செய்வது தியாகம் என்ருல், அந்தத் தியாகம் எரிந்து சாம்பலாகட்டும்! என் வீட்டில் ஒன்றுமில்லை யென்று கூறிக் கொண்டு எட்டு வீட்டில் ஏறியிறங்கிக் கடன் வாங்கிச் சமைக்கிறேனே, இது எந்தத் தியாகியும் பட்டறியாத அனுபவம். காசில்லாத காரணத்தால் கடன் கொடுத்தவருக்குப் பல்லைக்காட்டி நிற்கிற நிலைமை எந்தத் தியாகியும் நினைத்து மறியாத நிகழ்ச்சி.

பேச்சு, மழைக்காலத்தில் குழந்தைகள் விடும் காகிதக் கப்பல்—வேடிக்கைக்குப் பயன்படும், வினைமுடிக்க உதவாது!

காதல் தியாகத்தின் ஊற்றுக் கண். அன்பில்லாத நெஞ்சில் அருள் எப்படி வளர முடியும்?

நான் சாகக் கிடந்தேன், நீங்கள் மறியல் நடத்தினீர்கள்! மேடைப் பேச்சுக்கு இந்த நிகழ்ச்சி பயன்படலாம்,

நியாயப் பேச்சுக்கு இது நில்லாது, மனச் சாட்சிப் பேச்சுக்கு இது செல்லாது !

இந்த நாட்டுக் கடவுள்கள் ஓரவஞ்சனைக்காரர்கள். ஆழ்வார்களையும், நாயன்மார்களையும் சோதிக்கத் தியாகம் செய்யச் சொன்னார்கள். மனைவியை, பிள்ளையைக்கூட! கடவுள்களே புத்தியில்லாத செயல்களைச் செய்யத் தூண்டுகிறார்கள்—கடவுள்களின் அறியாமை ஒழிக!

நீதி இங்கே சாய்ந்த தராசாக இருக்கிறது. தேய்ந்த படிக்கற்களால் அளக்கிறார்கள் !

என்னைத் திருடன் என்று வேண்டுமானாலும் சொல். ஆனால் தியாகத்தை விலைகூறிப் பதவி வாங்கும் பாதகர் பட்டியலிலே உள்ள ஒருவன் என்று மட்டும் கூறாதே !

சிறைவாசம் இங்கு தியாகத்தின் உரைகல். இரண்டு முறை சென்றால் இண்டர், நான்கு முறை சென்றால் பி. ஏ, தேரியது போல, ஐந்து தடவை சென்றால் ஆனர்ஸ் பட்டம் பெற்றது போல, ஆறுமுறை சென்றால் எம். ஏ.........! அப்படித்தான் பதவியை வாங்குகிறார்கள் !

காபிக்கடைக் கணபதி அய்யன் தான் அன்னதானம் செய்வதாகத் தம்பட்டம் அடிக்கிறான்.பணத்தை வாங்கிக் கொண்டு பலகாரம் கொடுப்பது தருமம் என்று பேசினான். வேசி விமலாவும் தானும் தருமம் செய்வதாகத் தான் சொல்கிறாள். வேலை வாங்கவும், பதவியில் உயர்வும் எண்ணிச் சிறைவாசம் சென்ற உத்தமர்கள் தியாகம் செய்தார்கள் என்று எப்படிக்கூறமுடியும்? அது தியாக வியாபாரிகளின் பேரம் என்று வேண்டுமானால் சொல்லலாம் !

நீங்கள் சிறைசென்றால் உங்களுக்கு மாலைமரியாதைகள்......! வெளியில் வந்தால் வரவேற்புகள் ! நான் நிமிடத்திற்கு நிமிடம் சிறையில் இருக்கிறேன். காதல் கலியாணமாம். சாதிவிட்டு சாதியில் கட்டிக்கொண்டால்

தெருவில் நிற்கவேண்டியது தான்......என்று பேசும் வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டு தெருவில் நடப்பது சிறைவாசத்திலும் பெருங் காராக்ருக வாசம்!...............

இவைகள் நாடகத்தில் வருகின்ற முக்கியமான வசன பாகங்கள் — தங்கப்பனுக்கு மயக்கம் வந்ததில் ஆச்சரியமில்லையல்லவா? கடைசிக் கட்டத்தின் முதலில் பேசச் சொன்னார்கள். மிக அழகாகப் பேசினான். அவன் பேசிய பேச்சிலிருந்து அவன் மனம் மாறி யிருந்தான் என்று தெரிந்தது!

"நான் தோற்றுவிட்டேன். தங்கப்பர்கள் செய்ய முடியாததை எமிலிகள் செய்ய முடியும். ஆம், நான் உணர்ந்து கொண்டேன். நான் கண்டது இந்த இளம் வயதில் இருமல்—எமிலி கண்டது வெற்றி! எங்கும் சீர் திருத்த வெறியைக் கிளப்புகிறார். கூட்டங்கள், மாநாடுகள் போடுவதை விட இம்மாதிரி நாடகங்கள் நடத்துவதில் சிறப்பு இருக்கிறது—அதை மறுக்க முடியாது. ஆனால் எமிலிகளை உண்டாக்கப் பேசுவேண்டியுள்ளதையும் மறக்கக் கூடாது. எத்தனை தலைவர்களின் பேச்சும் கருத்தும் எமிலியை உண்டாக்கினவோ தெரியவில்லை. எமிலியை உங்களைப்போல எனக்கும் பார்க்க ஆசைதான். ஆசையை நிறைவேற்ற அவர் சில காலம் வேண்டுகிறாராம். நாடகத்தில் வருகிற பாத்திரங்களிலே நான் எமிலியை, கணத்திற்குக் கணம் சந்திக்கிறேன். எமிலி வாழ்க! 'சாய்ந்த தராசு' நிமிர்க!"

என்று முடிந்தது அவனது பேச்சு!

பிறகு தங்கப்பன் கிளம்பி விட்டான். அவன் குடியேறிய உலகத்திலிருந்து தலை குப்புற விழுவது போலிருந்தது. இருந்தாலும் யோசித்தான். மேலும்மேலும் யோசித்தான்! கண்ணப்பர் அவன் முன்னால் வந்து சிரித்தார்.

கண்ணிழந்த தந்தை, வயதான தாய் இவர்களைப்பாது காக்கிருரே அது போதாதா? அவர் எவ்வளவு அன்பாகப் பராமரிக்கிருர். வாட்டத்திலும் அவர்களைவாட விடவில்லை யே! அவரது வருவாய் முழுவதும் செலவிட்டும் குடும் பத்தினைச் சமாளிக்க முடியாமல், கண்ணம்மாவின் தங்க நகைகளைத் தவிட்டுக்கு மாற்றினுரே! அவர்கள் தெய்வங் கள், தியாக பிம்பங்கள். தங்கப்பன் போகும் திசை தெரி யாமல் ஓடி ஓய்ந்து விட்டான். தவருன 'இரயில்வே கை டை' வைத்துக் கொண்டு எங்கோ போய் விட்டான். ஆம் அவன் திரும்பி வரத்தான் வேண்டும். வந்து வாழ்வை, வளையும் குடும்ப பாரத்தை நிமிர்த்தத்தான் வேண்டும்.

அருளப்பன் மட்டும் தியாகம்செய்ய வில்லையா? அவன் அர்த்தத்தோடு படிப்பை விட்டான். தங்கப்பனுவது தடங் கலின்றிப் படிக்கட்டுமே என்ற தியாக உணர்ச்சியுடன்! அவன் செய்த தந்நல மறுப்புக்கும் பொருளுண்டு. பட் டாளத்தில் சேர்ந்தான். வீட்டிற்கு வேண்டிய அளவு பணம் அனுப்பினுன். அனுப்புகிருன். தங்கப்பன் இன்னமும் பேசிக்கொண்டே இருக்கிருன். அருளப்பன் ஒரு விதவை மணம் செய்து விட்டான். விதவை மணம் என்ருல் எவ்வளவு தடங்கல்கள், இடையூறுகள்......... அத்தனையும் தாண்டிச் செய்து விட்டான்! அவனது பேச் சில் நடமாடும் இலட்சியம் அருளப்பனது செயலில் மலர்ந்து மணம் வீசியது!

தங்கப்பன் நினைத்தான். அவன் நெஞ்சு எரிமலையாகி விட்டது, அவன் எண்ணங்கள் வெள்ள மாயின! அப் பொழுதுதான் தாமரைக் கண்ணியின் வண்ண முகம் வந்து நின்றது. அவன் முகத்தைத் தன் கைகளால் மூடிக்கொண்டான். விசித்து விசித்து அழுதுவிட்டான். அவளோ கேள்வி மேல் கேள்வியை வீசினுள். தாமரைக் கண்ணி எங்கிருக்கிருளோ? யாரை மணந்து கொண்

டாளோ? என்ன செய்கிருளோ? யாருக்குத் தெரியும்? அவள் இன்னமும் மணக்காமல் இருப்பாளா? இருந்தால்................ தங்கப்பன் வாழ்வு செயமைப் படலா மல்லவா?

தங்கப்பன் கொஞ்ச நேரம் தனது நெஞ்சு பாரந் தீர அழுதே தீர்த்து விட்டான். பிறகு நினைத்தான். எப்படியும் அருளப்பனுக்கு நடக்கப் போகும் பாராட்டுக் கூட்டத்தில் கண்ணப்பரை மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டியது தான் முறை—அவனது பர்வை மாற்றப் பட்டது என்பதை யுணர்த்தும் திட்டம்!

புகைவண்டியை விட்டிறங்கித் தள்ளாடித் தள்ளாடித் தன் அறைக்குச் சென்ருன். அங்கு அலங்கோலமான நிலையில் கிடந்த பொருள்கள் அவனைப்பார்த்து வெறிச் சிரிப்பு வீசின. கதவு வழியாகப் போடப்பட்டிருந்த கடிதங்களைப்பிரித்தான். பல கூட்டங்களுக்கு அழைப்புகள்! கூட்டங்களில் பேசுகிருேம். மக்கள் கேட்கிருர்கள். அதுவும் பகுத்தறிவுப் பிரச்சாரம்! புயல் நடையில்! விளைவு இல்லையென்று யாரும் கூற முடியாது. ஆனல் குறைவென்பதை மட்டும் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். பொதுமக்கள் உள்ளம் சண்டிக் குதிரை—பேச்சுச் சவுக்கால் அடிக்கிருேம். ஓடுகிறது. பிறகும் அடிக்கிருேம். மீண்டும் ஓடுகிறது. அடித்த இடத்திலே அடிக்க அடிக்கப் புண் ஏற்படுகிறது. கண்டித்தால் வலுக்கிறது. வண்டி உடைகிறது! அவைகளைத் தூக்கி எறிந்தான். ஆனல் கடைசிக்கடிதம் அவனல் எறியக் கூடியதே அல்ல! வாழ்வு முழுவதும் வைத்துப் பூசை செய்ய வேண்டிய ஒன்று.

அந்த முடங்கலின் முழு விபரமும் நாம் புரிந்து கொள்ள வேண்டியதில்லை. காதல்கடிதங்களைப் படிக்கக் கூடாது. ஆனல் படிக்காமல் யாரும் இருப்பதில்லை.

அந்தக் கடிதத்தைத் தாமரைக் கண்ணி எழுதியிருந் தாள்!.............................பல நாட்களுக்குப் பிறகு தங்களைச் சந்திக்க விரும்புகிருள் தாமரைக் கண்ணி —என்னை மறந்திருக்க மாட்டீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அருளப்பருக்கு நடக்கவிருக்கும் விருந் தில் தாங்கள் கலந்து கொள்வதாக அறிந்து மகிழ் கிறேன். அங்கேயே என்னைப் பாருங்கள்............இப் படி முடிந்திருந்தது!

அருளப்பனுக்கு நடக்கவிருக்கும் பாராட்டுக் கூட்ட மும், தேநீர் விருந்தும் தங்கப்பனுக்கு வாழ்விலோர் திரு நாளாகத் தென்பட்டது. அங்கேதான் தனது அஞ் ஞாத வாசம் கலையப் போகிறது என்ற எண்ணம வந்த தும் மகிழ்ச்சி—மட்டற்ற இன்பப் பெருக்கு!

அப்பொழுது யாரோ கதவைத் தட்டினர்கள். எழுந்து போய்க் கதவைத் திறந்தான். அங்கே பெட்டியும், படுக்கையுமாகக் கணவனும் மனைவியும் நின்றனர். அவர் களை முதலில் புரிந்துகொள்ள முடியவில்லை! பிறகு அவன் சங்கரன், தனது கல்லூரித் தோழன் என்று புரிந்து கொண்டான். அவனைப் பார்த்துப் புரிந்துகொண்டவுடன் அன்றொரு நாள் 'பிரின்சிபால்' பரமானந்தம் பிள்ளையின் சொற்கள் நினைவிலெழுந்தன.

"வர்டா, சங்கரா!"

"நீ இங்கிருப்பது இந்த ஊரில் இறங்கிய பிறகுதான் தெரியும்!"

"சரி, உள்ளே வந்து பெட்டிகளை வை! அம்மா! உள்ளே வாருங்கள்."

"மாலீ, இவன் யார் தெரியுமா? எனக்கர்கக் கல்லூரி யில் போராடி நீக்கப்பட்டவன். இவனை விழுந்துதான் வணங்க வேண்டும்."

"வீண் புகழ்ச்சி கிடக்கட்டும், சாப்பாடு வரவழைக்கட்டுமா?"

"வரும்பொழுதே முடித்துக்கொண்டோமே!"

"என் வீட்டிற்கு வரும்பொழுது எப்படிச் சாப்பிட்டு விட்டு வரலாம் ?"

"தங்கப்பா, நீங்கள் எல்லாம் ஊர்சுற்றி உத்தண்டர்கள். இருக்கிருயோ, என்னவோ என்று, பயந்து கொண்டே வந்தேன். அதனுல்தான் சாப்பாட்டை முடித்துக் கொண்டு வந்து விட்டேன். மன்னித்துவிடு"

சங்கரன் எப்பொழுதுமே கல கல வென்று வேடிக்கையாகப் பேசுவான். எல்லோரையும் எளிதில் நண்பர்களாக்கி விடுவான். இல்லா விட்டால் அவனுக்குப் பரிந்து கொண்டு; கல்லூரி மாணவர்கள் வழக்கமான கட்சி மாச்சரியங்களை மறந்து ஒன்று சேர்ந்து வேலை நிறுத்தம் செய்வார்களா? அது வரை பேசாமலிருந்த அவன் மனைவி சிரித்துக் கொண்டே பேசினுள்.

"தாமரைக் கண்ணி இருந்தால் நிச்சயமாகச் சாப்பிடாமல் வந்திருப்போம்"

சங்கரன் சிரித்தான். தங்கப்பனும் முகம் மலர்ந்தான். அவனுக்கு எப்படியும் சங்கரனிடம் பரமானந்தம் சொன்ன குற்றச்சாட்டைப்பற்றிக் கேட்டுவிடுவது என்று முடிவு செய்து கொண்டு அவனை வெளியில் அழைத்து வந்தான்.

"சங்கரா, இப்பொழுது என்ன செய்கிருய் ?"

"ஏதோ சம்பாதிக்கிறேனப்பா, மதுவிலக்கு இன்ஸ்பெக்டராக இருக்கிறேன் !"

"ஊதியத்தோடு ஒரு நல்ல காரியத்தைச் செய்கிருய்!"

"உன்னைப் பற்றி......"

"ஏதாவது கேட்க வேண்டுமானால் கேள், சொல்லுகிறேன்"

"நம் கல்லூரியில் படித்த மாலதியை உனக்குத் தெரியுமா?"

சங்கரன் கடகடவெனச் சிரித்தான். தங்கப்பன் என்ன கேட்க நினைக்கிறான் என்பது புரிந்து விட்டது. அவனால் வந்த சிரிப்பைத் தாங்க முடியவில்லை.

"தங்கப்பா, நீ என்ன கேட்க நினைக்கிறாய் என்பது புரிந்துவிட்டது. இதோ உள்ளே இருக்கிறாளே அவள் தான் மாலதி! அவள் தற்கொலை செய்துகொண்டதாக ஒரு வதந்தி யிருந்தது. ஆமாம், அந்த வதந்தியை நானும் அவளும் சேர்ந்து திட்டமிட்டே வெளியிட்டோம். அது பரவியது. அது மட்டுமா? அவள் வயிற்றிலே கொஞ்ச நாள் துணிவைத்துக் கட்டிக்கொள்ள வேண்டி வந்தது. மாலதியின் பெற்றோர்கள் மிகவும் பழமை விரும்பிகள். அதுவும் அவர்கள் மேற்குலம், பார்ப்பனர் குலம். கேட்க வேண்டுமா? நான்தான் தெரியுமே, ஆதித்திராவிடன் என்று! எங்களிருவருக்கும் திருமணம் நடக்க முடியுமா? அதனால் முதலில் ஒரு திட்டமிட்டேன். மாலதி கருவுற்றாள் என்றாலாவது பயந்து கொண்டு இணங்குவார்களா என்று பார்த்தோம். தோற்றோம். பிறகுதான் மாலதி தற்கொலை நாடகமாடினாள். அப்புறம் பதிவுத் திருமணம் செய்துகொண்டோம். இப்பொழுது யாரும் எங்களைக் குறை கூறவில்லை. மாலதியின் பெற்றோர்கள் வந்துபோகிறார்கள்!"

"என்ன ஆச்சர்யம்!"

தங்கப்பன் சங்கரனின் வார்த்தைகளைக் கேட்டுத் திகைத்துப்போனான். தன்னைச் சுற்றிலு முள்ளவர்கள் அத்தனைபேரும் அறிவாளியாகவும், தான்மட்டும் முட்

டாளாகவும் தெரிந்தது. அந்த அவமானத்தை அவனால் சமாளிக்க முடியவில்லை.

தனக்குள் சிந்திக்கலானான்.

"ஊர்சுற்றி, மேடை ஏறி, மாலையேற்று, 'மைக்' குக்கு முன்னால் நிற்காவிட்டால் தியாகம் செய்ய முடியாதா? ஏன் முடியாது? அவனவன் இருக்குமிடத்தில் இருந்தபடியே ஒரு பெரிய புரட்சி செய்யலாமே! கோயில்களிலுள்ள குறைபாடுகளைக் கூறிக் கொண்டுதான் இருக்கிறோம். அங்கு நடக்கும் கோலாகலங்கள் நின்றபாடில்லை. ஆனால் கோயில் கூத்துக்களில், களியாட்டங்களில் பங்குபெறும் ஒவ்வொருவரும் சிறு தியாகம் செய்தால் புரட்சி பிறக்காதா? புதுமை பெருகாதா? பூக்காரன் பெண்களின் கூந்தலுக்குத்தான் மலர்விற்பேன் என்று கூறட்டும். மேளக்காரர் மனிதர் விழாவிற்குத்தான் இசை வழங்குவோம் என்று பேசட்டும். ஆடும் ஆடலழகிகள் ஆண்டவன் ஆலயத்தை அன்பாலயமாக மாற்றும் வரை ஆடமாட்டோம் என்று சொல்லட்டும். அன்னப்படையலிடும் பக்தர்கள் ஆலய வாயிலில் அலரும் வறியர்களுக்குத்தான் படைப்போம் என்று அறிவு வார்த்தைகளை வீசட்டும்—ஒரு கணநேரத்தில் புரட்சி நடக்காதா?

வள்ளிக் கணவன் பேரை வழிப்போக்கர் சொன்னாலென்ன...பாடிய இசைவாணர் விழித்தெழு வீரத்தமிழா ...போன்ற பாடல்களையன்றி பிறவற்றைப் பாடேன் என்று உறுதிகூறி அதனை நிறைவேற்றினால் அவர் சீர்திருத்தவாதியல்லவா?

பின்ன மரத்திலே கோபிகைகளின் சேலைகளைத் திருடிவைத்துக் கொண்டிருந்த கண்ணன் காட்சியைத் திரைச்சீலைகளில் சித்திரித்த ஓவியன் ஏழைபடும் பாட்டை, ஏற்றங்கொண்டோர் அவர்கள்மீது ஏவும் கொடு

மையைத் தீட்டிட முனைந்தால் அவர் ஓர் புரட்சி வீரராக வில்லையா?

ஆடத்தெரிந்தவர்கள் இனி ஆண்டவன்பேரால் அபிநயங்கள் பிடிப்பதில்லையென்று சொல்லி மனித உயர்விற்கான கருத்துக்களை ஆட்டக் காட்சியாகக் காட்டுவேன் என்று சொன்னால் புதுமைவீரர் என்று புகழப் படமாட்டார்களா?

தியாகம் என்ற உடனேயே தன்வீட்டைவிட்டு, உற்றார் பெற்றாரை வெறுத்து ஊர்ஊராய் நாய்போலத் திரிந்து வரவேண்டும் என்று இலக்கணம் எவர் எழுதினர்? அதை எப்படி ஒப்புவது? இருக்குந்தொழிலில் ஓர் புரட்சியை உண்டாக்கி அதை நாட்டின் எதிர்காலத்திற்கேற்ற முறையில் மாற்றிவிட்டால் புரட்சிதான். அவன் தொழிலையும் வாழ்க்கை எழிலையும் மறந்துவிட்டு வறட்டுப் போச்சுக்கு ஓடிவரவேண்டியதில்லை, வந்தால் அவனும் வாய்ப்பந்தல்காரனாகத்தான் போய் விடுவான். செய்யவேண்டும், சொல்வதை! ஆம், அதுதான் இன்று தேவை. முத்திருப்பது தெரியும், சொல்லிக்கொண்டிருக்க வேண்டியதில்லை. மூச்சையடக்கி, அலைக்கஞ்சாது முழுகிடவேண்டும்!

சீர்த்திருதவாதியெனும் உழைப்பாளி, பேச்சு எனுங் கண்ணாடிக்குச், செயல் எனும் இரசந் தடவித்தந்தால் தான் சமூகம் எனும் பெண் தனதுநெற்றியிலே கலைந்து அலங்கோலமாக இருக்கும் பொட்டையும், புருவங்களிலே நிறைந்து வழிந்து அழகைப் பாழ்செய்யும் மையையும் திருத்திக் கொள்ளமுடியும். ஆம், நாட்டுக்குத்தொண்டு செய்ய வருவோர் செயலில் எதையும் செய்யத் தைரியங் கொள்ள வேண்டும்.

ஆம், தங்கப்பன் இதுவரை பாதைதவறிவிட்டான்! ஏன் மாற்றமுடியாது? கெட்ட குணங்களும், பழக்கங்களும்

வேகமாக வளர்கின்றன, நகத்தைப்போல,! வெட்டிப் போடத் தெரியாவிட்டாலல்லவா விழிக்க வேண்டும். தங்கப்பனால் தன் போக்கை மாற்றிக்கொள்ள முடியும். நிச்சயமாய் மாற்றிக்கொள்ள முடியும்!''

பிறகு இருவரும் உள்ளே நுழைந்தனர். மாலதி அங்கு அமைதியாக ஒரு புத்தகத்தை எடுத்துப்படித்துக் கொண்டிருந்தாள்.

"இப்பொழுது திடீரென்று எங்கு புறப்பட்டீர்கள்?''

"சென்னைக்கு''

''ஏன்?''

''மாலதியின் பால்ய தோழியாம். அன்னமாம். அவள் விதவையாம். பிறகு யாரோ ஒரு பட்டாளத்தானை மணந்து கொண்டாளாம். அவர்களுக்கு நடக்க இருக்கும் பாராட்டுக்குப் போகவேண்டும் என்று அடம்பிடித்தாள். புறப்பட்டு விட்டேன்''

''என்ன, எங்கள் வீட்டுக் கல்யாணத்திற்குத் தான் புறப்பட்டிருக்கிறீர்கள்?''

''உங்கள் வீட்டுத் திருமணமா?''

''அன்னத்தை மணந்து கொண்டவன் என் தம்பி அருளப்பன்''

மூவரும் சிரித்தனர்!

அவர்கள் மூவரும் சேர்ந்தே சென்னைக்குப் புறப்பட்டனர். போகும்பொழுது மாலதியும் சங்கரனும் பரிமாறிக்கொண்ட அன்பு நடவடிக்கைகள் அவனை மிகவும் வாட்டின. தாமரைக் கண்ணிக்குத் தான் செய்த துரோகத்தை எடுத்து எடுத்துக்காட்டின! அவர்கள் சிரித்துப்பேசும் பொழுதெல்லாம் தனது சீரழிந்த காதலைக் கேலி செய்வதாகவே அவன் எண்ணினான். மாலதி வேண்டுமென்றே அவனைக் கேலிசெய்துகொண்டே வந்தாள். அடிக்கடி தாமரைக்கண்ணியை இழுத்து இழுத்துப் பேசினாள். அவன் கண்கள் கலங்கிப்போனதைப் பார்த்ததும் மாலதியும் சங்கரனும் பதறிப்போனார்கள். பிறகு கொஞ்சநேரம் அமைதியாகவே போனார்கள்.

# இரவு

தேநீர் விருந்திற்கான ஏற்பாடுகள் மிகப்பெரிய முறையில் செய்யப்பட்டிருந்தன. வட்ட வட்டமான மேசைகள், அதில் கோப்பைத்தட்டுகளில் இனிப்புப் பண்டங்கள், காரப்பொருள்கள்! மேசைக்கொரு ஆள்—வரவேற்க எங்குபார்த்தாலும் காக்கிச்சட்டைக்காரர்கள்—பட்டாளத்தார்கள்! மணியாக ஆக விருந்தினர்கள் வந்த வண்ணமே இருந்தனர். உள்ளூர் பிரமுகர்கள், வெளியூர்த் தோழர்கள், பிரபல எழுத்தாளர்கள், சீர்திருத்தச் செம்மல்கள், புரட்சித்தலைவர்கள், அப்பப்பா காணக்காட்சியாக இருந்தது! ஏராளமான தோழிமார்களும் வந்திருநதாரகள.

அன்னமும் அருளப்பனும் அழகான பூந்தொட்டிகள் நிறைந்த ஒரு மேடையிலமர்ந்திருந்தனர். அங்கேயே இருகிழஉருவங்கள் உட்கார்ந்திருந்தன—அருளப்பனின் பெற்றோர்கள். பாட்டிக்குப் பக்கத்தில் பேத்தி சாந்தா இருந்தாள். கண்ணப்பருமிருந்தார். ஆனால் தங்கப்பன் தனியாக உட்கார்ந்திருந்தான். ஆம், இன்னும் அவர்களுடைய உலகத்திற்குக் குடிவரவில்லை. விருந்து நடந்து கொண்டே இருந்தது. ஆனால் அவன்விழிகள் வேல்விழியார் பக்கமே இருந்தன. காந்தம் இரும்பை இழுக்கும், பெண்களின் கண்களும் காந்த உருண்டைகள், ஆனால் இவை இழுப்பன வேறுஇரண்டு கண்களை! அங்கே அவன்தேடிய தாமரைக்கண்ணி இல்லை. ஆனால் அவள் சாயலுள்ள ஒருத்தி எல்லோரையும் கவனித்துக் கொண்டிருந்தாள். அவள் மூக்குக்கண்ணாடி அணிந்திருந்தாள். தாமரைக்குக் கண்ணாடியில்லையே!

விருந்து முடிந்தது-பேச்சுத் தொடங்கியது! வயது நிறைந்த தங்கப்பனின் தந்தை பேசினர். தங்கப்பனுல் நம்பமுடியவில்லை. வயதான கிழவரையே திருத்தியிருக்கிருர் கண்ணப்பர். திருத்தியா, அவரே பலருக்குச் சீர் திருத்தக் கருத்துக்களை எடுத்துச்சொல்கிற அளவு மாற்றி விட்டார். இழந்தகண்களைக் கண்ணுடியின்மூலம் திரும்பக்கொடுத்திருக்கிருர். தன் தந்தை அம் மா பெரும் கூட்டத்தில் வரவெற்புரை நிகழ்த்தியதை அவனுல் நம்ப முடியவில்லை. கண்ணப்பர் போற்றுதலுக்குமட்டுமல்ல, பூசைக்குரியவர்! படிப்பறியாத தந்தையார் மணிமணியாக, முத்துமுத்தாக வார்த்தைகளை எடுத்து வைத்துப் பேசியதை அவனுல் மறக்கமுடியவில்லை, தியாகம் வீட்டிலே தொடங்குகிறது என்பது அவனுக்குப் புரியாமல் போய்விட்டதே!

பெண் விதவையாக்கப்படுவது பேதமை. அதுவும் இளமை மாருத பெண்களை அடக்கமுனைப்பது அறியாமை. விபசாரத்தை விருந்திட்டு அழைக்கிருர்கள் என்று அர்த்தம்! எதையும் சொல்லிவிடலாம். எனக்கு அது பிடிப்பதில்லை. சொல்லிக் கொண்டிருப்பதைச் செய்து காட்டி விடவேண்டும். நான் பழமையில் ஊறித் தேறியகிழவன். நான் செய்கிறேன் எனது பிள்ளைக்கு விதவைத்திருமணம்! அன்னம் அழகுகெடாதவள், அருளப்பனுக்கு அவளிடம் ஆசைஇருக்கிறது, எனக்கு எழுதினுன். உடனே தந்தியில் சொன்னேன்—உன் விருப்பம் போல் செய்துகொள் என்று! திருமணத்தைத் திருவிழாவாக்கிபணத்தை வாணவேடிக்கை விட்டுக்களைத்தவன் நான். அதனுல்தான் திருமணத்தின் பேரால் சிக்கனம்வேண்டும் என்பதைச்செய்து காட்டச் சொன்னேன். அருளப்பன் மிகச்சுருங்கிய முறையில் பதிவுத்திருமணம் செய்து கொண்டான். திருமணத்திற்கு நாங்களே வரவில்லை. இருந்த இடத்திலிருந்து வாழ்த்தினேம்.

இன்று நண்பர்களுக்கு விருந்து — விருந்திற்காக அழைப்பு அனுப்பப்பட்டு, அதனை ஏற்று வந்துள்ள தோழர்கள், பெரியோர்கள், தாய்மார்கள் எல்லோரையும் நான் வரவேற்கிறேன்.........கிழவரின் பேச்சு, கிடுகிடுக்க வைத்தது கைதட்டல்!

பிறகு பல பெருந்தலைவர்கள் பேசினார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தை வற்புறுத்தினர். பிறகு மணமக்களை வாழ்த்திச் சென்றனர்.

வாழ்க்கை ஒரு நிலாமுற்றம்—காதலர்களுக்கு அது இன்பவேட்டை, திருடர்களுக்கு அதுவே துன்பந்தரும் நாள்! நாம் திருடர்களல்லவே, நம் தாயகம் அன்னமும் அருளப்பர்களாகவே, நிறைந்திருக்கட்டும்.........என்றார் ஒருவர்.

திருமணத்தைப் பலர் பலவிதமாகச்சொல்லுகிறார்கள். அந்தநாளை நான் 'ரெக்ரூடிங் ஆபீசரின்' தங்கும் நாள் என்று கூறுகிறேன். மணமகன் கொஞ்சநேரம் 'ஆபீசரா'கிறான், மணமகள் கொஞ்சநேரம் 'ஆபிசரா'கிறாள்! ஒருவரையொருவர் தெரிந்தெடுத்து வாழ்க்கைப்போரில் கலந்து கொள்கிறார்கள்.........இப்படி யொருவர் பட்டாளத்தையே உதாரணத்திற்கிழுத்துச் சிரிப்பைக் கூட்டி வந்தார்.

அன்னமும் அருளப்பரும் சென்னையும் டெல்லியும் போல இருக்கக்கூடாது......என்றார் ஒரு அரசியல்வாதி.

பெண்ணின் கையில் கணவன்என்ற துப்பாக்கியைக் கொடுத்து விட்டார்கள். அதை உபயோகப்படுத்துவது அவளின் திறமையைப் பொறுத்தது......என்று கூறியமர்ந்தார் ஒரு பட்டாளத்துப் பெரும் பதவியாளர்.

சேலையின் குறுக்கு நூல் பெண், நெடுக்கு நூல் ஆண்........என்றார் ஒரு பிரபல ஜவுளி வியாபாரி.

இப்படி வகைவகையான பேச்சுக்கள் நடந்தன. தங்கப்பனின் முறையும் வந்தது. கூட்டத்திலே ஆரவாரம். அவனுக்கு வாழ்த்தொலிகள்.........! ஆனால் எப்பொழுதும் எழும் வழக்கமான புன்னகை அன்றுஇல்லை. அவன் வாடியமுகத்துடன் மேடைக்கு வந்தான்.

இது என் வீட்டுத்திருமணம். ஆம், இன்றுதான் உரிமையோடு என்வீடு என்கிறேன். என்வீட்டை மறந்து பல ஆண்டுகளாகி விட்டன. ஆனால் இன்று உணர்கிறேன். என்வீடு எனக்குப்பயிற்சிக் கூடம்—பயிற்சி பெறுமலே வெளியில்வந்து விட்டேன். சாதகம் செய்யாமலே பாகவதாராகி விட்டேன். அப்பியர்சமில்லாமலே அபிநயம் செய்யப் புறப்பட்டுவிட்டேன். பயிற்சியில்லாமலே நடிக்கும் மேடைக்கு நேரே வந்துவிட்டேன். ஆனால் என் திறமையால் சமாளிக்க முடிந்துவிட்டது.

என் வீடு இருட்டறையாக இருந்தபோதே வெளியேறினேன். இப்பொழுது கலைக்கோயிலாக இருக்கும்போது உள்ளே வருகிறேன். அங்குள்ள சிற்பங்கள் எல்லாம் தியாகவடிவங்கள்! இந்த வடிவங்களைச் செதுக்கிப் புதுக்கி மெருகிட்டவர் கண்ணப்பர் — என் பேசுந்தெய்வம்!

வாலிபர்கள் முதலில் தங்கள்வீட்டைத்திருத்தட்டும். பிறகு நாட்டைத்திருத்தக் கிளம்பும் நல்லதம்பிகளாகட்டும்! வீட்டிலே குப்பையை வைத்துக்கொண்டு தெருப்பெருக்கி என்ன செய்வது? இடிந்த வீட்டை வைத்துக்கொண்டு, சிதைந்த சாலையைச் செப்பனிடப் புறப்படலாமா?

பேசுவதைவிடச் செய்து காட்டுங்கள். பிறரைத் தூற்றுவதைவிடத் தங்களைத் திருத்திக் கொள்ளுங்கள்.

அருளப்பன் தங்கப்பனைத் தோற்கடித்துவிட்டான். அவன் தங்கப்பன் நினைத்ததை, சொன்னதை ஆயிரம்

மடங்கு அதிக தீவிரமாக விதவைத்திருமணம் செய்து கொண்டான். தங்கப்பன் பேசினான், பேசினான், இருமலே வர வழைத்திருக்கிறான், இவ்வளவுநாள் பாடுபட்டு! எங்கள் இருவரையும் விட கண்ணப்பர் வெற்றியடைந்து விட்டார். அவரும் அவரது மனைவியாரும் தியாகத்தால் வெற்றியை எட்டிப்பிடித்து விட்டார்கள்.

ஆம், அன்னமும் அருளப்பனும் நீண்டநாள் வாழ்ந்து பலருக்கு வழிகாட்டிகளாகட்டும்! வாழ்க மண மக்கள்.

தங்கப்பன் பேச்சிலே நெருப்பை எதிர்பார்த்தார்கள். அனலின் ஜ்வாலையில்லை, புனல்தான் வழிந்தோடியது! எல்லோரும் அவன் பேச்சைக்கேட்டுத் திகைத்து விட்டனர். ஒரு பெரும் போச்சாளன் தான் தோற்று விட்ட தாகக்கூறி தோல்விவிருத்தம் பாடக்கேட்பதா? அவர்களால் நம்பமுடியவில்லை.

பிறகு இப்போது எமிலி பேசுவார் என்று அறிவிக்கப்பட்டதும் அங்கங்கே பரபரப்பு! தூரத்திலிருந்தவர்கள் நெருங்கி வந்தார்கள். ஆம், அவர்களின் ஆவல் எல்லை மீறிவிட்டது. எமிலி என்பவர் யார்? அவர் எங்கிருக்கிறார், என்ன செய்கிறார், எப்படியிருப்பார்? கிழவரா, குமரரா? ஆணா, பெண்ணா?......இப்படிப் பலவிதமாகச் சந்தேகங்கள் எழுந்த வண்ணமிருந்தன? ஆனால் எமிலியைக் காணவில்லை. எமிலி எங்கே? இன்னும் வரவில்லையா? எமிலி பேசுவார் என்று அறிவித்த கண்ணப்பரே நிற்கிறாரே! ஏன்?

"தோழர்களே, பெரியோர்களே, அமைதி வேண்டும்?"

"எமிலி எங்கே?" கூட்டத்தின் ஏகோபித்த குரல்.

"எமிலி இருக்கிறார்" அமைதியான பதில்

"எங்கே?" மீண்டும் பெருங்குரல்

"இதோ உங்கள் முன்னால் நிற்கிறார். பேசிக்கொண்டிருக்கிறார்"

ஆ, கண்ணப்பர்தான் எமிலி.........

ஒரே குழப்பம், இரைச்சல்!

தங்கப்பன் திடுக்கிட்டான். அப்படியே தன் அண்ணனைத் தாவித்தழுவிக் கொள்ளவேண்டும் என்று துடித்தான். அவ்வளவு மகிழ்ச்சி! அருளப்பன் தன்னையும் தனது நண்பர் எமிலி என்று கூறி ஏமாற்றி விட்டாரே என்று எண்ணினான்.

ஆம், கண்ணப்பர்தான் எமிலி, இதுவரை மறைந்திருந்தேன். இனி வெளிவரத்தயக்கமில்லை. காரணம், நிலைமைக்கேற்றபடி செய்வதுதான் தியாகம். ஆசிரியப் பொறுப்பிலிருக்கும் பொழுது மாணவர்களிடம் புரட்சிக் கருத்துக்களைப் புகுத்தினேன். என்நிலைமையில் அரசியல் விவகாரங்களில் ஈடுபடக்கூடாது. ஆகவே புனைபெயர் ஒன்றைத் துணைக்கிழுத்தேன். அம்முயற்சிவெற்றி பெற்றுவிட்டது. நான் இனி ஆசிரியனில்லை. இனிப் படங்களுக்கு நடிப்பாசிரியர்—டைரக்டர்—இரண்டொரு தினங்களுக்கு முன்னால்தான் ஒப்பந்தம் முடிந்தது!

தங்கப்பன் கூறியது முழுவதும் உண்மையில்லை. அவனது பேச்சால்தர்ன் என்க்கு இந்தப்போக்கு ஏற்பட்டது. அவன் பேச்சால் பயனில்லைஎன்று சொன்னபோது பதைதத்து விட்டேன். அவனது பேச்சுத்தான் என்னைத்திருத்தியது என்று உங்களுக்குத் துணிவாகக்கூறுகிறேன். ஆகவே தங்கப்பனை அவன்போகும் பாதையிலிருந்து திரும்ப அழைத்துக்கொள்ளப் போவதில்லை. ஆனால் அவன்நாளைமுதல் ஒரு தினசரிப் பத்திரிகையின் ஆசிரியன். ஆம் 'எரிமலை' என்ற நாடகத்தை சினிமா படமாக்க விற்றதில் எனக்குக்கிடைத்தது ஐம்பதினாயிரம்! அதைக்கொண்டு ஏற்படுத்தப்பட்டுள்ள பதிப்பகம் விரைவில் தன்வேலையைத் தொடங்கும்!

எல்லோரும் அருளப்பன் அன்னமாக மாறிவிட்டால் நமது தியாகம் இன்ப வெள்ளத்தால் நிறைந்துவிடும்! பெண்ணின் பெருமை சிறக்கும், நாட்டுமதிப்பு உயரும். மணமக்கள் வாழ்க!''

திருமணப் பாராட்டிலே சொந்தக் கதையெல்லாம் சொல்லிவிட்டார் கண்ணப்பர். பிறகு அருளப்பன் எழுந்தான், வந்திருந்த அனைவருக்கும் நன்றிகூறினான். திருமணப்பாராட்டு இனிது முடிந்தது. அன்னத்தின் மகிழ்ச்சிக்கு அளவில்லை. தனது ஓரக்கண்ணால் அருளப்பனை அள்ளி விழுங்கினாள். அவன்மட்டும் விட்டானா? பழிக்குப்பழி வாங்கியேவிட்டான்! கூட்டம் கலைந்தது. முக்கியமானவர்கள் மட்டும் நின்றுகொண்டிருந்தனர். தங்கப்பன்மட்டும் யாரையோ தேடிக்கொண்டிருந்தான். தாமரைக் கண்ணியை எங்குதேடியும் கிடைக்கவில்லை!

பிறகு அருளப்பன் எல்லோரையும் அழைத்துக்கொண்டு போனான். வீட்டுமுற்றத்தில் போடப்பட்டிருந்த பிரம்பு நாற்காலியில் அமர்ந்தனர். அப்பொழுது தான் கன்னி அங்குவந்தாள். தங்கப்பன் திகைத்தான்.

''இந்த அம்மையார்தான் அன்னத்தின் சகோதரி மாதிரி—பெயர் கன்னி. இங்குள்ள பெண்கள் உயர் நிலைப் பள்ளியின் தலைமையாசிரியை''

பிறகு அருளப்பன் சிரித்தான்.

''இவர்கள் தமிழர் கல்லூரியில் படித்தவர்தானம். உங்களுக்குத் தெரியுமே,அண்ணா;''

''ஆம், தெரியும்'' என்றார் கண்ணப்பர்.

''அங்கு இவர் ஒரு மாணவரைக் காதலித்தாராம். மிகவும் நெருங்கிப் பழகினாராம். இருவரும் தங்கள் படிப்பு முடிந்ததும் எந்த எதிர்ப்பு வந்தாலும் மணந்து கொள்வதென்று முடிவுசெய்துகொண்டார்களாம். ஆனால் இவரின் காதலர் காதகராகி விட்டாராம்!''

"ஏனோ?" என்ருன் ஆவலோடு தங்கப்பன்.

"இவரது காதலர் பெரிய அரசியல் வாதியாம். ஆனால் திடீரென்று கல்லூரியை விட்டு நீக்கிவிட்டார்களாம். அவர் ஊரரிடம் தியாகிப் பட்டம் வாங்க உரிமையுள்ளவரிடம் துரோகி பட்டம் வாங்கி விட்டாராம்"

"இது நடந்தது எப்போது?"

"எல்லாம் சமீபத்தில் தான்"

கன்னி குறுக்கிட்டாள். வீண்கதையைப் பேசிப் பொழுதுபோக்க வேண்டாமென்றுபொய்க் கோபம்காட்டினுள்! தங்கப்பனுக்கு இப்பொழுது கொஞ்சம் விளக்கம் ஏற்பட்டது! இவர்களெல்லாம் சேர்ந்து பேசிக்கொண்டு ஒரு நாடகமாடுகிருர்கள் என்று தெரிந்தது. கன்னி என்பது தாமரைக்கண்ணி தான்! வேண்டுமென்றே பொய்ப்பெயர் கூறுகிருர்கள். ஆம், அவள் உருவம் அப்படியே இருக்கிறது! கண்ணடி மாட்டி தங்கப்பன் கண்களை மறைக்க முடியுமா? இருக்கட்டும். தங்கப்பன் இவர்களுக்குமேல் பலே ஆளாயிற்றே! ஆகவே மேலும் கேள்விகளைக்கேட்டான்.

"அந்தத் துரோகியின் பெயர்......?"

"ஊரைச் சொன்னலும், பேரைச்சொல்லாதே" என்று சிரித்தாள் கன்னி.

"ஆமாம்......" என்ருன் அருளப்பன்குறும்பாக.

"அதுகிடக்கட்டும் — நாளை உங்கள் சொற்பொழிவு எங்கள் பள்ளியாண்டு இறுதி விழாவில்."

"ஆமாம், நான் தான் வருவதாகக் கடிதம் எழுதியிருக்கிறேனே!"

"தலைமை வகிப்பவர் யார் தெரியுமா?"

"பிரபல எழுத்தாளர் எமிலி"

"என்ன?" என்றார் கண்ணப்பர்.

"ஆமாம், உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்"

"அண்ணன் தலைமை வகித்துத் தம்பி பேசுவதா..."

"அத்தோடு ஏன் நிறுத்துகிறீர்கள். மைத்துனர் கேட்க, மாமன் மாமி வாழ்த்த......என்று சேர்த்துக் கொள்ளுங்கள்!"

தங்கப்பனுக்கு அவர்கள் பேசுவன அத்தனையும் புதிராகவே தென்பட்டன. புரியாவிட்டால், தெரியாவிட்டால் சிரித்து மழுப்பிவிடல் என்ற பெரிய மனிதர்களின் தத்துவப்படி நடந்து கொண்டான். ஆனால் அவனுக்குக் கொஞ்சம் புரியத்தான் செய்தது! தாமரைக் கண்ணி விருந்திலே சந்திப்பதாகச் சொல்லி ஏமாற்றிவிட்டாள். ஒரு வேளை கன்னிதான் அவளாக இருந்து இப்பொழுது சொன்ன கதையும் உண்மையாக இருந்தால் தங்கப்பன் தங்கமாகி விடுவான் அல்லவா?

இழந்த காதல் கைகூடுவது கடலில் மூழ்கிய கப்பல் கரை சேர்வதைப் போல! முறிந்த மணம் வெற்றி பெறுவது இடிந்த கோட்டை மீண்டும் எழுப்பப்படுவதுபோல! தாமரைக்கண்ணி கிடைத்துவிட்டால் தங்கப்பன்வெற்றி வீரன்தான். ஆம், அவனது எண்ணம் ஈடேறத்தான் போகிறது!

"நான் பேசுவதானால் ஒரு வேண்டுகோள்"

"என்ன?"

"முதலில் தங்கள் மூக்குக் கண்ணாடி வேண்டும்!"

எல்லோரும் கொல்லென்று சிரித்து விட்டார்கள். கண்ணப்பரும் கண்ணம்மாவும் சிரித்துக் கொண்டே எழுந்து சென்றுவிட்டனர். தங்கப்பனின் மடியிலிருந்த சாந்தாவும் பெற்றோரைப் பின்தொடர்ந்து விட்டாள். கண்ணப்பரின் பெற்றோர்கள் முன்னரே தூங்கப்போய் விட்டனர்.

"அண்ணு, நீங்கள் பேசிக்கொண்டிருங்கள். நான்வரு கிறேன்"

அருளப்பனும் அன்னமும் சென்றனர்.

தனித்து விடப்பட்டனர் கன்னியும் தங்கப்பனும்.

"உங்களுக்குக் கண்ணுடிதானே வேண்டும்!"

"ஆமாம்"

கண்ணுடியைக் கழற்றினுள்.

"தாமரை......" ஆயிரம் பெருமூச்சுகளின் கூட்டுச் சேர்க்கை!

"தங்கம்......" பலநாள் ஏக்கத்தின் எதிரொலி

தங்கப்பன் தாமரையைத் தழுவிக்கொண்டான். அனல்போல் எரிந்து கொண்டிருந்த அவளது கன்னங் களை மெதுவாக வருடினுன். தாமரையின் முகத்திலே தங்க ஒளி வீசிற்று!

கண்ணப்பர் கனைத்துக்கொண்டே வந்தார்.

"நம் தினசரிக்குப் பெயர் தெரியுமா?"

"தாமரை" என்ருன் தங்கப்பன்

"தங்கம்" என்ருள் தாமரை.

"இல்லை" என்ருர் அழுத்தமாக

"பின்னர்?" என்றுகேட்டனர் இருவரும் ஒரே நேரத்தில்.

"தங்கத் தாமரை" என்ருர் சிரித்துக்கொண்டு! விடையைச் சொல்லிக்கொண்டே வெளியேறி விட்டார்.